# புலவர் பெருமை

THE MADURA TAMIL SANGAM

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்

வித்துவான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள்

இயற்றியது

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

6, கோண்டி செட்டித் தெரு, சென்னை-1.

பதிப்புரிமை] 1949 [விலை ரூ. 1-12-0

The Jupiter Press Ltd., Madras.

# முன்னுரை

பழங்காலத்துத் தமிழ் நாட்டில் வாழ்ந்த புலவருடைய இயல்புகளையும் மற்றவருடைய இயல்புகளையும் நன்கு உணர்வதற்குப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையாகிய சங்க நூல்களே பேருதவி புரிகின்றன. அவற்றுள்ளும் எட்டுத்தொகையிலுள்ள புறநானூறு, பதிற்றுப்பத்து என்னும் நூல்களே பேருதவி புரிகின்றன 'பதிற்றுப் பத்து' என்பது சேர வேந்தர் பதின்மருடைய கொடை, வீரம், ஆட்சி முறை முதலிய சிறப்புக்களை விரிவாகக் கூறுவது அந்த நூலின் முதலுங்கடையும் இப்போது கிடையாமையால், இன்று சேரர் எண்மருடைய சிறப்புகளையே அறிகின்றோம்

'புறநானூறு' என்பது, முடிகெழு வேந்தர் மூவர், குறுநிலமன்னர், வள்ளல்கள், வீரர்கள் முதலிய பலரைப் பற்றி, பல புலவர், பல அமயங்களில் பல நிகழ்ச்சிகளை அமைத்துப் பாடிய நானூறு பாடல்களின் தொகுப்பாகும் இந்நூலால் அக்காலத்து மக்களுடைய உயரிய எண்ணங்கள, செயல்கள், மனநிலை முதலியன நன்கு உணரப்படுகின்றன. இந்நூலால் அக்காலத்து வாழ்ந்த தமிழ் நலம் கனிந்த செஞ்சொற்புலவர் வாழ்க்கை நிலையைத் தெளிவாக உணரலாம. புலத்துறை முற்றிய அவ்வறிஞர், தாந்தாம் ஒவ்வொரு தொழிலைச் செய்து வாழ்தல், அரசர் முதலியவரை அடைந்து பரிசில் பெற்று வாழ்தல் ஆகிய இரு வழிகளில் தம் வாழ்க்கையை நடத்தியுள்ளனர். நெல் முதலியன விற்றல், ஆடை விற்றல், உழவுத்தொழில் புரிதல, மருத்துவம் புரிதல், அரசியற்றுறைகளில் அமர்ந்து

அலுவல் புரிதல், ஆசிரியத்தொழில் புரிதல் முதலிய பல தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்தனர் சிலர். பரிசில் வாழ்க்கையினராகவே வாழ்ந்தனர் பலர்.

பரிசில் வாழ்க்கையுடையார் பரிசில பெறுதல் ஒன்றே குறிக்கோளாகக்கொண்டு, அரசர் முதலியவர்பாற் சென்று, அவரை மகிழ்விததறகாக அவர்பால் இல்லாத வற்றை உள்ளனவாக, அவர் செய்யாதனவற்றைச் செய்தன வாகப் புனைநதுரைத்துப் பொருள் பெற நினைக்கவிலலை, புலனழுககற்ற உள்ளத்தூய்மையுடையராய், பொய்யா நாவினையுடையராய், உள்ளனவற்றைச் சிறப்புறக் கூறிப பரிசில் பெற்று வாழ்நதனர். அரசா முதலியவரும தம்மை அடைநத புலவருக்கு வேண்டும் பரிசில கொடுத துப் போற்றினர்; ஒரு முறை இரு முறையன்றிப் பல முறை செல்லினும முதன்முறை சென்றாங்குப் பரிசில கொடுததுப் போறறினா ஒரோவழி அவ்வரசர் முதலிய வர் தமமை நன்கு மதிததுப பரிசில் கொடுக்கவிலலை வனின், புலவா தம பெருமைக்குக் குற்றம வாராதபடி, அவ்வரசர் கொடுககும் பரிசிலை வேண்டாது, அவரையும இகழ்ந்துரைத்துச் செல்வாராயினர்.

புலவர் பரிசிலாகப பெற்ற பெருமபொருளைத தம இலலங்கொணடு சோததது, நெடுநாளளவும வைத்துக் கொணடு, சிறிது சிறிதாகச் செலவிட்டு வாழ எண்ணங் கொண்டவா அலலா. பெற்ற பொருளைக்கொண்டு தாமும் நன்கு உண்டு, வறுமையால வாடும சுற்றத்தாாக்கும் பிறாக கும கொடுத்து, பொருள தீாந்த பின், காடும மலையும வருநதிக்கடநது பரிசில் கொடுப்பாரை நாடிச செலலும இயல்பினராய் வாழ்நதனர். அதனால், புலவர் வறுமை

வாழ்க்கையினராய் இருந்தனரேயன்றிச் செல்வவாழ்க்கையினராய் இருந்திலர்.

பரிசில் வாழ்க்கை நடாத்திய புலவர், பரிசில் பெறுதல் ஒன்றேயுடைமையாது, அரசர் முதலாயினார்பாற் காணப்படும் குறைகளை அவ்வப்போது நேர் நின்று எடுத்துரைத்து அவர்களைத் திருத்த முயன்றனர். செல்வமும் வலிமையும் அதிகாரமும் ஒருங்கமைந்த மன்னர்பால் ஒரோவழிக் குற்றம் நிகழ்தல் இயல்பே. நெறி கடந்து செல்லும் வளமிக்க பெருங்களிற்றைப் பாகன் அடக்கி நெறியறிந்து செலுத்துதல் போல, வலிமை, செல்வம், அதிகாரம் இவற்றால் தருக்கி, ஒரோவழி அரசியல் நெறி கடந்து செல்லும் அரசர்களைப் புலவர்கள் தக்க அறவுரைகளை எடுத்துரைத்து, அவர்கள் செல்லும் வழியினின்றும் திருப்பி நன்னெறி செலுத்த முயன்றுள்ளார்கள். அரசர்கள் தம்மிடத்து வைத்த நன்மதிப்பினைப் பயன்படுத்தி, அவ்வாறு செய்ய முயன்றனர் புலவர்; போர்க்களங்களிலும் அறவுரை கூறிப் போர்களைத் தடுத்தனர். புலவர் மேற்கொண்ட அச்செயல்களால் மக்கள் மிக்க நன்மை அடைந்தார்கள்.

அவ்வாறு புலவர் மேற்கொண்ட சில செயல்களும், அரசர்களோடு ஒற்றுமையுற்று வாழ்ந்த முறையும் எண்டெடுத்துக் கூறப்படுகின்றன. அவ்வாற்றான் பழந்தமிழ்ப் புலவரது பெருமை வெளிப்படுதலின், இந்நூல் 'புலவர் பெருமை' என்னும் பெயர் தாங்கியது.

ஆசிரியன்

# பொருளடக்கம்


பொருள் — பக்கம்

முன்னுரை .... iii

## I. போர் விலக்கல் :

1. கோவூர்கிழார் .... 1
2. ஆலத்தூர் கிழார் .... 10
3. புல்லாற்றூர் எயிற்றியனார் .... 14
4. ஔவையாரும் அரிசில்கிழாரும் .... 22
5. கபிலர் .... 50

## II. மன்னுயிர் போற்றல் :

1. மலையமான் மக்களைக் கோவூர்கிழார் காத்தல் 60
2. புலவன் இளந்தத்தனைக் கோவூர்கிழார் காத்தல் .... 65
3. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியைக் காத்தல் .... 71

## III. பிழையொழித்தல் :

1. கபிலர் முதலியோர் பேகன் பிழை ஒழுக்கத்தை ஒழித்தல் .... 76
2. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் ஈகையில்லாத சோழன் நலங்கிள்ளியை ஈகையுடையோனாக்குதல் .... 85

பொருள் பக்கம்

3. வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்கு அரசியல் முறை கூறுதல் .... 94
4. பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அரசியல் முறை கூறுதல் .... 102

## IV. நட்பின் சிறப்பு:

1. கபிலர் பாரியினிடத்துக்கொண்ட நட்பின் சிறப்பு .... 106
2. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார், பொத்தியார் இவர்கள் நட்பு .... 115
3. சேரமான் பெருஞ்சேரலாதனும் அறிஞர் நட்பும் .... 121

## V. பெருமித வாழ்வு:

1. பிற்காலப் புலவர் நிலை .... 123
2. பரிசில் வாழ்க்கை பொருந்துமாறு .... 126
3. முற்காலப் புலவர் நிலையும் வள்ளல்கள் நிலையும் .... 131
4. பரிசில் மறுத்தல் முதலியன .... 137

# புலவர் பெருமை

## I. போர் விலக்கல்

### 1. கோவூர் கிழார்

செந்தமிழ் நலங்கனிந்த சங்கச் சான்றோர்களிற் கோவூர் கிழார் என்பவர் ஒருவர். இவர் கோவூர் என்ற ஊரினர், வேளாள மரபினர் என்பன மட்டுமே இவர் பெயராலறியப்படுகின்றன. இவர் பாடியன வாகத் தொகை நூல்களிற்பல பாடல்கள் காணப் படுகின்றன. இவர், மக்கள் துன்புறுவதைக் காணப் பொறாத இளகிய மனமுடையவர்; வீர மேம் பாட்டைக் கருதும் இயல்புமுடையவர்.

சோழன் நலங்கிள்ளியென்பவனும் சோழன் நெடுங்கிள்ளியென்பவனும் தாயத்தார்கள். சோழன் நலங்கிள்ளி காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அர சாண்டான். சோழன் நெடுங்கிள்ளி உறையூரி லிருந்து அரசாண்டான்.

காவிரிப்பூம்பட்டினமும் உறையூரும் சோழ நாட்டின் தலை நகரங்கள். காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டின் கடற்கரைத் துறைமுகமாய் உள்ள தலை நகரம். உறையூர் சோழநாட்டின் உள் நாட்டுத் தலை நகரம். இவ்விரண்டும் சங்கநூல்களாற் கூறப்

பட்ட சிறப்புடையனவாயினும், இவற்றுள் உறையூர் மிக்க தொன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகக் காணப் படுகின்றது. புறநானூற்றில் உறையூரின் பெயர் மிகுதியாக வழங்கப்பட்டுள்ளது. அன்றியும், சிறு பாணற்றுப்படையிலும் அகநானூற்றிலும் சேரர் பாண்டியர் தலை நகரங்களாகிய வஞ்சி, மதுரை இவற்றோடு ஒப்ப உறையூரே கூறப்பட்டுள்ளது.

> “மாட மதுரையும் பீடா ருறந்தையும்
> கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்”

எனச் சிலப்பதிகாரத்திற் காவிரிப்பூம்பட்டினமும் சேர்த்து எண்ணப்பட்டுள்ளதேயெனின், சிலப்பதிகார காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் அரசு விளங்கு தலைநகரமாய்த் திகழ்ந்ததாலும், சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சியே காவிரிப்பூம்பட்டினத்தில் தொடங்கிய தாதலாலும் காவிரிப்பூம்பட்டினமும் ஆண்டுச் சேர்த் தெண்ணப்பட்டது. உறையூர் ஆண்டுக் கூறப்பட வேண்டிய சிறப்பில்லாதிருக்கவும், அதன் தொன்மை கருதியே ஆண்டு அதுவும் கூறப்பட்டதாகும்.

சோழன் நலங்கிள்ளி இங்ஙனம் சோழ நாட்டின் தொன்மை வாய்ந்த தலைநகராகிய உறையூரைத் தான் கைப்பற்றி ஆங்கிருந்து அரசாள விரும்பினன். அவன் எண்ணம் நிறைவேறுதற்குச் சோழன் நெடுங் கிள்ளி உடன்பட்டுத் தன் தலைநகராகிய உறையூரை நலங்கிள்ளிக்குக் கொடுத்தல் வேண்டும்; அன்றி நலங் கிள்ளியால் நெடுங்கிள்ளி வென்று ஒழிக்கப்படுதல் வேண்டும். நெடுங்கிள்ளி உறையூரைக் கொடுக்க

உடன்பட்டிலன். ஆகவே, நலங்கிள்ளி மற்றொரு வழியை மேற்கொண்டனன்: போரினால் உறையூரைக் கைப்பற்ற எண்ணினன். நலங்கிள்ளி மிக்க போர் வலிமையும் படைப் பெருமையுமுடையவன்; தன் படையோடு சென்று உறையூரை முற்றுகையிட்டனன். நெடுங்கிள்ளி, உடனே தானும் போர் மேற்கொண்டு புறப்படாமல், அரண் அடைத்துக் கொண்டு உள்ளிருந்தனன்; வேறு எவரையேனும் துணை வேண்டி அவர் வருகையை நினைந்தோ, வேறு எக்காரணத்தாலோ அங்ஙனம் உள்ளிருந்தனன். இம்முற்றுகையினால் உறையூர் வாழ்மக்கள் பெருந் துன்பத்திற்காளாயினார்கள்.

இந்நிலைமையில் புலவர் கோவூர் கிழார் ஆண்டெய்தினார்; முற்றுகையால் மக்கள் படுந்துன்பத்தைக் கண்ணுற்றனர்; இருவருக்கும் உள்ள பகைமையை ஒழித்து, முற்றுகையை அகற்றி, மக்கள் துன்பத்தையும் ஒழிக்க எண்ணினர்; முற்றுகையிட்டிருந்த நலங்கிள்ளிபாற்சென்று, சீரிய சில கருத்துக்களை அவன் மனங்கொள்ளுமாறு எடுத்துரைத்தனர்: “நலங்கிள்ளி, உன்னால் வளைக்கப்பட்டு உள்ளிருப்பவன் வேப்பமாலையணிந்த பாண்டியனல்லன்; பனம்பூமாலை அணிந்த சேரனுமல்லன்; உன்னைப்போல ஆத்திப் பூமாலை அணிந்தவனே; நீ பிறந்த சோழர் குடியிற்பிறந்தவனே. இப்போரில் நும்முள் யாரேனும் ஒருவர் தோற்றலின்றி இருவரும் வெற்றிபெறுதல் இயலாது. யாவர் தோற்பினும் பிறரால் பழிக்கப்படுவது சோழர்

குடியேயாகும். 'நாம் போரில் வென்றேம்; நம் பகைவன் தோற்றான்!' என்று நீ பெருமிதமாக எண்ணிக்கொள்ளலாம்; ஆனால், பிற மன்னர், 'சோழன் நலங்கிள்ளி வென்றான்; சோழன் நெடுங்கிள்ளி தோற்றான்,' என்று பிரித்துக் கூறார்; 'சோழன் ஒருவன் போரில் தோற்றான்!' என்றே கூறுவர்; அதனால், நின் குடியாகிய சோழர் குடி பழிப்படைதல் ஒருதலையன்றோ? ஆதலால், இப் போர் நும் குடிப்பெருமைக்கு ஏற்றதன்று; இப் போரைக் கைவிடுக,"* என்றெடுத்துக் கூறினர்.

அது கேட்ட நலங்கிள்ளி, புலவர் சொற்களை மறுக்க இயலாதவனாகிப் போரை நிறுத்தினான். உறையூர் மக்கள் துன்பம் நீங்கினார்கள். இரு திறத்துப் படைகளிலும் மக்களுள் பலர் சாவாமல் வாழ்வெய்தினர். யானைகள், குதிரைகள் பல அங்ஙனமே சாவாமல் வாழ்வெய்தின.

அக்காலத்தில் சேரரும் பாண்டியரும் சோழரும் அடிக்கடி ஒருவரோடொருவர் பகைமையுற்றுப் போர் புரிந்தனராதலின், அம்மூவருள் ஒருவர்க்கு ஏனையோர் பகைவராகக் கருதப்பட்டனர். அதனால், புலவர் கோவூர் கிழார் நலங்கிள்ளியை நோக்கி, "நின்னால் வளைக்கப்பட்டு உள்ளிருப்பவன் பாண்டியனுமல்லன்; சேரனுமல்லன்; அவர்களாயின், நீ போருக்கெழுந்து வளைத்துக்கொள்ளுதல் முறையாகலாம்," என்பது தோன்ற எடுத்துக் கூறுவா

*புறம். 45

ராயினர். இங்ஙனமன்றி, அரிதாக ஒரோவழி இம் மன்னர்கள் நட்புடையராய் விளங்கியவிடத்து, அத் தன்மை கண்டு புலவர்கள் மிகமிக மகிழ்ந்து, "இந் நட்பு இப்படியே நிலைத்து விளங்குவதாக!" என்று கூறி வாழ்த்தியுள்ளார்கள்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் நட்பினராய் ஓரிடத்துச் சேர்ந்திருந்தனர். இத் தோற்றத்தைக் கண்ட காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் மிக மகிழ்ந்து, அவ்விருவரையும் நோக்கி, "நீவிர் இங்ஙனமே நட்போடு வாழ்வீராக! வஞ்சகர் நும் செவிக்கும் நும் நெஞ்சுக்கும் இனிமையாகத் தோன்றும்படி பேசி நும்மைப் பிரிக்க முயல்வர். அவர் சொற்களை ஆராய்ந்து தெளிந்து, அவற்றைப் புறக்கணித்து, இங்ஙனமே நீடு வாழ்க!" என வாழ்த்தினர். சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஓரிடத்து நட்போடு ஒருங்கிருந்தனர். ஔவையார் இத்தோற்றத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு, "நீவிர் இங்ஙனமே ஒற்றுமையுடையீராய் நீடு வாழ்க!" என வாழ்த்தினர்.

சோழன் நலங்கிள்ளி முற்கூறியாங்குக் கோவூர் கிழாரிடத்துக் கண்ணோட்டமுடையவனாய் அவர் சொல்லை மறுக்க இயலாதவனாய்ப் போரை நிறுத்தி மீண்டானாயினும், தன் மனத்திருந்த பகையை ஒழித்

தானல்லன். ஆமூர் என்ற ஊரின்கண் சோழன் நெடுங்கிள்ளி சென்றிருந்த போது, நலங்கிள்ளி மீண்டும் படையோடு ஆண்டுச்சென்று, முற்றுகையிட்டனன். புலவர் கோவூர் கிழார் ஆண்டும் எய்தினர்; தளராமல் முன் முயற்சியை மீண்டும் மேற்கொண்டனர்.

இவ்விரண்டாம் முறையில் கோவூர் கிழார் சோழன் நலங்கிள்ளியை நோக்கி அறவுரை கூறினரல்லர்; முற்றுகையிடப்பட்டு உள்ளிருந்த நெடுங்கிள்ளியை நோக்கிக் கூறினர். முன்னொரு முறை நலங்கிள்ளிக்கு அறவுரை கூறினர். அவனும் ஏற்றுக்கொண்டு அப்பொழுதைக்குப் போரை நிறுத்தினனாதலின், மீண்டும் அவனுக்கே அறவுரை கூறப் புலவர் எண்ணங்கொண்டிலர் போலும்! நெடுங்கிள்ளிக்கு அறவுரை கூறிய புலவர், முன் நலங்கிள்ளிக்குக் கூறியதுபோல இன்சொற்களால் இனிய முறையிற்கூறுதலை விடுத்து, சில கடுஞ்சொற்களால் வன்மையான முறையில் அறவுரை கூறினர்.

"நெடுங்கிள்ளி, நின் பகைவன் போர் மேற்கொண்டு வந்து நிற்கவும், நீயும் போர்மேற்கொண்டு புறப்பட்டு அவனோடு போர் புரியாமல், அவனால் முற்றுகையிடப்பட்டு உள்ளிருத்தல் சிறிதும் தகாத செயலாகும். இச்செயலால் நின் படைகள் மிக்க துன்பம் அடைகின்றன. நகர மக்கள் வேண்டிய பொருள்கள் கிடைக்கப் பெறாமல் வாடுகின்றார்கள். இவை எல்லாவற்றையும் அறிந்தும் நீ மட்டும் இனிமையாய் உள்ளிருத்தல் பிறர் இகழத்தக்க செய

லாகும். 'போர் புரிந்தால், இரு பக்கத்திலும் வீரர்களும் யானைகளும் குதிரைகளும் மிகுதியாக இறத்தலாகுமே!' என்றெண்ணுவையாயின், உடனே மதில் வாயிலைத் திறந்து, 'இந்நகர் நினது,' என்று கூறி, அவன்பால் விட்டுவிடுக. அன்றி, வீரமே கருதும் எண்ணமுடையையாயின், உடனே போர்முரசு முழங்கப் போர்க்கோலம் புனைந்து வெளிப்பட்டுப் பகைவனோடு போர் புரிக. அறம் மறம் இரண்டினையும் எண்ணாமல், இங்ஙனம் உள்ளிருத்தல் நாணுதற்குரிய செயலாகும்,''* என்று கூறினர் கோவூர் கிழார்.

இரு வழிகளை எண்ணிப் புலவர் ஈண்டு நெடுங்கிள்ளியை நோக்கிக் கடுஞ்சொற்களால் அறவுரை கூறினர் என்பது நினைதற்குரியது : "நெடுங்கிள்ளி நம் சொற்கேட்டுப் புறப்பட்டுப் போர் புரிவானாயின், அதனால் நகர மக்கள் துன்பம் ஒழியும். அவ்வாறு நிகழினும் நிகழ்க. அன்றி, நலங்கிள்ளி இதனை உணர்ந்து, 'புலவர் முன்னொரு முறை நமக்கு அறவுரை கூறிப் போரை நிறுத்துவித்ததனால், மீண்டும் நம்மை நோக்கியே அறவுரை கூற மனம் கூசி, நம் பகைவனை நோக்கி இவ்வாறு வன்சொற் கூறுவாராயினர்,' என்றுணர்ந்து போரை நிறுத்துவானாயின், அதுவும் நன்றே. எவ்வாறாயினும், போர் ஒழிக. பலர் துன்பம் ஒழிக,'' என்று எண்ணிப் புலவர் இங்ஙனம் கூறினர் எனக் கொள்க.

ஈண்டு மற்றொன்றும் கருதுதற்குரியது : முதன் முறை நலங்கிள்ளி போர் மேற்கொண்டு வந்து

---

*புறம். 44

இட்ட முற்றுகை புலவர் முயற்சியால் தவிர்க்கப் பட்டவுடன், நலங்கிள்ளி மீண்டும் தன்மேற்படை யெடாதவாறு அதற்கேற்ற வழிகளை ஆராய்ந்து நெடுங்கிள்ளி செய்திருத்தல் வேண்டும்; எவ்வகையி லேனும் நலங்கிள்ளியை நட்பினன் ஆக்கிக்கொள்ள முயன்றிருத்தல் வேண்டும்; இன்றேல், தன் வலிமை யையும் தன் படை வலிமையையும் விரைவாகப் பெருக்கிக்கொள்ளுதல் வேண்டும்; அதனோடு தனக் குப் போர்த் துணையாகுமாறு வேற்றரசர் எவரை யேனும் தனக்கு நட்பாக்கிக்கொள்ளுதல் வேண் டும். இவ்வாறு நெடுங்கிள்ளி ஒன்றும் செய்திலன். இதனால் புலவர் உள்ளத்தில் சிறிது வெறுப்புத் தோன்றியிருத்தல் கூடும். அவ்வெறுப்பினாலும் புலவர் வன்சொற்கூறுவாராயினர் எனக் கொள்க.

கோவூர் கிழார் எண்ணியவாறே அவர் நெடுங் கிள்ளியை நோக்கி வன்சொற்களால் அறவுரை கூறி யதையுணர்ந்த நலங்கிள்ளி, தன்னை நோக்கி மீண் டும் அறவுரை கூற விரும்பாமல் நெடுங்கிள்ளியை நோக்கிக் கூறினர் என அறிந்தான். போர் நிறுத்து தற்குரியவன் முற்றுகையிட்டுள்ள தானேயாதலின், நெடுங்கிள்ளியை நோக்கிப் புலவர் கூறிய அறவுரை கள் தனக்கும் உரியனவேயாகும் என்று நலங் கிள்ளி உய்த்துணர்ந்து, இரண்டாம் முறையும் போரை நிறுத்தினன்.

இரு முறை புலவர் முயற்சியால் போர் நிறுத் தப்பட்டதாயினும், உள்ளப் பகைமை மட்டும் ஒழிந்

திலது. நெடுங்கிள்ளி அதனை ஒழித்தற்கேற்ற முயற்சியை மேற்கொண்டிலன் போலும்! அன்றி, நலங்கிள்ளி நெடுங்கிள்ளியோடு ஒன்றி வாழ விருப்பங் கொண்டிலன் போலும்! புறநானூற்றுப்பாடல் ஒன்றின் கீழ்க்குறிப்பில் நெடுங்கிள்ளி, 'காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். அதனால், நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் காரியாறு என்னுமிடத்தில் மீண்டும் போர் மூண்டதென்றும், அப்போரில் நெடுங்கிள்ளி இறந்தான் என்றும் அப்பாடற்குறிப்புக் கூறுகின்றது. காரியாறு என்னுமிடத்தில் போர் தொடங்கிய போது அப்போரைத் தடுக்கக் கோவூர் கிழார் போன்ற புலவர் ஒருவரும் ஆண்டில்லை போலும்!

நெடுங்கிள்ளி இறந்த பின் நலங்கிள்ளி உறையூரிலிருந்து அரசாளத் தொடங்கினன். புறநானூற்றில் இப்போர் நிகழ்ச்சியைக் குறிக்கும் பாடல்களுக்குப் பின் உள்ள பாடல் ஒன்றில் நலங்கிள்ளி,

> **" உறந்தை யோனே குரிசில்**
> **பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே."***

என்று கூறப்பட்டுள்ளான். இதனாலும், கோவூர் கிழார் நெடுங்கிள்ளியை நோக்கி, " அறவையாயின் நினதெனத் திறத்தி," என்று கூறியதனாலும், நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்குமிடையே நிகழ்ந்த போர் உறையூரைப்பற்றியது என்பது புலனாகின்றது.

---

*புறம். 68

# 2. ஆலத்தூர் கிழார்

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் சிறந்த வீரன்; பெருங்கொடையாளன். இவன் வீரத்தையும் கொடையையும் புலவர் நன்கு புகழ்ந்து பாடியுள்ளனர். இவன் புலவரிடத்து மிக்க அன்பும் கண்ணேட்டமும் உடையவன்; உறையூரைத் தலை நகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டவன். இவன் இயற்பெயர், 'கிள்ளி வளவன்' என்பது. குளமுற்றம் என்ற ஊருக்கு ஏதோ காரியமாகச் சென்றிருந்த போது, அவ்விடத்திலேயே இறந்து விட்டான். அதனல், அந்நிகழ்ச்சியை அடையாள மாக வைத்து, 'குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்' என்று பின்னுள்ளார் வழங்கலாயினர். 'சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன்' என்ற பெயரோடு மற்றொருவன் உளன். இருவர் பெயரும் 'கிள்ளி வளவன்' என்று இருந்தமையால், இங்ஙனம் வேறுபாடு தோன்ற வழங்கினர் போலும்!

கிள்ளி வளவன் அக்காலத்திற் கருவூரிலிருந்து அரசாண்ட சேரமன்னன் ஒருவன்பாற் பகைமை உடையவனுயினன். அப்பகைமையினுற் கிள்ளி வளவன் படையோடு சென்று, கருவூரை முற்றுகையிட்டான். சேரன் புறப்பட்டுப் போர் புரிய இயலாதவனுய் அரணடைத்துக்கொண்டு உள்ளிருந்தான். இந்நிலையில் ஆலத்தூர் கிழார் என்னும் புலவர் ஆண்டெய்தினர். அவர் கருவூர் மக்கள் துன்புறுவதைக்

கண்டு மனம் பொறாதவராய், அப்போரைத் தவிர்க்க எண்ணினர்.

நலங்கிள்ளி முதற்கண் முற்றுகையிட்டிருந்த போது கோவூர் கிழார் கூறியவாறு ஈண்டுக் கூறுதற்கு இயைபில்லை. ஆண்டு நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் சோழர் மரபாகிய ஒரே மரபினர். ஆதலால், ஒரு குடியிற்பிறந்தார் தம்முட்பகைமை கொண்டு போர் புரிதல் நன்றன்று என்னும் கருத்தை நலங்கிள்ளி மனங்கொள்ளக் கூறிப் போரைத் தவிர்த்தார் கோவூர் கிழார். ஈண்டுக் கிள்ளி வளவனும் சேரனும் வேறு வேறு மரபினர். ஆதலால், அம்முறையிற் கூறுதல் பொருத்தமாகாது. கோவூர் கிழார் இரண்டாம் முறை கூறியது போலச் சேரனை நோக்கி, "நீ உடனே மதிலைத் திறந்து நகரத்தைக் கிள்ளி வளவனிடம் விடுக; அன்றேல், போர் புரிக," என்று கூறுதலும் தகாது. போர் புரிதற்காற்றாமல் உள்ளிருப்பவனை நோக்கி அவ்வாறு கூறுவது, முன்னரே துன்புற்றிருக்கும் அவன் மனம் மேலும் துன்புறுதற்கேதுவாகும். ஆதலால், அம்முறை தகாது. 'கோவூர் கிழார் நெடுங்கிள்ளியை நோக்கி அவ்வாறு கூறினரே?' எனின், கோவூர் கிழார் முதலில் நலங்கிள்ளியை நோக்கிக் கூறிப் போரைத் தவிர்த்தனராதலின், மீண்டும் அவனை நோக்கிக் கூறுதல் அழகாகாதென்று எண்ணி, வேறு வழியில்லாமல், உள்ளிருந்த நெடுங்கிள்ளிக்குக் கூறுவார்போலக் கூறி, அவ்வாறு

தாம் கூறுவதன் கருத்தை நலங்கிள்ளி தானே உணர்ந்து போரைக் கைவிடுமாறு செய்ய முயன்றனர். ஆலத்தூர் கிழார் முதலிற்கூறுகின்ற போதே உள்ளிருப்பவன் மனம் வருந்தக் கூறுதல் அழகாகாது. ஆகவே, புலவர் வேறொரு வழியை மேற்கொண்டுள்ளனர்.

ஒரு வீரன் தனக்கு நிகரான மற்றொரு வீரனோடு போர் புரிவதே அவனுடைய வீரத்திற்குச் சிறப்பாகும்; தனக்கு நிகர் அல்லாதவனோடு போர் புரிவது, அவன் வீரத்திற்கு இழுக்கேயாகும். இது போர்வீரர் யாவரும் கருதும் ஒரு முறையாகும். இம் முறையிலே கிள்ளி வளவனை நோக்கி ஆலத்தூர் கிழார் கூறுவாராயினர் :

“கிள்ளி வளவ, நீ இந்நகரை (கருவூரை) முற்றுகையிட்டுள்ளனை. நின் வீரர் இந்த ஆன்பொருநையாற்றங்கரைச் சோலையிலுள்ள மரங்களை வெட்டித் தள்ளுகின்றனர். ஆன்பொருநையாறு நகருக்கு மிக்க அண்மையிலுள்ளது. இந்நகரிலுள்ள இளமகளிர் ஆற்று மணல் மேடுகளில் வந்திருந்து கழற்காயாடுவர். அவ்வளவு அண்மையிலுள்ளது ஆன்பொருநை. இதன் கரையிலுள்ள மரங்களை நின் வீரர் வெட்டும் ஓசை உள்ளிருக்கும் சேரன் செவிக்கு நன்கு எட்டும். அங்ஙனம் அவ்வோசையைக் கேட்டும் அவ்வரசன் வெளிப்போந்து போர் புரியாது உள்ளிருக்கின்றான். அங்ஙனம் உள்ளிருப்பானோடு போர் புரிய நீ துணிந்து நிற்பது நின்

வீரத்திற்குச் சிறப்பாகாது; பழியேயாகும். நின்னுடைய இச்செயல் பிற வீரர் அறியின், நாணுதற்குரியதாகுமேயன்றிப் புகழ்தற்குரியதாகாது. என் சொற்கொண்டு நீ இப்போரைக் கைவிடினும் விடுக; அன்றிப் போர் புரிந்து உள்ளிருக்கும் அரசனைக் கொன்றாலும் கொல்க. ஆயினும், நின் செயலால் நினக்கு வரும் உயர்வு தாழ்வுகளை மட்டும் எண்ணிப் பார்க்க,''* என்று ஆலத்தூர் கிழார் இனிமையாகக் கிள்ளி வளவன் மனங் கொள்ளுமாறு எடுத்துக் கூறினர். கிள்ளி வளவனும் சேரனைக் கொல்லாமல் விட மனமில்லாதவனாயினும், புலவர் சொல்லுக்காக அப்போது முற்றுகையை விட்டுச் சென்றனன்.

கிள்ளி வளவன் புலவர் சொல்லுக்காக அப்போது போரைக் கைவிட்டானாயினும், சேரனிடத்துக் கொண்ட பகைமை ஒழியப் பெற்றானில்லை. அதற்கேற்ற செயல்களைச் சேரன் செய்திலன். கிள்ளி வளவன் மீண்டும் அச்சேரன் நகரை முற்றுகையிட்டு, அவனையும் கொன்று, அந்நகரையும் அழித்தான் என்பதை நப்பசலையார் பாடல்களால் அறிகின்றோம். இங்குக் குறிப்பிடப்பட்ட சேரன் இன்னான் என்றறியக்கூடவில்லை. அவன் ஒரு பெரிய அரசனாக மட்டும் காணப்படுகின்றான்.

---

*புறம். 36.

## 3. புல்லாற்றூர் எயிற்றியனுர்

சோழ வேந்தர்களுள் கோப்பெருஞ்சோழன் என்பான் மிகச்சிறந்த வேந்தனுய் விளங்கினுன். அவன் ஆட்சித் திறன், வீரம், கொடை, நற்குணம் இவற்ருல் சிறந்து விளங்கினுன்; இவற்றுள்ளும் நட்பென்னும் நற்குணத்தினுல் மிக மேம்பட்டு விளங்கினுன். அதனுல், அக்காலத்து விளங்கிய பிசிராந்தையார், பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனுர் முதலான பெரும்புலவர் பலர், மன்னன்பாற் பேரன்புடையராய், அவனைத் தம் உயிர் போலப் போற்றினர். மன்னனும் அப்புலவர்களை அங்ஙனமே போற்றி வந்தான்; புலவரோடு அளவளாவி மகிழ்வதைப் பேரின்பமாகக் கருதினுன்; சிறந்த தமிழ்ப் புலமையும் கவி பாடும் ஆற்றலுமுடையவனுய் விளங்கினுன்.

சிறந்த நட்பிற்கே எடுத்துக்காட்டாய் விளங்கிய கோப்பெருஞ்சோழனுக்குப் புதல்வரிருவரிருந்தனர். அவ்விருவரும் வீரத்தாற்சிறந்து விளங்கினர்; ஆனுல், அறிவினுற்சிறந்து விளங்கினுரில்லை. எக்காரணத்தாலோ, அவ்விருவரும், புலவர்கட்கு உயிராயும் குணக்கடலாயும் விளங்கிய தம் தந்தைபாற் பகைமை கொண்டனர். அப்பகைமை முதிர்ந்தமையால், அப்புதல்வரிருவரும் தம் சொற்கேட்கும் சிலரைச் சேர்த்துப் படையாக அமைத்துக்கொண்டு, தம் தந்தையோடு போர் புரியக் கருதிப் போந்து நின்றனர். மன்னனும் போர் புரியப் படையோடு வந்து நின்றனன். புதல்வர் போர்

குறித்து வந்துவிட்டனராதலின், தான் போருக்குப் புறப்படாதிருப்பின், "இவன் வீரமில்லாதவன்; போருக்கஞ்சும் கோழை," என்று பிறரிகழ்வர் என்றெண்ணி, வேறு வழியின்றிப் போருக்குப் புறப்பட்டனன்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் சேரனோடு போர் தொடங்கியதைவிட, சோழன் நலங்கிள்ளி தன் மரபினனும் தன் தாயத்தவனுமாகிய நெடுங்கிள்ளியோடு போர் தொடுத்தது கொடிய செயலாகும். தந்தையும் புதல்வரும் தம்முட் பகைத்துப் போர் புரிதல் அதனினும் கொடிய செயலாகும். இக்கொடிய செயலைக் கண்ட புலவர் புல்லாற்றூர் எயிற்றியனூர் இதனையொழிக்க விரும்பினர்.

இருவரும் போர் மேற்கொண்டு தத்தம் படையோடு எதிர் எதிராய் நிற்கும் போது புலவர் ஒரே நேரத்தில் இருவரையும் நோக்கி அறவுரை கூறுதல் இயலாது; மன்னனையோ மக்களையோ மட்டும் நோக்கிக் கூறலாம். புலவர் அரசனை நோக்கி அறவுரை கூறிப் போரையொழிக்க முயன்றனர். புதல்வர் இளமையும் வீரமும் உடையவராய், சிறந்த அறிவில்லாதவராய் இருந்தனராதலின், அவர்கட்குத் தாம் அறவுரை கூறின், இப்போர் நிலையில் தம் சொல்லை அவர்கள் ஏற்றுக்கொள்ளார்கள் என்று புலவர் உறுதியாக எண்ணினர்; அதனால், முன்னரே தம்முடன் அளவளாவிப் பழகிய அரசனுக்கு அறவுரை கூறத் தொடங்கினர்.

இங்குப் புலவர் மிக்க விழிப்போடு தாம் கூறும் காரணங்களைச் சிறிதுசிறிதாக வற்புறுத்தி மன்னன் மனங்கொள்ளுமாறு கூறுகின்றனர். ஏனெனின், அரசன் அறிவிற்சிறந்தவன்; தன் புதல்வர் என்றும் பாராமல் போர் புரியத் துணிந்து வந்துள்ளனன்; அவன் நன்கு ஆராய்ந்தே தவிர்க்க ஒண்ணாத நிலையில் இப்போரை மேற்கொண்டிருத்தல் வேண்டும்; இந்நிலையில் தாம் குறுக்கிட்டுப் "போரை நிறுத்துக," என்று கூறினால், மன்னன் தம்மிடத்து மதிப்புடையனாயினும், இந்நிலையில் தம் சொல்லை ஏற்றுக்கொள்வானோ, ஏற்றுக்கொள்ளானோ என்ற ஐயப்பாடு புலவர் உள்ளத்தில் தோன்றியது.

> **'அகலா தணுகாது தீக்காய்வார் போல்க**
> **இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.'***

என்ற தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உண்மை மொழியைப் புலவர் உணர்ந்திருப்பாரன்றோ? ('அரசனிடத்துப் பழகுகின்றவர், குளிர் காய்வார் தீயினிடத்து மிக நெருங்காமலும் விட்டு நீங்காமலுமிருந்து பயனடைதல் போல, அரசனிடத்து மிக நெருங்காமலும் விட்டு விலகாமலுமிருந்து பழகுதல் வேண்டும்,' என்பது இத்திருக்குறளின் கருத்து.)

அவ்வாறு ஐயுறும் புலவர் இச்செயலை மேற்கொள்ளக் காரணம் என்னையெனின், ஒரு காரியத்தால் நன்மை விளையும் என்று உறுதியாகத் தெரிந்

*குறள். 691

தால், அக்காரியத்தை யாவரும் செய்யத் தொடங்குவர். தீமை விளையும் என்று உறுதியாகத் தெரிந்தால், அதனை ஒருவரும் செய்யத் தொடங்கமாட்டார். இனி, ஒரு காரியத்தினுல் நன்மையுண்டாகுமோ, தீமையுண்டாகுமோ என்ற ஐயப்பாடு உண்டாகுமாயின், அக்காரியத்தைச் செய்யத் தொடங்கலாகாது. நன்மை விளையினும் விளையும்; விளையாதொழியினும் ஒழியும். ஆனல், தீமை விளையாது என்ற அளவில் ஐயுறுதற்குரிய காரியத்தைச் செய்யத் தொடங்கலாம். ஆற்றுநீரைக் கடந்து அப்பாற் செல்ல வேண்டியவன், அவ்வாற்றுநீர், நிலை நீரோ, நீத்து நீரோ என்று ஐயுறவுண்டாகுமாயின், நிலை நீரே என்று உறுதியாகத் தெளிந்தாலன்றி, அவ்வாற்றில் இறங்குதல் கூடாது; ஒருவன் மற்ருெருவனிடம் ஒருதவி கேட்க விரும்பும்போது, அவன் அவ்வுதவி செய்வானே, செய்யானே என்று ஐயந் தோன்றின், அவ்விடத்து அவ்வுதவி செய்யுமாறு கேளாமல் நிறுத்தலாகாது; அவ்வுதவியை அவன் செய்யாவிடின், வேருெருவனை நாடி அவ்வுதவி பெறலாம் என்பது பொது உலகியல் முறை; அம்முறைப்படி, புலவர் கூறும் அறவுரைகளை மன்னன் ஏற்றுக்கொண்டு போரை நிறுத்துவானுயின், மக்கள் பலரும் விலங்குகள் பலவும் உயிரிழவாமல் வாழ்தல் கூடும்; மற்றும் பல தீமைகள் ஒழியும்; மன்னன் ஏற்றுக்கொள்ளாமல் போரையே மேற்கொள்வானுயின், அதனுல் இரு திறத்திலும் புதிதாக வரும் தீமை ஒன்றுமின்று; புலவர் சொல்லை அரசன்

ஏற்றுக்கொண்டிலன் என்பது புலவர் பெருமைக் கிழுக்காகாதோ எனின், இழுக்குளதாம்; அவ்விழுக் கினும், அரசன் புலவர் அறவுரைகளை ஏற்றுக் கொண்டு போரை நிறுத்துவானாயின் வரும் நன்மை மிகப் பெரிது; அதனால், தமக்குண்டாகும் இழுக்கை நினையாமல் புலவர் இச்செயலை மேற்கொண்டன ரெனக் கொள்க.

புலவர் தாம் கூறும் அறவுரைகளை மன்னன் மனங்கொள்ளுமாறு செய்தற்காக முதலில் அவனை நன்கு புகழ்ந்து முன்னிலைப்படுத்துகின்றார்; இடை இடையேயும் இடத்திற்கேற்பப் புகழ்ந்து முன் னிலைப்படுத்துகின்றார்: "கோப்பெருஞ்சோழ, நீ போரிற்பகைவரைக் கொன்று வெற்றி பல பெற்றனை; மிக்க வலிமையும் தளராத ஊக்கமும் உடையை; குடிகளிடத்துக்கொண்ட அருளுக்கறி குறியாக வெண்கொற்றக் குடையையுடையை; எங்கும் பரந்த புகழுடையை,"* என்று முதலிற் புகழ்ந்தார். இப்பகுதியிற் புலவர் கோப்பெருஞ் சோழனை, "நீ வலிமையும் வீரமுமுடையை," என்ற தனால், "வீரமுடையார் தம் வீரத்தை உலகம் புகழ் தற்குரிய நெறியிற்செலுத்துதல் வேண்டுமேயன்றி, உலகம் பழித்தற்குரிய நெறியிற்செலுத்துதல் ஆகாது; இப்போது நீ மேற்கொண்டுள்ள போர் நின் புகழைக் குறைப்பதாகவே உள்ளது," என்பத னைக் குறிப்பாலுணர்த்தினர்.

*புறம். 213

அதன் பின், அரசனை நோக்கி, "நின்னொடு மாறுபட்டுப் போர்செய்ய விரும்பிவந்து நின் எதிரில் நிற்போர் நினக்குத் தொன்று தொட்ட பகைவராகிய சேர பாண்டியரல்லர்; நீயும் அவர்கட்குத் தொன்று தொட்ட பகையுடையையல்லை," என்றார். அரசன் தன் புதல்வரைப் புதல்வராகக் கருதாமல், பகைவராகக் கருதிப் போருக்கு வந்துவிட்டமையால், அவர்களை "நின் புதல்வர்" என்று கூறினால், மன்னன் கோபம் இன்னும் மிகுதியாகலாம் என்றெண்ணி, "நின்எதிரில் வந்து நிற்போர்" என்று கூறினார். இவ்வறவுரை கூறி முடிக்கும் வரையிற் புலவர் அவர்களை "மக்கள், புதல்வர்" என்பன போன்ற சொற்களாற் கூறாமல் வேறு வகையாகவே கூறியுள்ளனர்.

அதன்பின் புலவர் மீண்டும் அரசனைப் "பகைவரைக் கொல்லும் யானைப் படையையுடையவனே," என்று முன்னிலைப்படுத்திக்கொண்டு மேலும் சொல்லத் தொடங்கினர்: "நாம் இப்போரில் தோற்று விடுவோம் என்று புலவர் கருதிவிட்டார் போலும்!" என்று அரசன் நினையாதிருப்பதற்காகவும், போரிற் சென்ற நினைவாற் பராமுகம் காட்டாமல் தம் சொல்லைக் கூர்ந்து கேட்பதற்காகவும் இவ்வாறு அரசன் வீரத்தைக் கூறி, அவனை மீண்டும் முன்னிலைப்படுத்திக் கூறினர்:

"அரச, நீ இவ்வுலகில் அறத்தானெய்தும் புகழும் வீரத்தானெய்தும் புகழும் பெற்று இவ்வுலகை

நீத்து மேலுலகடைந்தபின் இச்சோழ நாட்டாட்சி நின் மக்கட்குரித்தன்றே? அவர்கள் அறியாமற் கொண்ட பகைமை காரணமாக இன்று நீ அவர்களைக் கொன்றுவிடுவையாயின், பின், நின் அரசாட்சியைப் பெறுதற்குரியார் யார்? இதனை யான் கூறுதல் என்னே! நீயே நன்கறிவை," என்றார். "எமக்குப் பின் இவ்வரசாட்சி இப்புதல்வர்க்குரியதென்று யாமறியேமோ? இதனைப் புலவர் கூறி யாமறிதல் வேண்டுமோ?" என்று அரசன் எண்ணுதற்காக, "இதனை நீயே நன்கறிவை," என்றார் புலவர்.

இவ்வளவில், மன்னன் போர் நிறுத்துங் குறிப்பினைக் காணப்படாமையால், "புகழை விரும்புவோனே, இன்னுங் கேள்," என்று சொல்லி மேலுங் கூறத் தொடங்கினர் புலவர்: "நின் முன் போர் மேற்கொண்டு வந்து நிற்போர் (நின்மக்கள்) அறிவு நிறையப் பெற்றிலராயினும், தளராத வலிமையுடையர்; ஆதலால், இப்போரில் இன்னார் வெற்றிபெறுவார், இன்னார் தோல்வியுறுவார் என்று யாரும் உறுதியாகக் கூறுதல் இயலாது; நீ வெற்றி பெறுவையாயின் (நின் மக்களைக் கொல்வையாயின்), நினக்குப் பின் நின்னரசாட்சியை யார்க்களிப்பாய்? நீ தோல்வியுறுவையாயின், நின் பகைவர் (பிற மன்னர்) பெருமகிழ்ச்சியடையுமாறு நீ இகழ்ச்சியை அடைவாய்," என்றார். இதனால் இப்போரில் மன்னன் வெற்றியுற்றாலும் தோல்வியுற்றாலும் அவ

னுக்குத் தீமையன்றி நன்மை விளையாது என்னும் கருத்தை மன்னன் மனங்கொள்ளுமாறு புலவர் எடுத்துரைத்தனர். இப்போர் மன்னனுக்கு எவ் வகையிலும் புகழ் தாராது என்னும் குறிப்பை உணர்த்தவே, மன்னனைப் "புகழை விரும்பு வோனே," என்று புலவர் முன்னிலைப்படுத்தினர்.

இவ்வளவில் மன்னன் போர் நிறுத்தும் குறிப் பினைக் காணப்பட்டமையால், அதன்மேல் வெளிப்படையாக, "இப்போரை நிறுத்துக; நிறுத்தி, நின் நகருக்குத் திரும்பிச் சென்று நின்னை அடைந்தோர் வருந்தாவண்ணம் அவர்களைக் காத்து, மறுமைக்கு வேண்டும் நல்லறங்களைச் செய்வாயாக," என்று புலவர் கூறினர்.

இங்ஙனம், தொடக்கத்திலேயே 'போரை நிறுத் துக,' என்று கூறாமல், மன்னனைப் புகழ்ந்து பேசிக் கொண்டே, சிறிது சிறிதாகவும் இனிமையாகவும் தம் கருத்தை வற்புறுத்திக் கூறி, இறுதியாகப் போரையொழிக்க விரும்பிய தம் முயற்சியில் வெற்றியுற்றனர் புலவர்.

போர் நிறுத்தப்பட்டது; பல்லாயிர மக்கள் உயிர் வாழ்ந்தனர்; அங்ஙனமே பல்லாயிர விலங் குகள் உயிர் வாழ்ந்தன; ஆனால், மன்னன் நிலை வேறு வகையாய் முடிந்தது. அது பின் ஓரிடத்துக் கூறப்படும்.

# 4. ஔவையாரும் அரிசில்கிழாரும்

சங்க நூல்களில் முடிகெழு வேந்தர் மூவரே யன்றி மற்றும் பலர் சிறந்த வீரராயும் கொடையாள ராயும் காணப்படுகின்றனர். வேள் பாரி, வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி, அதிகமான் நெடுமான் அஞ்சி, பேகன், வேள் ஆய், நள்ளி என்ற எழுவரும் சிறந்த வீர ராயும் பெருங்கொடையாளராயும் விளங்கினர். இவர்களைக் கடையெழு வள்ளல்கள் என வழங்குகின் றனர். கடையெழு வள்ளல்கள் எனக் கூறுவது பொருத்தமுடைத்தன்று. இவ்வழக்கம் பிற்காலத் துண்டாயது. முன்னூல்களில் இவ்வழக்கில்லை. இவர் களோடு சேர்த்து 'முதலெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள்' என்று கூறப்படுபவர்கள், சிறப்பாகத் தமிழ் நாட்டவர்களாயில்லை. அதனால், வேள் பாரி முதலிய எழுவரையும் 'வள்ளல்கள் எழுவர்' என்று கூறுதலே பொருத்தமுடைத்தாகும்.

சங்க நூல்களில்—சிறப்பாகப் புறநானூற்றில்— பெருங்கொடையாளராயும் வீரராயும் இன்னும் பலர் காணப்படுகின்றனர். அங்ஙனமாக, இவர்களை மட்டும் சேர்த்து 'வள்ளல்கள் எழுவர்' என்று கூறுதல் என்னையெனின், புறநானூற்றில் குமண னைப் பாடிய பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் இவ் வெழுவரையும் சேர்த்துக் கூறி, "இவ்வெழுவரும் இறந்த பின் இவர்களுடைய வள்ளற்றன்மையை நீயே மேற்கொண்டுள்ளனை," என்று குமணனைச்

சிறப்பித்துக் கூறினர்.* நல்லூர் நத்தத்தனர் என்னும் புலவர், ஓய்மான் நல்லியக்கோடன் என்னும் சிற்றரசன் மீது பாடியதும், பத்துப்பாட்டினுள் ஒன்ருய் அமைந்துள்ளதுமாகிய சிறுபாணுற்றுப்படையில் மூவேந் தரையும் மேற்கூறப்பட்ட எழுவரையும் எடுத்துக் கூறி, " இவர்கட்குப் பின் வள்ளற்றன்மையை நீயே மேற்கொண்டுள்ளனை," என்று நல்லியக்கோடனைச் சிறப்பித்துக் கூறினர். இவ்விரு புலவர் கூற்றை யும் நோக்குமிடத்து, மேற்கூறப்பட்ட எழுவரும் ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் பெருங்கொடையாள ராயும் சிறந்த வீரராயும் விளங்கினர் என்பதும், அதனல் பெருஞ்சித்திரனரும் நல்லூர் நத்தத்தனரும் இவ்வெழுவரையும் சேர்த்துக் கூறினர் என்பதும், இப்புலவரிருவரும் கூறியதனல் இவ்வெழுவரும் ' வள்ளல்கள் எழுவர் ' என ஒரு குழுவாகச் சேர்த்து வழங்கப்பட்டனர் என்பதும் புலனகின்றன. பிற் காலத்தில் இவ்வெழுவரோடு வேறு இரு குழுவைச் சேர்த்து முதல் எழு வள்ளல்கள், இடையெழு வள் ளல்கள், கடையெழு வள்ளல்கள் என வழங்கத் தொடங்கினர் என்பதும் தெளிவாகின்றது.

இவர்களுள் மலையமான் திருமுடிக்காரியினுடைய குழந்தைகளைக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் சோழமன்னன் கைப்பற்றிச் சென்று, யானைக் காலில் இட்டுக் கொல்லுவிக்கத் துணிந் தனன். அந்நேரத்தில் அக்குழந்தைகளின் நல்

*புறம். 158.

வினைப் பயனாகப் புலவர் கோவூர்கிழார் அவண் போய்ச் சேர்ந்தனர். அவர் அக்கொடுஞ்செயலைக் கண்டு மனம் பொறாமல், சோழமன்னன் மனம் இரங்குமாறு சில சொற்களை எடுத்துக்கூறி, அக்குழந்தைகளைக் காத்தனர். மலையமான் திருமுடிக்காரியின் குழந்தைகட்கு அந்நிலை உண்டாகக் காரணம் யாதென்பதை ஆராய்வாம் :

புலவர் பாடுதற்குரியவை காதலும் வீரமும் என்பது அறிஞர் கருத்து. காதல் கற்போடு சேர்ந்தே சிறப்புறுவதாகும். கற்போடு சேராத காதல் சிறிதும் மதிக்கப்படுவதில்லை. அங்ஙனமே, வீரமும் கொடையோடுசேர்ந்தே சிறப்புறுவதாகும். கொடையோடு சேராத வீரத்தைப் புலவர் மதித்தலுமில்லை; பாடுதலுமில்லை. மலையமான் திருமுடிக்காரி வீரம் கொடை இரண்டிலும் சிறந்து விளங்கினன்; திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனன். அக்காலத்து விளங்கிய முடிமன்னர், குறுநில மன்னர் யாவரும் தனியே தம்படைகொண்டு அவனை எதிர்த்துப் போர் புரிய அஞ்சினர். அதுமட்டுமன்றி, அக்காலத்து மன்னருள் ஒருவர் மற்றொருவரோடு போர் புரியத் துணிந்தால், மலையமான் திருமுடிக்காரிக்குப் பெரும்பொருள் கொடுத்து அவனைத் தமக்குப் போர்த்துணை வருமாறு அழைப்பர். மலையமானைத் துணையாகப் பெற்ற அரசர் போரில் வெற்றி பெறுதலும், அவனைத் துணையாகப் பெறாதவர் போரில் தோல்வியுறுதலும் உறுதியாயின.

இவ்வாறு மலையமானைத் துணையாக அழைப்பதற்குப் பிற மன்னர்களால் அனுப்பப்படும் தூதர்கள் திருக்கோவலூரில் எப்போதும் காணப்படுவார்கள். 'மலையமானைத் துணையாகப் பெற்று வெற்றி பெற்ற மன்னனும் அவனைப் புகழ்வான்; அவனைத் துணையாகப் பெறுமையால் தோல்வியுற்ற மன்னனும் அவனைப் புகழ்வான்,' என்று ஒரு புலவர் அவன் வீரத்தை அழகாகப் பாராட்டிக் கூறினர். வென்ற மன்னன், "மலையமானைத் துணையாகப் பெற்றதனால் யான் வென்றேன்!" என்று கூறுவான்; தோற்ற மன்னன், "மலையமான் பகைவன் பக்கம் துணையாகச் சேர்ந்ததனால் யான் தோற்றேன்! இன்றேல், யான் தோல்வியுறாமல் வெற்றியே பெற்றிருப்பேன்," என்று கூறுவான். இவ்விருவர் கூற்றுக்களும் மலையமான் வீரச் சிறப்பையே விளக்கும் என்று பாராட்டினர் அப்புலவர்.*

மலையமான் இவ்வாறு போருக்குத் துணையாய்ச் செல்லுமிடங்களில் அவ்வம்மன்னர் கொடுக்கும் பெரும்பொருள்களையும் தன்னாட்டிற்கிடைக்கும் பெரும்பொருள்களையும் கொண்டு, 'இல்லை' என்று வந்து இரக்கும் வறியவர்க்கு அவர் வேண்டுமளவும் வழங்குவானாயினன். இவன்பாற் சென்று பொருள் பெறாமல் திரும்பியவர் ஒருவருமிலர் என்று இவன் புகழப்பட்டான். முள்ளூர் மலை இவனுக்குரிய சிறந்த மலையாகும்.

---

*புறம். 125

இவன் வீரச் சிறப்பைக் கண்டு பிற மன்னர் சிலர் இவனிடத்துப் பகைமை கொள்வாராயினர். இவன் துணை பெருமையால் போரில் தோற்ற மன்னர் இவன் வீரச் சிறப்பைக் கண்டு ஒருவாறு புகழ்ந்தனராயினும், இவனிடம் பகைமை கோடல் இயல்பேயன்றோ? அவர்தம் கோபம் பெருகுமாறு மலையமான் ஒரு காரியஞ் செய்தனன் :

கொல்லி மலை மிகச் சிறந்த வளமுடைய மலை. அம்மலையில் தேனும் பலாப் பழமும் மிக அதிகமாகக் கிடைக்கும். அம்மலை வழிவழியாகச் சேர அரசர்க்கு உரியது. ஆயினும், வள்ளல் எழுவர் வாழ்ந்த கால எல்லையில் வல்விலோரி என்பவன் அம்மலையைத் தனக்குரியதாகக் கொண்டிருந்தனன். அம்மலை அவனுக்கு எவ்வாறு உரியதாயிற்று என்பது தெரிந்திலது.

வல்விலோரியும் மிகச் சிறந்த வீரமுடையவன்; அம்பு விடுவதில் மிகச் சிறந்த ஆற்றலும் பயிற்சியுமுடையவன். அவன் ஓரம்பு தொடுத்து ஒரு விலங்கின்மேல் விடுவானாயின், அவ்வம்பு அவ்விலங்கினை மட்டும் கொன்றமையாது, அவ்விலங்கைத் துளைத்துக்கொண்டு அப்பாற்சென்று, ஆண்டு அதற்கு இலக்காகும் வேறு சில விலங்குகளையும் கொல்லுந் தன்மையதாகும். அவ்வளவு விசையோடு அம்பு தொடுத்து விடும் ஆற்றலுடையவன் வல்விலோரி.

அவ்வல்விலோரியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கொல்லி மலை, வழிவழியாகத் தங்கட்கு உரிமை

யுடையது என்பது கொண்டு, அதனைக் கைப்பற்றக் கருதினன் பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர அரசன். ஆனல், பெருஞ்சேரலிரும்பொறை வல்வி லோரியோடு போர்புரிய எண்ணங்கொண்டிலன். வல்விலோரியைத் தான் வெல்லுதல் இயலாது என் றெண்ணியோ, முடிகெழு வேந்தனகிய தான் குறு நில மன்னனகிய வல்விலோரியோடு போர்புரிதல் தன் பெருமைக்கு இழுக்காகும் என்றெண்ணியோ, தான் வல்விலோரியோடு போர்புரியாமல், மலைய மான் திருமுடிக்காரியை அழைத்துப் போருக்கனுப் பினன்.

வல்விலோரியும் சிறந்த வீரனதலின், அவனுக் கும் மலையமானுக்கும் பெரும்போர் நிகழ்தலாயிற்று. ஆயினும், இறுதியாக வல்விலோரி போரிற்கொல் லப்பட்டான். மலையமான் வெற்றி பெற்றன். வெற்றி பெற்ற மலையமான், சேர மன்னன் விருப் பப்படி கொல்லி மலையை அவனுக்கு உரிமையாக் கினன். இந்நிகழ்ச்சியை அகநானூற்றில் வருகின்ற,

"முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலற் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி"*

என்னும் பாடற்பகுதி தெளிவாக அறிவிக்கின்றது. இங்குக் கூறப்பட்ட சேரலன், பெருஞ்சேரலிரும் பொறை எனக் கொள்க.

---

* அகம். 209 : 12-15

இப்போரில் வல்விலோரி கொல்லப்பட்டானுயினும், இயல்பாய் அவனிடத்தமைந்திருந்த வில்லின் திறனையும், போரில் அவன் காட்டிய பேராற்றலையும் நினைந்து இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனுர் என்னும் புலவர் ஓரியைப் புகழ்ந்து கூறியுள்ளனர். அவர் தாம் பாடிய சிறுபாணுற்றுப்படையில் வல்விலோரியைக் கூற வேண்டியவிடத்தில், அவன் மலையமான் திருமுடிக்காரியாற்கொல்லப்பட்டிருக்கவும்,

> "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
> ஓரிக் குதிரை ஓரியும்"*

என்று ஓரியைப் புகழ்ந்தனர். போரில் தோற்ருேடுவது பழிப்பாகுமேயன்றி, வெற்றி கொள்ளாவிடினும், எதிர் நின்று பொருது இறத்தல் இழுக்காகாது; பெருமையேயாகும்.

> 'இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
> பிழைத்த தொறுக்கிற் பவர்?'†

என்பது தமிழ் மறை. "ஒரு வீரன், 'நான் இன்னுேடு பொருது வெற்றி கொள்வேன்; அங்ஙனம் வெற்றி கொள்ளேனுயின், இன்ன தன்மையேனுவேன்!' என்று வஞ்சினங்கூறிப் போர்க்குச் சென்ருல், அவன் அப்போரில் தோற்ருேடாமல் எதிர் நின்று பொருது வெற்றிகொள்ளாமல் இறந்துவிடுவானுயின், அவன் கூறியவாறு வெற்றி கொள்ளாமை குறித்து அவனை இகழ்வார் யார்? ஒருவரும் இகழார்," என்பது இதன் கருத்து.

---

* சிறுபாண். அடி, 110–11 † குறள், 779

வல்விலோரி சிறந்த கொடையுடையனுதலின், அக்கொடையினுல் அவனைப் புகழ்ந்து கூறலாமாயினும், மலையமானோடு போர்செய்த அவ்வீரச் சிறப்பைக் கருதி, அதுகொண்டு அவனைப் புகழ்தல் வேண்டுமென்று எண்ணியே புலவர் நத்தத்தனர் அங்ஙனங் கூறினர் போலும்! இதனுல், அரிய செயல் எதுவாயினும், அதனை வியத்தலும் புகழ்ந்து பாடுதலும் புலவர் இயல்பென்பது தெளிவாகும்.

இவ்வாறு மலையமான் வல்விலோரியை வென்று கொல்லி மலையைச் சேரனுக்குக் கொடுத்த செயல், ஏனைய அரசர்களுக்குப் பெருங்கோபத்தையும் பகைமையையும் உண்டாக்கிவிட்டது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும் அதிகமான் நெடுமானஞ்சியும் மலையமானிடம் மிக்க கோபமும் பகைமையுங்கொண்டு, ஒன்றுசேர்ந்து, மலையமானோடு போர்தொடுத்து அவனை அழித்தனர்.

மலையமான் திருமுடிக்காரியை அழிப்பதில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை விட அதிகமான் நெடுமானஞ்சியே அதிக ஊக்கம் கொண்டு போர்புரிந்தனன். அதனுல், அவனே மலையமானை வென்றழித்தனன் என்று ஔவையார் அதிகமான் நெடுமானஞ்சியைப் புகழ்வாராயினர்.

**" இமிழ்குரன் முரசின் எழுவரொடு முரணிச்**
**சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய**
**அன்றும் பாடுநர்க் கரியை ; இன்றும்**
**பரணன் பாடினன் மற்கொல் ; மற்றுநீ**

முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி யேந்திய தோளே.''*

என்பது அவர் அவனைப் பாடியது. மலையமான் மக்களை யானைக் காலிலிட்டுக் கொல்லத் தொடங்கியதைத் தடுத்துக் கோவூர்கிழார் பாடியிருத்தலையும், அதிகமான் கோவலூரையழித்தான் என்று ஔவையார் பாடியிருத்தலையும் நோக்குமிடத்து, இவ்விருவரும் ஒன்றுகூடி மலையமானோடு போர்புரிந்து அவனை அழித்தனர் என்றும், இவ்விருவருள் அதிகமான் மலையமானைக் கொல்வதற்கு அதிக ஊக்கம் கொண்டு போர்புரிந்தான் என்றும், மலையமான் இறந்தபின் அவனிடத்துக் கொண்ட பகைமையால் கிள்ளிவளவன் அவன் மக்களையுங் கொல்ல முயன்றனன் என்றும் கொள்ளுதல் பொருத்தமாகும்.

வல்விலோரியோடு போர்தொடுத்து அவனைக் கொன்றதனால் மலையமான் திருமுடிக்காரியிடத்து இவ்வாறு கிள்ளிவளவனும் அதிகமானும் பெரும் பகை கொள்ளக் காரணம் என்னை என்பதை ஆராய்வாம்:

கொல்லிமலை உரிமை காரணமாக மலையமானைக் கொண்டு வல்விலோரியைக் கொல்வித்த பெருஞ்சேரலிரும்பொறை, மற்றோர் உரிமை கருதி அம்மலையமானைக் கொண்டு தன்னையும் கொல்வித்தல் கூடும் என்று அதிகமான் எண்ணினான். சேரமன்

* புறம். 99.

னர்களுக்கு அடையாளப் பூமாலையாகிய பனம் பூமாலையே அதிகமானுக்கும் அடையாளப் பூமாலையாயிருந்தது. 'குறுநில மன்னனாகிய அதிகமான் நமது அடையாளப் பூமாலையாகிய பனம் பூமாலையைத் தனக்கும் அடையாளப் பூமாலையாகக் கொள்வதா!' என்று கருதிச் சேரன் மலையமானை ஏவித் தன்னையும் கொல்விக்க முயலலாம் என்று அதிகமான் எண்ணினான். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு:

அக்காலத்துத் தமிழ் மன்னர் தத்தம் ஆட்சி முறையை நன்கு நடத்தும்பொருட்டு, தத்தம் நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்திருந்தனர். அப்பகுதிகளுக்குக் 'கூற்றம், கோட்டம்' எனப் பெயர்களிடப்பட்டிருந்தன. அவற்றுள் 'கொல்லிக் கூற்றம்' என்றொரு பகுதியுண்டு. கொல்லி மலையும், அதனைத் தொடர்ந்த வேறு சில மலைகளும், ஓரளவு நிலப்பரப்பும் கொண்டது கொல்லிக் கூற்றமாகும். இப்பகுதியில் முக்கியமான கொல்லிமலை, வளமிக்க மலையாகும். அக்கொல்லி மலையை வல்விலோரியிடமிருந்து சேரன் பெற்றுவிட்டானாயினும், மற்றுள்ள கொல்லிக் கூற்றத்தையும் கைப்பற்றக் கருதிச் சேரன் மலையமானைத் தன்மீது போர்க்கனுப்புதல் கூடும் என்றும் அதிகமான் எண்ணினான்.

இக்காரணங்களை எண்ணி அதிகமான் அதிகனைக்கொண்டு, கிள்ளி வளவனைத் துணைக்கொண்டு, மலையமானோடு போர் புரிந்து, அவனை

அழித்தனன். மலையமானை அழித்தல் வேண்டும் என்று எண்ணிய அதிகமான், மலையமான் மிக்க போராற்றல் உடையனாதலாலும், 'வல்விலோரி' என்று புகழ் பெற்ற ஓரியொடு போர் புரிந்து அவனைக் கொன்றானாதலாலும், தான் மட்டும் படையெடுத்துச் சென்றால் மலையமானை வெல்லுதல் இயலுமோ இயலாதோ என்று ஐயுற்றுக் கிள்ளிவளவனைத் துணைக்கொண்டு செல்வானாயினான்.

கிள்ளிவளவன், தன் அண்மையிலுள்ள மலையமான் தனக்கே போர்த் துணையாதலன்றி, பொருள் கொடுப்பார்க்கெல்லாம் போர்த்துணையாகச் சேறலை விரும்பாது வெறுத்தனன். பிறன் ஒருவன் மிக்க பொருள் கொடுப்பானாயின், அவனுக்காகத் தன்னோடு போர் புரியவும் வருவான் என்றும் மலையமானிடத்தில் ஐயுறவு கொண்டனன் கிள்ளிவளவன். அதனால், அவன் அதிகமானுக்குத் துணையாகச் சேர்ந்தனன். எப்போதும் அரசர் தம் அண்மையிலுள்ள மற்றோரரசன் அதிக வலியுடையனாயிருப்பதை விரும்புவதில்லை. பொதுவாயுள்ள இவ்வியல்பே கிள்ளிவளவனை அதிகமானுடன் சேருமாறு செய்ததென்க.

அதிகமான் நெடுமானஞ்சி, வள்ளல்கள் எழுவருள் ஒருவன் என்பது முன்னரே கூறப்பட்டது. இவன், 'தகடூர்' என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு, ஆட்சி புரிந்தான். இவன் நாட்டிலுள்ள குதிரைமலை இவனுக்குச் சிறப்பாயுள்ள மலை. இவன்

பெயர், 'அஞ்சி, நெடுமானஞ்சி, அதிகன், அதிகமான் நெடுமானஞ்சி' எனப் பலவாருக வழங்குகின்றது. இவனுக்கு, 'எழினி, நெடுமிடல்' என்ற பெயர்களும் உண்டு. இவன் மகன், அதிகமான் பொகுட்டெழினி எனப்படுவான். ஔவையார் அதிகமானைப் பல பாட்டுக்களால் பலவாருகப் புகழ்ந்து பாடியுள்ளார். இவன் மகன் பொகுட்டெழினி பிறந்த காலத்திலும், அவன் பெரியவனுகிப் போர் வீரனுய் விளங்கிய காலத்திலும் ஔவையார் அவனைப் பாடியுள்ளனர்.

அதிகமான் பெருங்கொடை வள்ளல். ஔவையார் இவன் கொடையைப் பலபடப் புகழ்ந்து பாடியுள்ளனர். 'பரிசில் வேண்டுவார் அடுத்தடுத்துப் பல முறை அதிகமானிடம் சென்ருலும், அதிகமான், அவர்கள் முதன்முறை வந்த போது எவ்வளவு விருப்பத்தோடு எவ்வளவு பரிசில் நல்கினுனே, அவ்வளவு விருப்பத்தோடு அவ்வளவாகப் பல முறையிலும் பரிசில் நல்குவான்,'* என்று கூறியுள்ளார். அதனல், 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்,' என்னும் மனநிலை அதிகமான்பால் இலதென்பதையுணரலாம்.

'அதிகமான் என்றேனும் பரிசில் அளித்தற்குச் சிறிது காலந்தாழ்ப்பினும், இவன் பரிசில் அளிப்பது மட்டும் உறுதியாகும். யானை தன் கையில் எடுத்த உணவாகிய கவளத்தை உடனே உண்ணுமல், தன் கோட்டின்மேற் சிறிது நேரம் வைத்திருப்

*புறம். 101

பினும், எப்படியும் அக்கவளம் அதற்கு உணவாதல் உறுதியே. அங்ஙனமே அதிகமான் பரிசில் நல்கு வதில் ஒரோவழிச் சிறிது காலந்தாழ்ப்பினும், பரிசில் நல்குவது மட்டும் உறுதியேயாகும்.'

ஒரு முறை அதிகமான் சிறந்த நெல்லிக் கனி யொன்றை அரிதாக முயன்று பெற்றனன். அக் கனி உண்டாரை நெடுங்காலம் வாழச் செய்வது. அதனைத் தான் உண்டு நெடுங்காலம் வாழ எண்ணங் கொண்டிலன் அதிகமான்; அதனைக் கவியரசியாரா கிய ஔவையாருக்களித்து, அவரை நெடுங்காலம் வாழவைக்க எண்ணினன்; தனது நெடுங்கால வாழ்க் கையினும் ஔவையாரின் நெடுங்கால வாழ்க்கை நாட்டிற்குப் பெரும்பயன் நல்குமென்றெண்ணி னன். அக்கனியின் சிறப்பினை முதலிற்கூறினல், ஔவையார் அதனைத் தாம் பெற்றுண்ண விரும்பார் என்றுணர்ந்த அதிகமான், அதன் சிறப்பினை முதலிற்கூருமல், ஔவையாரிடம் அதனை நல்கி, அவர் அதனையுண்ட பின் அதன் சிறப்பினை எடுத் துரைத்தான். இவனது உயரிய எண்ணத்தை உணர்ந்த ஔவையார், உள்ளடங்கா மகிழ்ச்சியோடு இவனை வாழ்த்தினர். அதிகமான் இவ்வாறு கொடைச் சிறப்பும் வீரச் சிறப்பும் ஒருங்கமைந்து விளங்கினன்.

அதிகமானுக்குப் பனம்பூமாலை கூறப்பட்டிருத் தலால், இவன் சேரர்களுக்கு உறவினன் என்று சிலர் கருதுகின்றனர். இதுகொண்டு இவனைச்

சேரர்களுக்குத் தாய முறை உறவினனாகக் எண்ணுதல் இயலாது. அக்காலத்தில் விளங்கிய வள்ளல்கள் எழுவருள் ஒருவரும் முடிகெழு வேந்தர்களாகிய சேர பாண்டிய சோழ மரபினராகக் காணப்பட்டிலர். சோழர் மரபினனாகிய ஒருவன் சோழநாட்டில் ஒரு பகுதியை ஆட்சி புரிந்தாலும், அவனைச் சோழ மன்னனாகக் கருதுவதல்லது, குறுநில மன்னனாகக் கருதார். சேரர் மரபினர் பல கிளையினராய் இருந்து, சேரநாட்டைப் பிரித்துக்கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். அங்ஙனமாயினும், அவர் குறுநில மன்னராகக் கருதப்பட்டிலர். அதிகமான் நெடுமானஞ்சி குறுநில மன்னர் குழுவிற்சேர்த்து எண்ணப்பட்டிருத்தலால், இவன் சேரர் மரபினனாய் இருத்தல் இயலாது.

அன்றியும், அக்காலப் புலவர்கள் தமிழ் மூவேந்தர்களைக் கூறுமிடங்களில், அவர்களை 'வேந்தன்' என்னும் சொல்லாற்கூறுகின்றனர்; குறுநில மன்னர்களைக் கூறுமிடங்களில், அவர்கள் மூவேந்தரினும் சிறந்த கொடையும் வீரமும் உடையவர்களாயினும், அவர்களை 'வேந்தன்' என்ற சொல்லாற் கூறுகின்றிலர். இம்முறை புறநானூற்றுப் பாக்களில் பெரும்பாலும் தவறாமல் ஆளப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தில் 'வேந்தரும் வேளிரும்' என்று பல இடங்களில் பிரித்துக் கூறுவதும் இம்முறையைத் தெளிவுறுத்துகின்றது. அதிகமானைப்பற்றிய பாடல்களில் 'வேந்தன்' என்ற சொல்லால் இவன்

குறிப்பிடப்படாமை காணலாம். அன்றியும், இவன் 'மழவர் பெருமகன்,' என்றும், 'அதியர் கோமான்' என்றும் கூறப்படுதலால், 'மழவர்' என்ற ஓரினத் தாருள், 'அதியர் குடி' என்ற ஒரு குடியிற்பிறந் தவன் என்று கொள்ளுதலே பொருத்தமாகும். ஆயினும், வேறு எக்காரணத்தாலோ, இவன் பனம் பூமாலை பெற்றிருந்தனன்.

அதிகமான் போர்த் திறமையோடு நல்ல சூழ்ச் சித் திறமையும் உடையவனுய் இருந்தான். இவன் காலத்தில் தொண்டை நாட்டையாண்டு வந்த அரசனொருவன், இவனோடு போர் புரிய எண்ணி, அதற்கு வேண்டிய படைக்கலங்களையும் படைகளை யும் சேர்த்து வந்தான். இதனையறிந்த அதிகமான், அவனோடு போர் புரிந்து வெல்லுதல் எளிதாயினும், அவன் தனக்கு நிகராகாதவன் என்றும், அவனோடு போர் புரிதல் தன் பெருமைக்குத் தகாதென்றும் எண்ணியோ, 'போர் செய்தால் எப்படியும் இரு திறத்திலும் உயிரிழப்பு உண்டாகும்; வீணே ஏன் அவ்வாறு உயிரிழப்பு உண்டாக விடுதல் வேண்டும்?' என்று எண்ணியோ, வேறு எக்காரணத்தாலோ, ஔவையாரைத் தூதாக அனுப்பி அப்போர் நிகழாதவாறு செய்ய முயன்றனன்.

ஔவையார் அதிகமானுக்காகத் தொண்டை நாட்டரசனிடம் தூது சென்றார். தொண்டை நாட் டரசன், தான் படைக்கலங்கள் நிறையச் சேர்த்து வைத்திருக்கும் படைக்கலக் கொட்டிலை ஔவை

யாருக்குக் காட்டினன். அதனைக் கண்ட ஔவை யார், "அழகிய படைக்கலங்களை நிறையச் சேர்த்து வைத்திருப்பதனல் வெற்றியடைந்துவிடுதல் இய லாது. அப்படைக் கலங்களைக் கைக்கொண்டு போர் புரியும் வீரர்களுடைய அஞ்சாமை அறிவாற்றல் இவற்ருலே வெற்றி எய்தும். அதிகமானுடைய படைக்கலங்கள் இவ்வாறு அழகாகப் படைக்கலக் கொட்டிலே அலங்கரிக்க மாட்டா. அவை போரில் பயன்படுத்தப்பட்டு நுனி முறிந்தும், காம்பு சிதைந் தும் கொல்லன் உலைக்களத்தில் திருத்தப்படுவதற் காகக் கிடக்கும்,"* என்று அதிகமான் வீரப் பெருமை தோன்ற அழகாக எடுத்துரைத்தார். ஔவையார் தூதினல் அப்போர் நின்றது. இம் முறை நல்ல அரசியல் முறையாகவே காணப்படு கின்றது. ஆனல், மற்ருேரிடத்தில் இம்முறை பயன் பட்டிலது.

அதிகமான் மலையமான் திருமுடிக்காரியோடு போர் புரிந்து வென்ற செய்தி முன்னரே கூறப் பட்டது. பெரும்பாலும் எப்போதும் அதிகமானுட னிருந்த ஔவையார் இப்போரைத் தடுக்க முயற்சி மேற்கொண்டிலரோ, ஔவையார் தடுத்தும் கேளா மல் அதிகமான் இன்றியமையாமை கருதி இப் போரை மேற்கொண்டானே, ஔவையார் வேறு எங்கேனும் சென்றிருந்த காலத்தில் இப்போர் நிகழ்ந்ததோ, ஒன்றும் உறுதியாக அறியப்பட

* புறம். 95.

வில்லை. ஆனால், அதிகமான் மலையமானை வென்று அவன் கோவலூரை அழித்த பின் ஔவையார் அதிகமான் வெற்றியைப் புகழ்ந்து பாடிய பாடல் மட்டும் காணப்படுகின்றது. அப்பாடலில் ஔவை யார் அதிகமானைப் புகழும் முறை ஒரு புது முறை யாய்க் காணப்படுகின்றது. ஔவையார் அதிக மானை நோக்கி, "நீ இவ்வாறு மலையமானோடு போர் புரிந்தாய்; அவன் படைகளை இவ்வாறு அழித்தாய்; அவன் கோவலூரை இவ்வாறு அழித்தாய்," என்று தாம் நேரே புகழ்ந்து கூறிற்றிலர்; "நீ என்றும் புலவர் பாடுதற்கரிய வீரச் சிறப்பினையுடையை; இன்று நீ மலையமானோடு போர் புரிந்த திறங்களைப் புலமையிற்சிறந்த பரணர் தம் வன்மையாற் பாடி னர்; பிறராற்பாடுதற்கரியன இப்போர்த் திறங் கள்," என்று இவ்வாறு பரணர் மேலிட்டுப் புகழ்ந் தனர்.

அதிகமான் கிள்ளிவளவனைத் துணைக்கொண்டு மலையமானைக் கொன்றனன் என்ற செய்தியைப் பெருஞ்சேரலிரும்பொறை அறிந்து, அதிகமான் மீது பெருஞ்சீற்றங் கொண்டனன். ஆனால், அதிக மான் மலையமானோடு போர் புரிந்தபோது சேர மன் னன் மலையமானுக்குத் துணை வந்திலன். மலையமான் திருமுடிக்காரி சேரனைத் தனக்குத் துணை புரியுமாறு அழைத்திலனோ, அன்றிச் சேரன் வந்து துணை புரிதற்கு வாய்ப்புக் கிடைத்திலதோ தெரிந்திலது. ஆயினும், பின்னர்ச் சேரன் அதிகமான்மீது பெருஞ்

சீற்றம் கொண்டனன். அதிகமானை அழித்தல், கொல்லிக் கூற்றத்தில் கொல்லி மலை நீங்கலாக எஞ்சிய பகுதியைக் கைப்பற்றல் ஆகிய இரண்டையும் சேரன் செய்ய விரும்பினன். ஆயினும், சேரன் உடனே போர் தொடங்கவில்லை. முன் அதிகமானுக்கு உதவி செய்த சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், மீண்டும் அதிகமானுக்கு உதவி செய்தல் கூடும் என்று சேரன் எண்ணினன். அவ்வெண்ணத்தினால் உடனே போர் தொடங்காமல், தன் படை வலிமையை நன்கு பெருக்கிக்கொண்டு போர் தொடுக்க எண்ணங் கொண்டனன் சேரன்.

அதிகமானும் பெருஞ்சேரலிரும்பொறையிடத்து ஐயங்கொண்டனன். தான் மலையமானை அழித்ததனாலும், கொல்லிக் கூற்றத்தில் கொல்லி மலை நீங்கலாக எஞ்சிய பகுதி தன்பாலிருத்தலாலும், தான் பனம்பூமாலையுடையவனாயிருத்தலாலும், எப்படியும் சேரன் தன்மீது போர் தொடுப்பான் என்ற எண்ணமே அதிகமான் உள்ளத்தில் நிலை பெறுவதாயிற்று. அதனால், அதிகமான் தன் படை வலிமையைப் பெருக்குதல் தக்க துணையைப் பெறுதல் ஆகிய வழிகளில் ஊக்கஞ் செலுத்தினான். சோழன் துணையோடு அக்காலத்திலிருந்த பாண்டியன் துணையையும் அதிகமான் நாடினான்.

அரிசில் கிழார் என்னும் புலவர், பெருஞ்சேரலிரும்பொறையிடத்துப் பேரன்புடையவர்; அம்மன்னனால் மிகப் பாராட்டப்பட்டவர். பதிற்றுப்பத்தில்

எட்டாம் பத்து இப்புலவரால் அம்மன்னன்மீது பாடப்பட்டது. இப்புலவர், பெருஞ்சேரலிரும் பொறைக்கும் அதிகமானுக்கும் போர் நிகழாவாறு தடுக்க எண்ணங்கொண்டனர். அதிகமானிடத்து அன்பு மிக்குடையராகிய ஔவையாரும் இப் போரைத் தடுக்க விரும்பினர். ஆனால், இவ்விருவரும் கோவூர் கிழார், ஆலந்தூர் கிழார் போல, அரசரிருவரும் போர் மேற்கொண்டு புறப்பட்ட பின் தடுக்க நினைந் திலர்; போர் மேற்கொண்டு புறப்படுவதற்கு முன்னரே தடுக்க முயன்றனர்.

அதிகமான், தொண்டை நாட்டரசனிடத்தில் ஔவையாரைத் தூதனுப்பி, அவன் மேற்கொள்ள இருந்த போரைத் தடுத்துவிட்டாற்போல, சேர மன்னனிடத்தும் ஔவையாரைத் தூதனுப்பி, அவன் போருக்கெழாவாறு தடுக்க முயன்றனன். ஔவையாரும் முன் பயன்கண்ட வழியை நினைந்து, சேரமன்னன்பாற்சென்றனர். சேர மன்னன் ஔவையாரை நோக்கி, "நும் நாட்டில் போர்த் திறமை மிக்க வீரர் உளரோ?" என்று வினவினன். அதிகமானைப் பற்றிப் புகழ்ந்துரைக்கத் தொடர்பு கிடைக்கப் பெற்ற ஔவையார், அதிகமான் பெரு மையை விரித்துரைத்து, அதனால் போரையொழிக்க எண்ணினர்.

ஔவையார், சேரனை நோக்கி, "வேந்தே, எம் நாட்டில் அடிக்கின்ற கோலுக்கஞ்சாமல் படமெடுத் துச் சீறும் பாம்பு போன்ற இளமையும் வலிமையும்

உடைய வீரர் மிகப் பலர் உள்ளனர். அவர்களே அன்றி, பொதுவிடமாகிய மன்றத்திலுள்ள மரக் கிளையிற்கட்டப்பட்ட முழவில் காற்றினால் அசைகின்ற அம்மரக் கொம்பு பட்டு ஒலியெழுமானால், அதனைப் போர்ப் பறையொலி என்று மகிழ்ந்து, உடனே போருக்குப் புறப்படுவான் என்னுடைய தலைவனாகிய அதிகமான்,''* என்று கூறினர். இக் கருத்தமைந்த புறநானூற்றுப் பாடலில் ஔவையார், 'வேந்தே' என விளித்துக் கூறியுள்ளனர். 'வேந்து' என்னுஞ்சொல் தமிழ் மூவேந்தர்கட்கேயுரிய சொல் என்பது முன்னரே காட்டப்பட்டது. அதனால், இங்கு ஔவையாரால் விளித்துக் கூறப்பட்டவன் தமிழ் மூவேந்தர்களுள் ஒருவனாகவே இருத்தல் வேண்டும். சேரமன்னனே அப்போது அதிகமானோடு பகைமை உடையனாய் இருந்தானாதலின், அவனையே ஔவையார் 'வேந்தே' என்று விளித்து, அதிகமானுடைய வலிமை, அவனுடைய வீரர் வலிமை இவற்றை எடுத்துக் கூறினர் எனக் கொள்ளுதலே பொருத்தமாகும்.

சேரமன்னனும் இம்முறையை மேற்கொண்டான் என்பதைப் பதிற்றுப்பத்து 73-ஆம் பாட்டால் அறிகின்றோம்: சேரன் அரிசில் கிழாரை அனுப்பித் தன் படைப் பெருமையைப் பிற மன்னர்களுக்கு எடுத்து விளக்குமாறு செய்தனன். அப்பாடலில், அரிசில் கிழார் சேரமன்னனை நோக்கி,

*புறம். 85.

**"வளனும் ஆண்மையும் கைவண் மையும்
மாந்தர் அளவிறந் தனஎனப் பன்னாள்
யான்சென் றுரைப்பவும் தேறார் பிறரும்
சான்றோர் உரைப்பத் தெளிகுவர் கொல்என
ஆங்குமதி மருளக் காண்குவல்
யாங்குரைப் பேனென வருந்துவல் யானே."***

என்று கூறினர். அதாவது, "உன்னுடைய செல்வம் ஆண்மை கொடை இவை மக்கள் அறிவிற்கு அப்பாற்பட்டவை (மிகமிக அதிகமானவை) என்று பிற மன்னர்க்கு யான் பல முறை எடுத்துரைத்தும், அவர் தெளிவாக உன் பெருமைகளை உணர்ந்திலர். பிறசான்றோர் எடுத்துக் கூறியும், அவர் மதிமயங்கியவராகவே உள்ளனர். இனி அவர்கட்கு எங்ஙனம் எடுத்துரைப்பது என வருந்துகின்றேன்!" என்று அரிசில் கிழார் கூறினர்.

'அரிசில் கிழார் யாருக்கு இவ்வாறு எடுத்துரைத்தனர்?' என்பதற்குப் பாட்டில் வெளிப்படையான குறிப்பொன்றுமில்லை. ஆயினும், அப்போதிருந்த நிலைமையை நோக்கின், சோழனும் பாண்டியனுமே இவ்வாறு அரிசில் கிழாரால் எடுத்துரைக்கப்பட்டவர் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்; அதிகமானும் எடுத்துரைக்கப்பட்டிருக்கலாம். ஏனெனின், சோழனையும் பாண்டியனையும் அதிகமானுக்குத் துணை செய்ய வாராதபடி இவ்வாறு தடுத்துவிட்டால், அதிகமானுடன் தான் செய்யக் கருதியுள்ள போர் எளிதாக முடியும் என்று சேரன்

*பதிற்று. 73 : 12-17.

எண்ணினன். 'அதிகமானுக்கு எடுத்துரைப்பதால் பயன் என்னை?' எனின், அதிகமான், சேரன் படைப் பெருமையை உணர்ந்து, கொல்லிக் கூற்றம் முழுவதையும் சேரனுக்குக் கொடுத்துவிட்டு, அதனால் இப் போரைத் தவிர்க்க எண்ணங்கொள்வானாயின், அதுவும் நன்று என்பது சேரன் கருத்தாகலாம். இதனை உள்ளத்திற்கருதியே புலவர் அரிசில் கிழார் இம் முயற்சியை மேற்கொண்டனராவர். ஆயினும், ஔவையார், அரிசில் கிழார் ஆகிய இருவர் முயற்சிகளும் பயன் தந்தில.

இறுதியாகப் போர் தொடங்கிவிட்டது. சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையே முதலிற் படையெடுத்து, அதிகமான் தலைநகரமாகிய தகடூரை நோக்கிச் சென்றனன். சேரன் போர் மேற்கொண்டு படையெடுத்துச் சென்ற பின்னும், அதிகமானிடத்திற் பேரன்புடைய ஔவையார் அப்போரை எப்படியாவது தடுக்க முயன்றனர். ஆனால், அவர் முயற்சி முழுதும் அதிகமான் வலிமையைப் பகைவனுக்கு எடுத்துக் கூறி, அவன் போரைக் கைவிடும்படி செய்வதிலேயே சென்றது.

"பகைவர்களே, அதிகமானோடு பகைமை கொண்டு போர்க்களம் புகுதலை ஒழிக! அதிகமான் வலிமையை நன்கு உணர்க! ஒரு நாளில் எட்டுத் தேர்கள் செய்து முடிக்கவல்ல ஒரு தச்சன், பலவாறு நன்கு எண்ணி ஒரு மாத காலத்தில் ஒரு சக்கரம் மட்டும் செய்து முடிப்பானாயின், அச்சக்கரம் எத்

துணை வலிமையுடையதாயும், எவ்வளவு வேகமாக ஓடும் வன்மையுடையதாயும் இருக்கும் என்றெண்ணிப்பார்மின்! எங்கள் தலைவனாகிய அதிகமான், அச்சக்கரத்தையொத்தவன். போர் செய்வதில் விரைவு, பகைவர்க்கஞ்சாமல் அவர் செய்யும் இடையூறுகளால் மனந்தளராமல் அவர்களை வெல்லும் வன்மை ஆகிய இரண்டினாலும் அதிகமான் அச்சக்கரத்தை ஒத்தவன். அதனால், போரைக் கைவிடுமின்!''* என்று கூறினார் ஔவையார்.

மேலும் ஔவையார், பகை வீரர்களை நோக்கி, "வீரர்காள், நுமக்கொன்று கூறுகின்றேன்; அதனை நன்கு போற்றிக் கேண்மின்: முதலை வாழும் நீர் நிலை, முழங்கால் அளவினதாகக் குறைந்த நீரை உடையதாயினும், அந்நீரில் வாழும் முதலை அங்கு வரும் யானையையும் கொல்லும் வலிமையுடையதாகும். அம்முதலையையொத்த வலிமை உடையவன் எங்கள் அதிகமான். அவன் போரில் மிக்க நுண்ணறிவு வாய்ந்தவன்; நுண்ணறிவோடு செயலாற்றும் வன்மையுமுடையவன். நீவிர் அவன் திறமையறியாமல், அவனை இளையன் என்றெண்ணிப் போர் செய்யப் புகுவீராயின், நீவிர் வெற்றி பெற மாட்டீர்! இதனை நன்குணர்மின்,''† என்றும் கூறினார்.

இக்கருத்தை நோக்குமிடத்து, அதிகமான், முற்பட்டுப் பிறரோடு போர் புரியப் படையெடுத்துச்

*புறம். 87. †புறம். 104.

சென்ற போது இக்கருத்துக் கூறப்பட்டதாகத் தோன்றவில்லை. எவரும் தாமிருக்குமிடத்தில் அதிக வன்மையுடையராவர். அதற்கு,

> "நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற."*

என்றபடி, முதலை, தானிருக்குமிடத்தில் யானையையும் வெல்லும் என்பதை உவமை கூறுதல் உண்டு. இங்கு ஔவையார் அதிகமானுக்கு முதலையை உவமை கூறியதனுல், அதிகமானிருக்குமிடத்திற்கு அவனோடு போர் செய்யப் படையெடுத்து வந்த பகைவனையும் அவன் வீரர்களையும் நோக்கியே இங்ஙனம் கூறினர் எனக் கொள்ளுதல் வேண்டும். சேரன் படையெடுத்து வந்த போது அவனையும் அவன் வீரர்களையும் நோக்கியே இங்ஙனம் கூறினர் ஔவையார் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். இதனோடு முன்னே கூறப்பட்ட கருத்தும் சேரனையும் அவன் வீரர்களையும் நோக்கிக் கூறப்பட்டதாகவே கொள்க.

மேலும், ஔவையார், பகை வீரர்களை நோக்கி, "மறவர்களே, எங்கள் அதிகமானுடைய வாள் வேல் முதலிய படைக்கலங்கள் அழகுக்கமைந்தவையல்ல; போரிற்பகைவர் உடல்களில் தைத்தலால் உரு விழுந்து நிலைகெட்டுச் சிதைந்துள்ளன. அவனுடைய யானைகள் கொம்புகளினுல் பகைவர் மதிற்கதவுகளைக் குத்தியுடைத்தலால், அவற்றிலிடப்பட்டிருந்த

*குறள், 495.

பூண்கள் சிதைந்து கழன்றன; அவன் குதிரைகள் போர்க்களங்களில் எதிர்த்த வீரர்களைத் தள்ளி மிதித்து ஓடுதலால் இரத்தக் கறை மாறாதனவாயின; அதிகமானே எனின், பகைவர் நாட்டைத் தன்னடிப் படுத்தத் தக்க கடல் போன்ற படையுடையன்; பகைவர் அம்பு பட்டுத் துளைத்த பரிசையையுடையன்; இத்தகைய படைகளையுடைய அதிகமானேடு போர் மேற்கொண்டவர்கள் எங்ஙனம் தப்பிப் பிழைத்தல் இயலும்! ஆதலால், உங்கள் வளமிக்க ஊர்கள் உங்களிடமே இருத்தல் வேண்டுதிராயின், உடனே சென்று அதிகமானுக்குத் திறையிறுமின்; இன்றேல், நீவிர் திறை கொடாமல் வாழ்ந்திருத்தலை அவன் உடன்படான். நீவிர் நும் மனைவியரை விட்டுப் பிரிதல் உறுதியாகும். யான் கூறியவற்றை நன்குணர்ந்து போர் செய்க!''* என்று கூறினர். 'யான் கூறியவற்றை நன்குணர்ந்து போர் செய்க!' என்றது, 'நன்குணர்வீராயின், நீவிர் போர் புரியீர்,' என்று கூறியவாறும். ஔவையார் கூறியவற்றிற்குச் சேரனும் அவன் வீரரும் செவி சாய்த்திலர்.

சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடிய அரிசில் கிழார், ஒரு பாட்டில், சேரன் படைப் பெருமையை வழிப் போவார்க்குக் கூறுவார்போல, பகைவர்க்கு எடுத்துக் கூறியுள்ளனர்: 'வழிச்செல்கின்றவர்களே, 'சேரன் எவ்வளவு படையுடையன்?' என்பீர்களாயின், அவன் படையிலுள்ள தேர்களை

---

* புறம். 97

யும் குதிரைகளையும் வீரர்களையும் எண்ண இயலாமை யினால், யான் எண்ணினேனல்லன்; 'அவன் படையி லுள்ள யானைகளையேனும் எண்ணினீரோ?' எனின், அவைகளையும் எண்ணினேன் அல்லேன். ஆனால், கொங்கர் பசுக் கூட்டம் புறப்பட்டுச் சென்றாற் போல, அவன் படையில் யானைக் கூட்டம் செல்வ தைக் கண்டேன்,''* என்று அவன் படைப் பெரு மையைக் கூறியுள்ளனர்.

இப்பாட்டையும் இதற்கு எழுதப்பட்டுள்ள துறைக் குறிப்பையும் அதன் விளக்கத்தையும் நோக்குமிடத்து அதிகமானுடைய தகடூரை நோக்கிச் சேரன் படை செல்வதையே இப்பாட்டில் அரிசில் கிழார் கூறினர் எனக் கொள்ளுமாறு அவை உள்ளன.

இவ்வாறு, சேரன் முற்பட்டுப் படையோடு சென்று அதிகமானுடைய தகடூரை முற்றுகை யிட்டனன். அதிகமான் உடனே வெளிப்போந்து போர் புரியாமல், அரணடைத்துக்கொண்டு, தனக் குத் துணை செய்ய உடன்பட்டிருந்த சோழனும் பாண்டியனும் வருதலை எதிர்பார்த்து உள்ளிருந் தனன்; அவர்கள் வந்தவுடன் புறப்பட்டுச் சேர னோடு போர் புரிந்தனன். போரில் சேரன் வெற்றி பெற்றான்; அதிகமான் இறந்தான்; சோழனும் பாண்டியனும் தோற்றனர்; சேரன் அதிகமானு டைய தகடூரை அழித்துத் தன் ஊர் திரும்பினன்.

*பதிற்றுப்பத்து, 77

**" பல்வேற் றுனை யதிக மாளுெடு**
**இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று**
**முரசும் குடையும் கலனும் கொண்டு "***

என்று பதிற்றுப்பத்தில் பெருஞ்சேரலிரும்பொறை யைப்பற்றிய எட்டாம் பத்தின் பதிகத்திற் கூறப் பட்டிருத்தலால், இப்போரிற் சோழ பாண்டியர் களும் அதிகமானுக்குத் துணையாய் வந்து போர் புரிந்து தோற்றனர் என்று கொள்ளுதல் வேண்டும். இப்போரிற் சோழ மன்னன் இறந்துவிட, அவன் நாட்டைச் சேர மன்னன் கைப்பற்றினன். இதனை,

**" காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்**
**புகாஅர்ச் செல்வ! பூழியர் மெய்ம்மறை!†**

என்று அச்சேரனைப் பற்றிக் கூறும் பாட்டினல் அறியலாம். இவ்வாறு பாண்டியனுடைய மதுரைமா நகரம் சேரனுற்கைப்பற்றப்பட்டதாகக் குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை. அதனுல், பாண்டியன் முடியும் வரை இராமல், போரில் வெற்றியுறுதல் இயலாது என்றறிந்தவுடன் திரும்பிவிட்டான் என் றேனும், பாண்டியன் தான் நேரே படையோடு போருக்கு வாராமல் தன் படையை மட்டும் அதிக மானுக்கு உதவி செய்யுமாறு அனுப்பினன் என்றே னும் கொள்ளுதல் வேண்டும். பாண்டியன் இடை யில் திரும்பினுனயினும், அவன் படை தோல்வி யுற்று அழிக்கப்பட்டதாயினும், பாண்டியனும் தோற்றுன் என்றே கொண்டு, அதிகமானேடு இரு பெரு வேந்தரையும் சேரன் வென்றுன் என்று புலவர் பாடுவாராயினர்.

---

* பதிற்றுப் பத்து, 76   † பதிற்றுப் பத்து, 73

இவ்வாறு ஔவையாரும் அரிசில்கிழாரும் முயன்றும் பயனில்லாமற்போகவே, போர் தன் கொடிய விளைவைப் பயந்தே விட்டது.

அதிகமான் இறந்த பின் ஔவையார் அவன் பிரிவைத் தாங்க மாட்டாராய், பலவாறு வருந்திப் பாடியுள்ளனர். "அதிகமான் மார்பிற்றைத்த வேல் பாணர் கையிலுள்ள பாத்திரங்களைத் துளைத்துச் சென்றது; இரந்து பொருள் பெறுவார் கைகளைத் துளைத்துச் சென்றது; அவ்வதிகமானல் காப்பாற்றப்பட்ட சுற்றத்தார் கண்களிலுள்ள பாவை ஒளி மழுங்குமாறு செய்தது; அழகிய சொற்களை ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய புலவர் நாவிலே சென்று தைத்து நின்றது; இனிப் பாடுவாருமில்லை; பாடுவார்க்கு ஒன்றீவாருமில்லை; குளத்திலுள்ள தேன் பொருந்திய அழகிய நன்மலர் சூடுவாரில்லாமல் வீணே கழிந்தாற்போல, பிறர்க்கு ஒன்றும் கொடாமையினல் பிறராற் பாராட்டப்படாமல் இறப்போர் பலராவர்,"* என்று வருந்திப் பாடியுள்ளனர்.

* புறம். 235 : 10-20

# 5. கபிலர்

## பாரியின் சிறப்பு

சோழ பாண்டியரோடு அதிகமான் ஒருபுறமும் சேரன் மற்ருெரு புறமுமாய் நின்று நிகழ்த்திய இப் போரைப்போல மற்ருெரு பெரும்போரும் நிகழ்ந் துள்ளது. அது வேள்பாரிக்கும் தமிழ் மூவேந்தருக்கு மிடையே நிகழ்ந்த போராகும்.

வேள்பாரி முற்கூறப்பட்ட வள்ளல்கள் எழு வருள் ஒருவன்; 'பறம்பு நாடு' என்ற நிலப்பகுதியை ஆண்டவன்; 'பறம்பு மலை' என்ற வளமிக்க மலை, அப்பறம்பு நாட்டில் பாரிக்கு உரியதாய் இருந்தது.

அப்பறம்பு மலை உழவர் உழுதொழிலைச் செய் யாமலே பல பயன்களைத் தரும். மூங்கில்நெல், பலாப்பழம், வள்ளிக் கிழங்கு, தேன் ஆகியவை அவற்றுள் சிறந்தவைகளாகும். சோலைகளில் மயில் அழகாக ஆடிக்கொண்டிருக்கும்; பெரிய மலைச் சிக ரங்களில் குரங்குகள் தாவி விளையாடிக்கொண்டிருக் கும். அக்குரங்குகள் பறித்து உண்டு வெறுத்து மேலும் பறிக்காதவாறு காயும் பழமும் மிகுதியாக விளையும் சிறப்புடையது அம்மலை. அங்கு முல்லை முதலிய பூக்கள் மிகுதியாகக் கிடைக்கும். வேள் பாரியின் செங்கோற்சிறப்பினுல், சான்றோர் பலர் அப்பறம்பு நாட்டிற் கூடி வாழ்ந்தனராதலால், அங்கு மழை வளங் குறையாதிருந்தது. நிலவளத் தாலும், குறையாத மழைவளத்தாலும், காலமறிந்து

தொழில் செய்யப்படுதலாலும், புன்செய்ப் பயிர்களாகிய வரகு, தினை, எள், அவரை முதலிய பொருள்கள் அங்கு மிகுதியாய்க் கிடைத்தன. அப்பறம்பு மலையின்கண் உள்ள சுனைகள் பலவாறாகப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளன: அப்பறம்பு மலை ஆகாயம் போன்றுள்ளது. ஆகாயத்திலுள்ள மீன்கள் போல்வன அதன்கண் உள்ள சுனைகள். தெளிந்த நீரையுடைய சிறிய சுனைகள் பலவுள்ளன. பாரியைப் பற்றிப் பேசப்படாத பிற இடங்களிலும் பறம்பு மலையின் சுனை, அதன் சிறப்புக் கருதிப் புகழப்பட்டுள்ளது:

**"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்**
**ஓரூ ருண்மையி னிகந்தோர் போல"***

**"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்**
**தைஇத் திங்கள் தண்ணிய தரினும்"†**

என்று கூறப்பட்டுள்ளது.

அத்தகைய பறம்பு மலையையும் அதனைச் சூழ்ந்த பறம்பு நாட்டையும் ஆண்ட வேள்பாரி, சிறந்த ஆட்சி முறையும், வீரமும், பெருங்கொடையுமுடையவனாய் விளங்கினான்.

**"கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி."‡**

என்ற அடி அவனாட்சிச் சிறப்பை நன்கு விளக்கும். பற்றிப் படர்வதற்குக் கொள்கொம்பு இன்றித் தவித்து ஆடிக்கொண்டிருந்த முல்லைக் கொடியைப் பார்த்து மனமிரங்கி, அது படருமாறு தான் ஊர்ந்து

*புறம். 176. †குறுந்தொகை, 196. ‡புறம். 117 : 6.

THE MADURA TAMIL SANGAM

வந்த தேரை அதனருகே நிறுத்திய அவ்வளவு அருளுடையவன் பாரி. அவன் நாடு முந்நூறு ஊர் களையுடையது. அம்முந்நூறு ஊர்களையும் பரிசி லர்க்கு வழங்கினன் என்று கூறியுள்ளனர் பொய்யா நாவிற்கபிலர். பாரி,

" நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோன் "*

என்று கூறப்பட்டுள்ளான். 'நிழல் தருவதற்கு வேறு மரங்களில்லாத ஒரு நீண்ட வழியில், நிழல் தரக்கூடிய ஒரு பெரிய மரம் நின்றால், அம்மரம் மக்களுக்கு எவ்வளவு பயனுடையதாய் இருக்குமோ, அவ்வளவு பயனுடையவனாய் இருந்தான் வறி யோர்க்கு வேள்பாரி,' என்பதும், 'அக்காலத்திருந்த மூவேந்தர்களைவிடப் பெருங்கொடையுடையனாய் விளங்கினன் வேள்பாரி,' என்பதும் இப்பகுதியின் கருத்துக்களாம். கடவுளையே பாடும் இயல்புடைய சுந்தரமூர்த்தி நாயனாரால்

" கொடுக்கி லாதானைப் பாரி யேஎன்று
கூறி னும்கொடுப் பாரிலை."

என்று கூறப்பெற்ற சிறப்புடையவன் வேள்பாரி.

வேள்பாரி செங்கோற்சிறப்பும் கொடைப் பெருமையும் உடையனாய் விளங்கியதுபோலச் சிறந்த போராற்றலுடையவனாயும் விளங்கினன்.

---

*புறம். 119.

"பகைவர்
ஓடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற லூடே."*

என்று கபிலர் கூறியுள்ளனர். 'வேள்பாரி தன்னை எதிர்த்த பகைவர் தோற்று ஓடும்போது, அவர் வீரக் கழலால் உண்டாகும் ஆரவாரத்தைக் கேட்டு, தோற்றோடும் அவர்களைப் பின் தொடர்ந்து போரிடுவது பெருமையாகாதென்றெண்ணி, அவர் ஓடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றான்,' என்பது இதன் கருத்து.

## பாரிக்கும் மூவேந்தர்களுக்குமிடையே போர் தோன்றக் காரணம்

இவ்வாறு பல வகையாலும் சிறப்புற்று விளங்கிய பாரியோடு சேர பாண்டிய சோழராகிய மூவேந்தரும் கூடி ஒருகாற் போர் புரிவாராயினர். இப்போர் நிகழ்ந்ததற்குக் காரணம் இன்னதென்பது உறுதியாகத் தெரியவில்லை. புறநானூற்றுப் பாடல்கட்குத் திணை துறை முதலிய குறிப்புக்கள் எழுதியவர், வேள் பாரி பெண் கொடுக்க மறுத்ததனால் இப்போர் நிகழ்ந்தது என்ற குறிப்புக் காட்டியுள்ளனர். ஆனால், மகளிர் காரணமாக மூவேந்தரும் வேள்பாரியோடு போர் நிகழ்த்தினர் என்பதற்குரிய குறிப்பு ஒன்றும் பாட்டிற் காணப்படவில்லை. அதற்கு மாறாகப் பொறாமையினாலோ, வேறு எக்காரணத்தினாலோ வேள்பாரியினிடத்துப் பகைமை கொண்டு,

*புறம். 120 : 19–21.

அவனை ஒழித்துவிட்டு அவன் நாட்டைக் கைப்பற்ற எண்ணி, மூவேந்தரும் போர் தொடுத்தனர் என்று எண்ணுதற்கேற்ற குறிப்புக்கள் பாரியைப்பற்றிய பாடல்களிற்காணப்படுகின்றன. அன்றியும், மகளிரை விரும்பிப் போர் தொடுத்தாராயின், பின் அம்மன்னர்கள் பாரி மகளிரை மணந்துகொள்ளாமல் விட்டுவிட்டதற்குக் காரணந் தோன்றவில்லை. மேலும், 'பாரி மகளிர்' என்ற தொடர் பாடல்களிற் காணப்படுதலால், பாரியின் மகளிர் ஒருவர்க்கு மேற்பட்டவர் என்பது மட்டும் தெரிகின்றதேயன்றி, எத்துணையர் என்பது உறுதியாகத் தெரிந்திலது. மற்றும், 'மூவேந்தருள் பாரி மகளிரை மணந்துகொள்ள விரும்பிப் போர் தொடுத்தவன் யார்! அவனுக்குப் போர்த்துணையாய் வந்த மற்றிருவர் யார்!' என்னும் ஐயமும் உண்டாகின்றது. வேள் பாரி புலவர்களையும் ஏனைய வறியவர்களையும் மிக்க அன்போடு ஆதரித்து, அவர் வேண்டுவன வழங்கினைதலால், புலவர்கள் மூவேந்தர்களைவிடச் சிறப்பாகப் பாரியைப் புகழ்வார்களாயினர்கள்.

> **"நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்**
> **பணைகெழு வேந்தரை யிறந்தும்**
> **இரவலர்க் கீயும் வள்ளியோன்"***

என்ற பகுதியைச் சான்றாகக் காண்க. இதனால், பொறாமை கொண்டு, பாரியை ஒழித்து, அவன் நாட்டைக் கைப்பற்ற எண்ணி மூவேந்தரும் போருக்கெழுந்தனர் என்றெண்ண இடமுண்டு.

*புறம். 119.

"கூர்வேற் பாரியது
அருமை அறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்"*

என்றபகுதியில், 'மூவேந்தர்களும் தமிழகத்துத் தலைவர்களுள் ஒருவனாகிய பாரியினுடைய சிறப்புக்களை எண்ணி மகிழ்தல் வேண்டும்; அங்ஙனம் அவன் சிறப்புக்களை எண்ணி மகிழாமல், போர்மேற் கொண்டனரே!' என்று கபிலர் வருந்திக் கூறியது மேற்கூறப்பட்ட கருத்தையே வலியுறுத்துவதாகும்.

பாரியினிடத்துப் பகைமை கொண்ட மூவேந்தரும் ஒன்று கூடிப் படையெடுத்துச் சென்று, அவன் பறம்பு மலையை முற்றுகையிட்டனர். இப் போரையொழிக்கக் கபிலர் மிக முயன்றனர்.

## போரை விலக்கக் கபிலர் முயற்சி

மூவேந்தரும் படையோடு சென்று பறம்பு மலையை முற்றுகையிட்டிருந்த போது, கபிலர் உள்ளிருந்த வண்ணம் கிளிகளைப் பழக்கி, அவை வெளிச் சென்று நெற்கதிர் முதலியவற்றைக் கொண்டுவரும் படி செய்து, அவற்றைக்கொண்டு உள்ளிருந்தவர் கட்கு உதவி செய்தனர் என்று அகநானூற்றுப் பாடல்களில் ஔவையார், நக்கீரர் இருவரும் குறிப்பிட்டுள்ளனர்.

கபிலர் ஔவையாரைப் போல்வே போரை யொழிக்க முயன்றனர்; பாரியின் வீரச் சிறப்பைப் பகைவர்க்கு எடுத்துக் கூறி, அவர் போரைக்

---

*புறம். 116:16-18.

கைவிடுமாறு செய்ய முயன்றனர். மூவேந்தர்களும் இரு முறை பாரியின் பறம்பு மலையை முற்றுகை யிட்டனர். முதன்முறை படையோடு சென்று முற்றுகையிட்ட போது, பாரி பரிசிலர்க்குத் தன் நாட்டிலுள்ள முந்நூறு ஊர்களையும் வழங்கிவிட வில்லை. கொடுக்கப்படாமல் எஞ்சிய ஊர்களுமிருந் தன. கபிலர் பாரியினிடத்துப் பேரன்புடையராத லின், அப்பாரியின் வீரச் சிறப்பை அப்பகைவர் கட்கு எடுத்துரைப்பாராயினர். வீரச் சிறப்போடு அவன் கொடைப் பெருமையையும் எடுத்துரைத் தனர். கபிலர், பகைவர்களாகிய மூவேந்தர்களையும் நோக்கி, ''நீவிர், பெரிய அளவான நால்வகைப் படைகளையும் உடையீராயினும், பாரியோடு போர் செய்து அவனை வெல்லுதல் நும்மால் இயலுங் காரியமன்று. பாணர் பொருநர் போல ஆடல் பாடல்களில் வன்மையுடையீராய், நும் மனைவியர் விறலியர் போல நும்மைப் பின் தொடர்ந்து வர, நீவிர் பாரியிடம் செல்வீராயின், அவன் தன் நாட் டையும் மலையையும் ஒருங்கே நுமக்களிப்பன்,''* என்றனர்.

இம்முதல் முற்றுகையில் பாரி வெளிப்பட்டுப் பகைவரோடு போர் புரிந்து, அவர்கள் தோற்றோடு மாறு செய்தனன். கபிலர்,

''பகைவர்
ஓடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய்''†

---

*புறம். 109 †புறம். 120

என்று பாரியைப் புகழ்ந்தது இம்முதற்போர் வெற்றியைக் கருதியேயாகும்.

மூவேந்தரும் அவ்வளவில் நில்லாமல், மீண்டும் ஒன்று கூடிப் படையோடு சென்று முற்றுகையிட்டனர். அப்போது பாரி தன்னாட்டிலுள்ள முந்நூறு ஊர்களில் எஞ்சியவற்றையும் பரிசிலர்க்கு வழங்கி விட்டான். அதனால், இரண்டாம் முறை கபிலர் பகைவரை நோக்கிக் கூறும் போது நாடு இருப்பதாகவும் அதனைப் பெறலாமென்றும் கூறினாரில்லை. "எதிர் நின்று பகைவரை வெல்லும் படையையுடைய நீவிர் மூவிரும் ஒன்றுகூடிப் போர்புரியினும் பாரியை வென்று அவன் பறம்பைக் கொள்ளுதல் இயலாது; பறம்புநாடு முந்நூறு ஊர்களையுடையது; முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர்; யானும் பாரியும் இருக்கின்றோம்; பறம்பு மலையும் உளது; நீவிர் இப்போரைக் கைவிட்டு இரவலராகப் பாடிக் கொண்டு சென்றால், பறம்பு மலையைப் பெறலாம்; அன்றியும், இரவலர் பாரியிடம் சென்று, 'நீயே யாங்கள் வேண்டும் பொருள்,' என்று வேண்டுவராயின், அவர் விருப்பத்தையும் பாரி மறுக்கமாட்டான். அவர்க்குரிய பொருளாகத் தன்னையே கொடுத்துவிடுவான்,"* என்று கபிலர் பாரியின் சிறப்பைக் கூறினார்.

மூவேந்தரும் முன்னர்ப் பாரியோடு போர் செய்து தோற்றோடியவர்; அப்போது அவன்

* புறம். 110

போராற்றலை நன்கு உணர்ந்தவர்; அதனால், பாரியைப் போரினால்வெல்லுதல் இயலாதென்று உணர்ந்தனர்; ஏதேனும் ஒரு வஞ்சகத்தினால் பாரியை ஒழிக்க எண்ணங் கொண்டனர்; கபிலர் கூறியதைத் தம்வஞ்சத்திற்குத் துணையாகக் கொண்டனர்; "இரவலர் வேறு பொருளொன்றும் வேண்டாமல், பாரியையே விரும்பிக் கேட்பினும், அவன் மறுக்காமல் தன்னையே கொடுத்துவிடுவான்," என்று கபிலர் பாரியின் கொடைச் சிறப்பைப்பற்றிக் கூறியதைத் தம் சூழ்ச்சிக்குத் துணையாகக் கொண்டு, ஏதோ வஞ்சகச் செயலினால் பாரியை முடித்துவிட்டனர்.

புறநானூற்று உரையாசிரியர்,

**"வென்றெறி முரசின் வேந்தர்எம்**
**குன்றும் கொண்டார்;யாம் எந்தையு மிலமே."***

என்று பாரி மகளிர் பாடிய பாடற்பகுதியின் பொருளை விளக்குமிடத்து, "ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும், வஞ்சித்துக் கொன்றமையின், 'வென்றெறி முரசின் வேந்தர்' என்றது ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது," என்று கூறியிருப்பதனால், மூவேந்தரும் வஞ்சகச் செயலினால் பாரியை முடித்தனர் என்பது தெளிவாகின்றது. கபிலர் மிக முயன்றும், அவர் முயற்சி நற்பயன் தந்திலது. பாரியின் முடிவே முடிவாயிற்று.

பாரிக்கும் மூவேந்தருக்குமிடையே நிகழ்ந்த போர், வல்விலோரி, மலையமான், அதிகமான், சேரன்

*புறம். 112.

இவர்களுக்கிடையே நடந்த போர்கட்கு முன் நிகழ்ந்ததாதல் வேண்டும். பாரியின் போரில் மூவேந்தரும் கூடி நின்று பாரியோடு போரிட்டனர். அதிகமானொடு சேரன் நிகழ்த்திய போரில் சேரன் ஒரு புறமும், சோழ பாண்டியரும் அதிகமானும் மற்றொரு புறமுமாய் நின்று போரிட்டனர். அப்போது மூவேந்தர்களுக்குள் ஒற்றுமையில்லை. பாரியுடனியற்றிய போரில் மூவேந்தரும் ஒற்றுமையுடையராகக் காணப் படுகின்றனர். அன்றியும், அதிகமான் போரில் சோழன் இறந்தான் எனக் கருத இடம் உண்டு. இவற்றால் அதிகமானுடைய தகடூரிடத்து நிகழ்ந்த போருக்கு முன்னரே பாரியின் போர் நிகழ்ந்தது பாரியும் இறந்தான் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

எண்ணிப் பார்த்தல் வேண்டும்!''* என்று இச் சிறந்த கருத்துக்களை இனிய சொற்களால் எடுத்துரைத்தனர் புலவர். புலவர் பொன் மொழிகளைக் கேட்ட கிள்ளி வளவன், மலையமான் மக்களைக் கொல்லாமல் விடுத்தனன்.

இங்குப் புலவர் கூறிய அறவுரைகளில் ஒரு குறிப்பு நினைதற்குரியது. இங்குக் கிள்ளி வளவனைப் புலவர் எவ்வாறு எவ்வளவு புகழினும் அமையும். குழந்தைகளின் தந்தையாகிய மலையமானைப்பற்றிக் கூறுவதில் புலவர் விழிப்போடு பேசுதல் வேண்டும். கிள்ளிவளவன் மலையமானிடத்துப் பகைமையுடையவன். அப்பகைமை முதிர்ச்சியே இக்குழந்தைகளைக் கொல்லத் துணிந்ததற்கும் காரணமாகும். இந்நிலையில், "மலையமான் சிறந்த போர் வீரன்; வீரரெல்லாரும் போற்றும் வீரன்; மன்னரெல்லாரும் தன்னைத் துணை நாடி நிற்குமாறு சிறந்து விளங்கிய வீரன்," என்று அவன் வீரத்தைப் புகழ்ந்தால்,கிள்ளிவளவன் பகைமை தணியாமல் ஓங்குதலும் கூடும்; அதனல், புலவர் மலையமான் வீரத்தை எடுத்துக் கூருமல், அவன் வண்மையை எடுத்துக் கூறினர். "வறுமையுற்ற புலவர்க்கு வழங்கும் வள்ளலாகிய மலையமான் மக்கள் இவர்கள்," என்றதனல், "இக்குழந்தைகளும் தம் தந்தையைப் போலவே புலவர் வறுமை தீர வழங்கும் வள்ளல்களாய் விளங்குதல் கூடும்," என்ற குறிப்புத் தோன்றுதல் காண்க.

---

* புறம். 43

'மலையமான் மக்கள்' என்று குறிப்பிடப்பட்டிருத்தலால், அவன் மக்கள் இருவரேனும் இருந்திருத்தல் வேண்டும். ஒருவன் சிறந்த வீரனாய்ப் புலவர் பாடும் புகழுடையனாய் விளங்கினான். இதனைப் புறநானூறு 174-ஆம் பாடலால் அறிகின்றோம். இவன் பெயர் திருக்கண்ணன் என்பது. இவன் பெரியனாய்ச் சிறந்த வீரனாகிச் சோழர் படைத் துணைவனாய் விளங்கினான். அதனால், இவனுக்குச் 'சோழிய ஏனாதி' என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. இவன் மலையமான் மகனாதலால், 'மலையமான்' என்ற அடைமொழியும் சேர்த்து, 'மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்' என வழங்கப்பட்டுள்ளான். இவன் ஒரு சோழ இளவலைப் பகைவர் கைப்படாமற் கொண்டு வந்து, தன்னுடைய முள்ளூர் மலையுச்சியில் வைத்துக் காப்பாற்றிப் பின் சோழ அரசாட்சியை அடையுமாறு செய்தான் என மேற்குறிப்பிடப்பட்ட புறநானூற்று 174-ஆம் பாடல் கூறுகின்றது. எனவே, புலவர் கோவூர் கிழாரால் காப்பாற்றப்பட்ட மலையமான் மக்களுள் ஒருவன் திருக்கண்ணன் என்ற பெயருடையனாய்ச் சிறந்த வீரனாய்த் தன் தந்தையின் (திருக்கோவலூரைத் தலைநகராய்க் கொண்டதும் முள்ளூர் மலையையுடையதுமாகிய) நாட்டைக் கைப்பற்றிக் குறுநில மன்னனாய் அரசாண்டனன் என்பதும், தன் தந்தையைப்போல அவ்வப்போது பொருள் கொடுப்பார்க்குப் படைத்துணையாய்ச் செல்லாமல், சோழர்க்கே படைத் துணைவனாய்

விளங்கினன் என்பதும் அப்பாடலாலும் அதன் குறிப்பாலும் அறிகின்றோம். மற்றொருவன் செய்தி தெரிந்திலது. 'சோழிய ஏனாதி திருக்குட்டுவன்' என்றொருவன் காணப்படுகின்றான். அவன் மலையமான் மகனோ, வேறொருவனோ என்பது தெரிந்திலது.

## 2. புலவன் இளந்தத்தனைக் கோவூர்கிழார் காத்தல்

சோழன் நலங்கிள்ளி சோழன் நெடுங்கிள்ளியி னிடத்துப் பகைமையுடையனாய்ப் போர் மேற் கொண்டு, நெடுங்கிள்ளியை இரு முறை முற்றுகை யிட்டதும், அவ்விரு முறையும் புலவர் கோவூர்கிழார் எய்தித் தக்கவாறு அறவுரை கூறி அம்முற்றுகை களைத் தவிர்த்ததும் முன்னர்க் கூறப்பட்டன. இரு முற்றுகைகட்குமிடையே மற்றொரு செய்தி நடை பெற்றது :

இளந்தத்தன் என்ற புலவன் நலங்கிள்ளிபாற் சென்று பரிசில் பெற்று, அப்பொருள் தீர்ந்துவிட்ட மையால், நெடுங்கிள்ளிபாற் பரிசில் பெறச் சென்ற னன். ('தத்தன்' என்பவன் தம்பி 'இளந்தத்தன்'. இவ்வாறு கூறுவது அக்கால முறை.) இளந்தத்தன் நலங்கிள்ளியிடம் பரிசில் பெற்றுத் தன்னிடம் பரிசில் பெற வந்தான் என்றெண்ணாமல், தன் னுடைய நிலைமை தன்னுடைய படையின் நிலைமை முதலியவற்றை ஆராய்ந்தறிந்து வருதற்கு நலங் கிள்ளியால் அனுப்பப்பட்ட ஒற்றன் என்று நெடுங் கிள்ளி எண்ணிவிட்டான். இளந்தத்தன், கோவூர் கிழார், கபிலர் போலப் பலராலும் அறியப்பட்ட புலவனல்லாமையாலும், அப்போதுள்ள சூழ்நிலை நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகைமை தோன்றி, அதனால் போர் தோன்றி, ஒரு முறை முற்றுகை நிகழ்ந்து, அது புலவர் கோவூர்கிழாரால்

தவிர்க்கப்பட்ட நிலையாதலாலும், நலங்கிள்ளியிட மிருந்து வந்தான் என்றறிந்ததும் ஒற்றன் என் றெண்ணிவிட்டான் நெடுங்கிள்ளி. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்,' என்று வழங் கும் உலக வழக்கிற்கேற்ப, முன்னரே நலங்கிள்ளி பால் அச்சமுற்றிருந்த நெடுங்கிள்ளி, ஆழ்ந்து ஆராயும் தன்மை இழந்து, இளந்தத்தனை நலங் கிள்ளியின் ஒற்றன் என்று எண்ணிவிட்டனன். அவ்வாறெண்ணிய நெடுங்கிள்ளி, பொதுவாயுள்ள அரசியல் முறைப்படி இளந்தத்தனைக் கொல்ல எண்ணிவிட்டான்.

ஓரரசனிடமிருந்து வேற்றரசரிடம் அரசியற் காரியங்கட்காகச் செல்பவர் 'தூதர், ஒற்றர்' என இரு வகையினராவர். இவர்களுள் தூதர் வெளிப்படை யாக வேற்றரசரிடம் சென்று தம் அரசருடைய எண்ணங்களை எடுத்துரைத்து, அவைபற்றி அவ் வேற்றரசருடைய எண்ணங்களை அறிந்து வருபவ ராதலின், அவர்களை அவ்வேற்றரசர் கொல்லுதல் ஆகாது. ஒற்றர் மாறு வேடம் பூண்டு, வேற்றர சர் நாடுகளிலும் தலைநகரங்களிலும் சென்று, அவ் வேற்றரசருடைய படை வலிமை, மக்கள் நிலைமை முதலியவற்றை ஆராய்ந்தறிபவராதலின், அவர் ஒற்றர் என்று கண்டுபிடிக்கப்பட்டால், கொல்லப் படுதல் இயல்பு. ஆனல், ஒரோ வழி ஒற்றனைக் கண்டுபிடித்த மன்னன் ஒற்றனை அனுப்பிய மன் னனைவிடப் பன்மடங்கு வலிமை மிக்கவனயின்,

அவன், அவ்வொற்றனையும் அவனுடைய மன்னனை யும் பொருளாக மதியாமல், அவ்வொற்றனைக் கொல்லாமல் விட்டுவிடுதலும் உண்டு. நெடுங்கிள்ளி யின் ஒற்றனொருவன் நலங்கிள்ளியிருக்கும் இடம் சென்று, அந்நலங்கிள்ளியால் கண்டுபிடிக்கப்பட் டால், அந்நலங்கிள்ளி அவ்வொற்றனைக் கொல்லாமல் விட்டுவிடுதலும் கூடும். ஆனால், நெடுங்கிள்ளி நலங் கிள்ளியிடத்து மிக்க அச்சமுடையவனாதலின், ஒற்றன் என்று கருதப்பட்ட இளந்தத்தனைக் கொல்லவே எண்ணிவிட்டான். இந்நிலையில் இளந் தத்தனுடைய நல்வினைப் பயனாகப் புலவர் கோவூர் கிழார் ஆண்டெய்தினர்.

இளந்தத்தன் நிலையையும் நெடுங்கிள்ளியின் எண்ணத்தையும் அறிந்த புலவர், மனம் மிக வருந்தி, இச்செயலைத் தடுக்க எண்ணினர். நெடுங் கிள்ளி முன்னொரு முறை தம்மாற் காக்கப்பட்டவ னாதலின், அது கொண்டு, "இவனைக் கொல்லாமல் விட்டுவிடு," என்று புலவர் கூறிற்றிலர். ஒற்றன் என்று கருதப்பட்ட ஒருவனைக் கொலை செய்யாமல் தடுத்தல் வேண்டுமாதலின், அதற்கு ஏற்றவாறு நெடுங்கிள்ளிக்கு எடுத்துரைத்தனர். புலவரியல்பு இன்னதெனை விரிவாக எடுத்துக் கூறி, அதன் வாயிலாக இளந்தத்தனும் அவ்வியல்புடையவன், ஒற்றனல்லன் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

"பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவை கள்போல, வண்மையுடையார் இருக்குமிடம் தேடி,

காடென்றும் மலையென்றும் கருதாமல், நெடுந்தூரம் என்றும் எண்ணுமல், நடந்து சென்று வண்மையுடையாரையடைந்து, தாம் கற்ற கல்வி வன்மைக்கேற்ப அவ்வண்மையுடையார் சிறப்புக்களைப் பாடி, அவர் கொடுத்த பரிசிலைப் பெற்று மகிழ்ந்து, தாமும் உண்டு, தம் சுற்றத்தார்க்கும் கொடுத்து, தம்மிடத்து இல்லையென்று வருந்தி வருவோர்க்கு இல்லையென்று கூருமல், இருக்குமளவும் கொடுத்துப் பொருள் தீர்ந்தவுடன் மீண்டும் வண்மையுடையாரை நாடிச் செல்லுமியல்பினர் பரிசிலால் வாழும் புலவர். அன்றியும், தம்மைப்போல் கற்ருர்முன் தம் கல்வி வன்மையைக் காட்டிப் பெருமிதத்தோடு ஒழுகும் இயல்புமுடையர் புலவர். இவர் யார்க்கும் எவ்வாற்ருனும் சிறிதும் தீது நினைப்பாரல்லர்,''* எனப் புலவர் இயல்பை எடுத்துக்கூறி, அதன் வாயிலாக, "இங்கு வந்துள்ள இளந்தத்தனும் அவ்வியல்புடைய ஒரு புலவனே. இவன் சிறிதும் தீய எண்ணமுடையவனல்லன்,'' என்று நெடுங்கிள்ளி உய்த்துணருமாறு செய்து, அவன் கொண்ட தவருன எண்ணத்தை மாற்றி இளந்தத்தனைக் காத்தனர்.

இங்குக் கோவூர் கிழார், நெடுங்கிள்ளி தம்மால் முன்னர்க் காப்பாற்றப்பட்டதை எடுத்துக்கூறி, அதனல் இளந்தத்தனைக் காப்பாற்ற எண்ணுமல், புலவரியல்பை எடுத்துக்கூறி, அதனல் இளந்தத்தனைக் காப்பாற்ற எண்ணிய முறை கருதற்குரியது.

---

* புறம். 47

தாம் செய்த உதவியைக் கூறி இளந்தத்தனை விட்டு விடுமாறு புலவர் வேண்டினராயின், புலவர் தாம் செய்த உதவிக்குக் கைம்மாறு வேண்டினராவர். அது சிறப்பாகாது. எனினும், புலவர்க்கு அது குற்றமும் ஆகாது. புலவர் தாம் செய்த உதவியைக் கூறித் தமக்கொரு நன்மையை நாடியிருப்பாராயின், அது சிறப்பாகாது; குற்றமாகும். இங்குப் புலவர் கோவூர் கிழார் பிறனொருவனுக்கு நன்மை நாடுதலின், அவன் உயிர் காத்தலாகிய நன்மை நாடுதலின், அவர்க்கிது குற்றமாகாது. 'அங்ஙனமாயின், புலவர் ஏன் அம்முறையைக் கைக்கொண்டிலர்?' எனின், அங்ஙனம் புரிந்திருப்பின், 'இளந்தத்தன் புலவனே; ஒற்றனல்லன்,' என்ற உண்மை நிலை நிறுத்தப்படாமற் போய்விடும். அதனால், நெடுங்கிள்ளி இளந்தத்தனைக் கொல்லாமல் விட்டுவிட்டாலும், அவனை ஒற்றன் என்றெண்ணிய எண்ணம் மாறாமல், புலவர் சொல்லுக்காக, அவர் முன் செய்த உதவிக்காக, மனக் கசப்போடு விட்டவனாவான். அதனால், கோவூர்கிழார் அம்முறை நன்றன்று என்று கருதியே, இளந்தத்தன் ஒற்றனல்லன் என்பதை நன்கு தெளிவுறுத்தி விடுவிக்க முயன்றனர் எனக் கொள்க. இம்முறையினால் நெடுங்கிள்ளி, "கொல்லப்பட வேண்டிய ஓரொற்றனைப் புலவர் சொல்லுக்காகக் கொல்லாமல் விடுகிறோம்," என்றெண்ணாமல், "கொல்லத்தகாத ஒரு புலவனைத் தவறாகக் கொலை செய்ய எண்ணிவிட்டோம்! கோவூர்கிழாரால் அத்தவற்றினின்று நீங்கினோம்!

ஒரு பெரும்பழியினின்று நீங்கினேம்!'' என்ற எண்ணத்தோடு இளந்தத்தனை விட்டிருத்தல் வேண்டுமெனக் கொள்க.

கோவூர்கிழார் சொல் எவ்வாறு நெடுங்கிள்ளி யின் எண்ணத்தை மாற்றியது என்பதைக் காண் டல் நலம். இளந்தத்தன் நலங்கிள்ளியிடத்திலிருந்து தன்னிடம் வந்தான் என்பது கொண்டு அவனை ஒற் றன் என்றெண்ணினன் நெடுங்கிள்ளி. ஆதலால், 'இளந்தத்தன் அவ்வாறு வந்ததற்குரிய கார ணத்தை விளக்கினல், அரசன் எண்ணம் மாறும்,' என்று கருதியே புலவர் அக்காரணத்தை விளக்கி னர். "பரிசில் வாழ்க்கையினர் ஒரு வள்ளலிடம் சென்று பரிசில் பெற்றால், அப்பொருளை இறுகப் பிடித்து நெடுநாட்கு வைத்துச் செலவிட்டுத் தாம் வாழ நினைப்பதில்லை; வேண்டியாங்குச் செல விட்டு, அப்பொருள் தீர்ந்தவுடன் மற்றொரு வள்ளலை நாடுவர்; அன்றி, முன் பெற்ற வள்ளலிடமே செல் லினும் செல்வர். இஃதவரியல்பு. அவ்வியல்பின் படியே இளந்தத்தன் நலங்கிள்ளிபாற் பெற்ற பொருள் தீர்ந்தவுடன் நின்னை நாடி வந்தனன்; அவன் ஒற்றனல்லன்,'' என்ற கருத்துக்கள் நெடுங் கிள்ளியின் மனத்திற்பதியுமாறு முதலிற்கூறினர்; பின்னர் அவன் தீதில்லாதவன் என்பதையும் புல வர் பெருமிதத்தையும் எடுத்துரைத்தனர்.

## 3. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியைக் காத்தல்

சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் ஒரு முறை வேட்டையாடக் காட்டுக்குச் சென்றனன். அங்கு அவன் யானைமேலிருந்து வேட்டையாடிக்கொண்டிருந்த போது, அவ்யானை மதங்கொண்டு, அரசனுக்கும் பாகனுக்கும் அடங்காமல் ஓடியது. ஓடிய அவ்யானை கருவூரின்கட் புகுந்து ஓடியது. கருவூர் சேரர்க்குரிய நகரம். அப்போது கருவூரின்கண் ஆட்சி புரிந்தவன், சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னன். அவன் 'வேண்மாடம்' என்ற மாளிகையில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவருடனிருந்தனன். (புலவர் பெயர் மோசியார் என்பது. அவர் உறுப்புக் குறையுடைமை பற்றி முடமோசியார் என்றும், உறையூரின்கண் ஏணிச்சேரி என்ற பகுதியில் வாழ்ந்தவராதலின், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்றும் வழங்கப்பட்டனர்.)

அந்துவஞ்சேரலிரும்பொறை, புலவர் முடமோசியாருடனிருந்த போது, அவ்வழியே யானைமீது வந்த சோழமன்னனைக் கண்டு, "இவன் யார்?" என்று புலவரை வினவினன். புலவர் யானைமீது வருபவன் சோழ மன்னன் என்பதை உணர்ந்தனர்; உணர்ந்ததும், அச்சமுற்றனர். அக்கால நிலை

புலவர் அஞ்சுமாறு செய்தது. தமிழ் மூவேந்தரும் பெரும்பாலும் ஒருவரோடொருவர் பகைமையுடைய வராயிருந்ததனால், 'சேரன், தனியனாய் வரும் சோழனுக்குத் தீங்கிழைத்துச் சோழநாட்டை எளிதிற் கைப்பற்ற எண்ணுவானாயின், என் செய்வது!' என்று புலவர் அஞ்சுவாராயினர். இத்தகைய நிலைகளில் தீங்கு வாராதிருக்க நினைப்பதும், வந்துவிட்டால் என் செய்வது என்று எண்ணுவதும் பொதுவாக மக்களியல்பு. அவ்வியல்பின்படியே புலவரும் அஞ்சுவாராயினர். அஞ்சிய புலவர், சோழனுக்குத் தீங்கு வாராதவாறு சேரனுக்குச் சோழனைப்பற்றி எடுத்துக் கூறினர். இங்குச் சோழன் பெருமைக்குக் குறை வாராமலும், சோழன் திறத்திற்சேரன் தீங்கு நினையாமலும் இருக்குமாறு புலவர் கூறினர்:

"வேந்தே, 'யானையின் மேல் வருகின்ற இவன் யார்?' என்று வினவுவாயாயின், கூறுவல்; கேட்பாயாக: இவன் சோழ மன்னன்; புலிப்பொறி பொறித்த கவசமணிந்தவன்; போரில் பகைவர் விட்ட அம்பு கவசத்தையும் சிதைத்து மார்பையும் கிழித்தலால் உண்டான வடு விளங்குகின்ற மார்பை உடையவன்; இவன் ஏறிய களிறு மதங்கொண்டது; தன் மேலுள்ளவனையும் மதியாமல், பாகரையும் மதியாமல், கடலைக் கிழித்தோடும் கப்பலைப் போலவும், வான் வெளியில் மீன்களிடையே ஓடும் திங்களைப் போலவும் காவல் வீரர் தொடர்ந்து வர ஓடி வருகின்றது; இம்மன்னன் இடையூறொன்றும்

எய்தாமல் தன் ஊர் திரும்புவானாக !''* என்று புலவர் சேரனுக்கு எடுத்துரைத்தனர்.

'பகைவர் அம்பு படுதலால் உண்டான வடுக்கள் விளங்கும் மார்பையுடையவன்' என்றதனால், சோழன் வீரப் பெருமையையும், 'ஆயினும், அவன் இப்போது நின்மீது பகைமை கொண்டு இங்கு வந்திலன்; அவன் செயலின்றி, யானை மதங்கொண்ட காரணத்தால் அவ்யானையோடு ஈண்டு வரலாயினன்,' என இப்போதுள்ள சோழன் நிலைமையையும், 'ஆதலால், அவன் இடையூறொன்றும் எய்தாமல் தன் ஊர் திரும்புக,' என்றதனால், அவ்வாறு செய்தல் சேரன் பெருமைக்குரிய காரியமாகும் என்பதையும், சேரன் உணருமாறு புலவர் அழகாக எடுத்துரைத்தனர். அவர் எடுத்துரைத்தவாறு சோழன் தீங்கெய்தாமல் ஊர் திரும்பினன் எனக் கொள்க.

இவ்வாறு போர் தொடங்கிய இடங்களிலும், கொலை நிகழ்தற்குரிய இடங்களிலும் கோவூர் கிழார் முதலிய அருள்மிக்க புலவர்கள், அவை நிகழா வண்ணம் தடுக்கத் தம்முடைய அறிவாற்றல் சொல் வன்மைகளைப் பயன்படுத்தி மிக முயன்றார்கள்; சில இடங்களிற் பயன் எய்தினார்கள்; சில இடங்களிற் பயன் எய்தாதொழிந்தார்கள்.

புறநானூற்றுப் பாடல்கட்குத் திணை, துறை, பாடியவர் பெயர், பாடப்பட்டவர் பெயர் முதலியன எழுதப்பட்டுள்ளன. இவற்றை எழுதியவர் இன்னார்

*புறம். 13.

என்று அறியப்பட்டிலர். அவர் மேற்கூறப்பட்ட கோவூர் கிழார் முதலியோர் பாடிய பாட்டுக்களின் கீழ், அவ்வவ்விடங்கட்கேற்ப வேறுபாடு தோன்ற எழுதியுள்ளனர்.

கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியிட்ட முற்றுகையைத் தவிர்க்க இரு முறை பாடிய இரண்டு பாட்டுக்களின் கீழும், 'கோவூர் கிழார் பாடியது' என்ற குறிப்பு எழுதப்பட்டுள்ளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சேரன் ஒருவனோடு போர் தொடங்கி முற்றுகையிட்ட போது அதனைத் தவிர்க்க ஆலத்தூர் கிழார் பாடிய பாட்டின் கீழும், 'ஆலத்தூர் கிழார் பாடியது' என்றே குறிப்பு எழுதப்பட்டுள்ளது. ஆனால், கோவூர்கிழார் மலையமான் மக்களைக் காப்பாற்றப் பாடிய பாட்டின் கீழும், புலவன் இளந்தத்தனைக் காப்பாற்றப் பாடிய பாட்டின் கீழும், 'கோவூர் கிழார் பாடி உய்யக் கொண்டது' என்ற குறிப்பு எழுதப்பட்டுள்ளது. இவ்வேறுபாட்டை நோக்குமிடத்து, அக்குறிப்பை எழுதியவர், காக்கப்படுபவர் முழுதும் காக்கப்பட்டால், அங்குப் 'பாடி உய்யக் கொண்டது' என்றும், அப்போது மட்டும் காக்கப்பட்டால், அங்கு 'உய்யக் கொண்டது' என்றெழுதாமல், வாளா 'பாடியது' என்றும் எழுதும் கொள்கையுடையர் என்பது புலனாகின்றது.

நெடுங்கிள்ளி இரு முறை காப்பாற்றப்பட்டாலும், பின்னர், நலங்கிள்ளியால் போரில் கொல்லப்

பட்டானுதலின், அங்கு 'உய்யக் கொண்டது' என்றெழுதினுரில்லை. ஆலத்தூர்கிழார் சொல்லாற் கருவூர்ச் சேரன் அப்போது காப்பாற்றப்பட்டா ஞயினும், பின்னர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுற் கொல்லப்பட்டானுதலின், அங்கும் 'உய்யக் கொண்டது' என்றெழுதினுரில்லை. மலையமான் மக்களும் இளந்தத்தனும் முழுதும் காப்பாற்றப்பட்டனர்; பின்னர், கிள்ளிவளவனுலும் நெடுங்கிள்ளியாலும் கொல்லப்பட்டிலர். அதனுல், அவ்விடங்களில் 'பாடி உய்யக் கொண்டது' என்றெழுதினர். கோப்பெருஞ்சோழனுக்கும் அவன் மக்கட்குமிடையே தோன்றிய போரைத் தவிர்க்கப் புல்லாற்றூர் எயிற்றியனுர் பாடிய பாட்டு இவ்வேறு பாட்டில் எவ்வகையிலடங்கும் என்பது பின்னர்க் கூறப்படும்.

# III. பிழையொழித்தல்

## 1. கபிலர் முதலியோர் பேகன் பிழை ஒழுக்கத்தை ஒழித்தல்

வையாவிக் கோப்பெரும்பேகன் என்பவன் மேற் கூறப்பட்ட வள்ளல்கள் எழுவருள் ஒருவன். இவன் பெயர் ‘ பேகன் ’ என்றும் வழங்கப்படும். ‘ ஆவி ’ என்ற ஒரு தலைவனுடைய குடியிற்பிறந்தவனாதலால், ‘ ஆவியர் பெருமகன், ஆவியர் கோ ’ என்றும் இவன் வழங்கப்பட்டுள்ளான் என்பர். சேரர்களுக்குப் பெண் கொடுக்கும் முறையுடைய வேளிர்களுள் ‘ வேளாவிக் கோமான் பதுமன் ’ என்று ஒருவன் பெயர் காணப்படுகின்றது. அக்காலத்து ‘ ஆவி ’ என்ற பெயரோடு புகழ்பெற்ற தலைவர் இருவரிருந்தனர் என்றும், அவர்களிடையே வேறுபாடு தோன்றப் பேகன் முன்னேனை ‘ வையாவி ’ என்னும் அடை கொடுத்தும், பதுமன் முன்னேனை ‘ வேளாவி ’ என்னும் அடை கொடுத்தும் வழங்கினர் போலும்! ‘ வையாவி ’ என்பதனைச் செய்யுட்களில் முதற் குறைத்து ‘ ஆவி ’ என்று வழங்கியுள்ளனர்.

பேகன் சிறந்த கொடையுடையவன்; கார் காலத்துத் தோகை விரித்தாடிய மயிலைக் கண்டு, அக்காலத்தில் மக்கள் குளிரால் நடுங்குதல் போல, அம்மயிலும் குளிரால் நடுங்குகின்றதென்றெண்ணி, தன் விலையுயர்ந்த போர்வையை அம்மயிலுக்கு இட்டுச் சென்றனன். இவ்வாறு பெறுவார் தகுதி

நோக்காமல் மிகுதியாகக் கொடுத்தலைக் ‘ கொடை மடம் ’ என்று புலவர் வழங்குவர். பேகன் கொடை மடம் படுதலல்லது படைமடம் படுதலில்லை. போர்க் களத்தில் வீரரல்லாதாரோடும், தோற்றோடுபவ ரோடும் போர் புரிந்து அவர்களைக் கொல்வது முத லிய இழிசெயல்கள் ‘ படை மடம் ’ எனப்படும். அவ் வாறு படை மடம் படுதல் பேகனிடத்துச் சிறிது மில்லை. அத்தகைய பேகனிடத்தில் ஒரு குற்றம் நிகழ்ந்தது. புலவர்கள் அதனை அவனுக்கெடுத்துக் காட்டி, அக்குற்றத்தினின்றும் அவனைத் திருத் தினார்கள்.

பேகன் மனைவி கண்ணகி என்பாள் மிக்க அழ கும் சிறந்த குணங்களும் ஒருங்கு அமையப் பெற்ற வள். அங்ஙனமிருந்தும், பேகன் வேறொருத்தி யினது அழகில் ஈடுபட்டு, அவளைக் காதலித்துத் தன் மனைவி கண்ணகியை மறந்து ஒழுகுவானாயி னன். கண்ணகி அவன் பிரிவால் தனக்குண்டாகும் துன்பத்தையும் எண்ணாமல், அவனுக்குண்டாகும் பழியை நினைந்து துன்புற்று மிக வாடினள். இவற்றையுணர்ந்த புலவர் சிலர், அவள் வாட்டத் தையும் அவன் குற்றத்தையும் அவன் மனங் கொள்ளுமாறு நயமாக அவனுக்கு எடுத்துணர்த்தி, அவனை அக்குற்றத்தினின்று திருத்தினர்.

கண்ணகி காரணமாகப் புலவர்கள் பாடிய பாட்டுக்கள் கருத்தைச் சிறிது சிறிதாகவும் அழகாக வும் வற்புறுத்திக் கூறுகின்றன. கபிலர், “ மலையில்

உள்ள மக்கள் அம்மலையில் 'நன்கு மழை பெய்வதாக!' என்று கடவுளை வாழ்த்தி, அம்மழை வேண்டிய அளவு பெய்து தினை முதலிய பொருள்கள் விளைந்தவுடன், 'இனி மழை பெய்யாமல் நின்றுவிடுக!' என்று கடவுளை வாழ்த்தி, 'விளைந்த தினை முதலியவற்றை உண்டு மகிழ்ந்து வாழ்கின்ற வளம் பொருந்திய மலையையுடைய பேகனே, நேற்று வழி நடந்து வந்த இளைப்போடு நின் அரண்மனை வாயிலில் நின்று, நின்னைப்பற்றியும் நின் மலையைப் பற்றியும் புகழ்ந்து பாடினேன்; அந்நேரத்தில் ஒரு பெண், சொரிகின்ற கண்ணீரை அடக்கமாட்டாமல், விம்மிவிம்மி அழுதனள்; அவள் யாராய் இருக்கலாம்? யாராயினும், அவள் நின்னாற் காப்பாற்றப் படுதற்குரியள்,''* என்று குறிப்பாகத் தம் கருத்தை எடுத்துரைத்தனர்.

இங்குக் கபிலர் கூறிய முறையை நாம் ஆழ்ந்து நினைதல் வேண்டும். பேகனை நோக்கி, "அரசே, நீ இவ்வாறு நின் மனைவியை விட்டு வேறொருத்தி மேல் காதல்கொண்டொழுகுதல் முறையன்று. நீ உடனே இவளைக் கைவிட்டு, நின் மனைவிபாற்சென்று, அவள் துன்பம் களைந்து, அவளுடன் மகிழ்ந்து வாழ்தல் வேண்டும்,'' என்று தாம் கூற வேண்டிய கருத்தை வெளிப்படக் கூறிற்றிலர் புலவர்.

கபிலர் தம் குடும்பத்தின் வறுமை தீரப் பரிசில் வேண்டுகின்றாரல்லர். நாட்டிலுள்ள மக்கள்

---

* புறம். 143

இன்னவாறு துன்புறுகின்றார்கள்; அவர்கள் துன்பம் நீங்க நீ இன்னது செய்தல் வேண்டும் என்று வேண்டுகின்றாரல்லர்; அவைகளாயின், வெளிப்படக் கூறிக் கேட்டலும் தகும். இங்குக் கபிலர் கூறும் காரியம் அரசனையும், அவன் கோப்பெருந் தேவியையும், அவன் வேறிட்டுக்கொண்ட காதலையும் பற்றியதாகும். "நம்முடைய உரிமையைப் பற்றி இவர் ஏன் பேசுகின்றார்? இவர் காரியம் இவருக்கு வேண்டும் பரிசில் பெற்றுச் செல்லுதல் தானே?" என்று அரசன் எண்ணம் கொள்வானாயின், புலவர் மேற்கொண்ட முயற்சி வீணாவதோடு அவர் சொல்லும் மதிப்பிழந்துவிடும். அகலாது அணுகாது தீக்காய்வார் போல ஒழுகுவ தன்றோ அரசனைச் சார்ந்தொழுகுவார் ஒழுகும் முறை? அதனால், கபிலர், "கோப்பெருந்தேவி நின் பிரிவாற்றாமல் வருந்துகின்றாள்; நீ நின் தவறான ஒழுக்கத்தைக் கைவிட்டு, உடனே அரண்மனை சென்று, அவள் துன்பங் களைந்து, வாழ்வாயாக!" என்று வெளிப்படக் கூறாமல், "யாரோ ஒரு பெண் அழுகின்றாள்; எக்காரணத்தாலோ அழுகின்றாள்; நின் அரண்மனையில் அழுகின்றாள்; நின் அரண்மனையில் அழுவதால், அவள் யாராயினும், அவள் துன்பம் நீக்கிக் காத்தல் நின்கடனாகும்," என்று தம் கருத்தை அரசன் உய்த்துணருமாறு குறிப்பாற் கூறினார். 'நின் அரண்மனையில் அழுகின்றாள்,' என்றதனால், 'அழுகின்றவள் நின் கோப்பெருந் தேவி,' என்பதைப் புலப்படுத்தினார். பேகன், கபிலர்

குறிப்பாற் கூறியதை உணர்ந்து, தன் பிழை ஒழுக்கத்தைக் கைவிட்டு, அரண்மனை செல்வா ஞயின், அது மிக்க நலமாகும். அங்ஙனமின் றேனும், புலவர் கூற்றைப் பேகன் மறுத்துக்கூறும விருப்பானுயின், மேலும் அவன் பிழையொழுக்கத் தைப்பற்றியும் கண்ணகியின் துன்ப நிலை பற்றியும் வெளிப்பட எடுத்துக் கூறி அவனைத் திருத்தலாம் என்பது கபிலர் எண்ணமாகும்.

பேகன் கபிலர் கூற்றை மறுத்துரைத்திலன். அதனுல், அதன்பின் ஆண்டுச் சென்ற பரணர் என் னும் புலவர், கபிலர் குறிப்பாற்கூறிய கருத்தை வெளிப்படையாகவும், கோப்பெருந்தேவியிடத்துப் பேகனுக்குக் கோபம் தோன்ருவண்ணம் அவள் குணச் சிறப்பு வெளிப்படுமாறும் அழகாகக் கூறி வற்புறுத்தினர் :

"பேக, நின் அரண்மனையிடத்துச் சென்று எங்கள் யாழில் செவ்வழிப் பண்ணையமைத்துப் பாடி னேம். அங்கு ஒரு பெண் தன் கண்களிலிருந்து நீர் சொரிய அழுதுகொண்டிருந்தனள். அப்பெண் ணைப் பார்த்து, 'நீ எங்கள் தலைவனுகிய பேகனுக்கு உறவு முறையுடையையோ?' என்று வினவினேம். அதற்கு அப்பெண் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'யான் பேகனுக்கு உறவுமுறையுடையே னல்லேன்; எங்கும் பரவிய புகழையுடைய அவன் வேருெரு பெண்ணைக் காதலித்து ஒழுகுகின்ருன் என்று ஊரார் பேசுகின்றனர்,' என்ருள். ஆதலால்,

நீ அவள் திறத்தில் அருள் புரியாதிருத்தல் கொடிதாகும்,''* என்று கூறினர் பரணர்.

இங்குக் கோப்பெருந்தேவியின் சொற்கள் அவளுடைய சிறந்த குணத்தைப் புலப்படுத்துதல் காணலாம். "யான் பேகனுக்கு உறவுமுறை யுடையேனல்லேன்,'' என்றதனால், "அவர் எனக்கு உறவு முறையுடையவரே; அவ்வுறவு வாழ்நாள் உள்ள வரை நீங்காது; ஆயினும், இப்போது அவர் என்னை மறந்திருத்தலால், யான் அவருக்கு உறவு முறையுடையேனாய் இல்லை; அவர் உள்ளத்தால் என்னை மறந்தாலும், யான் அவரை ஒரு நாளும் மறத்தல் இயலாது,'' என்ற கருத்துக்கள் தோன்றுகின்றன. அன்றியும், 'பரவிய புகழையுடைய பேகன் அயலாளாகிய ஒரு பெண்ணை விரும்பி ஒழுகுகின்றான் என்று ஊரார் பேசுகின்றனர்,' என்றதனால், 'இச் செயல் பேகனுடைய புகழைக் கெடுக்கும் செயலாய் இருக்கின்றது; சிறப்பாக இது கருதியே கண்ணகி வருந்துகின்றனள்; அவன் தன்னைப் பிரிந்திருப்பது கருதி மாத்திரம் வருந்துகின்றாளல்லள்,' என்ற கருத்துக்களும் தோன்றுகின்றன.

இவற்றால், பேகன் மனைவி கண்ணகிக்கு அவன் பிரிவால் உண்டான துன்பத்தைவிட, 'அவன் புகழ் ஒழிகின்றதே! அவனுக்குப் பழி உண்டாகின்றதே!' என்பதுபற்றிய துன்பமே ஓங்கியிருத்தல் புலனாகின்றது. இவ்வாறு கண்ணகியைப்பற்றிக் கபிலர்

---

*புறம். 144.

கூறியதைவிடச் சிறிது வெளிப்படையாகவும், கற்பிற்சிறந்த அவளுடைய சீரிய குணம் புலப்படுமாறும் பரணர் எடுத்துக் கூறினர்.

பரணர் இங்ஙனம் கூறியதற்கும் பேகன் மறுத்துரையாமையால், அவர் இன்னும் வெளிப்படையாக மேலும் கூறுவாராயினர்: "மயிலுக்குப் போர்வையளித்த அருளுடைய பேகனே, யான் என் வறுமை தீர்வதற்காகப் பரிசில் பெறும் பொருட்டு நின்னிடம் வந்திலேன். ஆனால், என்னுடைய யாழில் இனிய பண்ணையமைத்துப் பாடி நின்னிடம் வேண்டும் பரிசில் ஒன்றுண்டு: நீ உடனே நின் தேரேறி, நின் அரண்மனையடைந்து, நின் மனைவியின் துன்பம் களைவாயாக! நீ அறத்தின் வழி ஒழுகுவாயாக! இதுவே யான் வேண்டும் பரிசில்,"* என்றார்.

பரணர் பரிசில் வேண்டிய முறையிலேயே அரிசில்கிழாரும் பெருங்குன்றூர்கிழாரும், பேகன் பிழையொழுக்கத்தை விட்டு அரண்மனை சென்று அறத்தின்வழியொழுகுதலே தாம் வேண்டும் பரிசில் என்றெடுத்துக் கூறினர். பேகன் தன் பிழையொழுக்கம் விட்டுத் திருந்தித் தன் அரண்மனை சென்று தன் மனைவியோடு வாழ்வானாயினன்.

நாட்டையாளும் அரசன் பிழையொழுக்கமில்லா திருத்தல் மிக இன்றியமையாததாகும். அரசன் பிழையொழுக்கமுடையவனானால், பல குற்றங்க

*புறம். 145.

ளுண்டாகும். சிறப்பாக இரண்டு பெரிய குற்றங்க ளுண்டாகும்: அரசன் குற்றமுடையவனுனல், தன் நாட்டிலுள்ள மக்கள் குற்றம் செய்யாமற் காத்தல் இயலாதவனுவான். தான் செய்யும் குற்றத்தைக் குடிமக்களும் செய்வார்களாயின், அரசன் எவ்வாறு அவர்களைத் தண்டித்து அடக்குதல் கூடும்? அடக்குதல் இயலாமற்போகவே, நாட்டிற் குற்றம் மலிந்து, நாடு சீர் குலையும். அதனுல், அரசன் பிழையொழுக்க மில்லாதவனுய் இருத்தல் வேண்டும்.

அரசன் ஒரு துறையில் அதிக விருப்பமுடைய வனுய் இருந்தால், அவ்விருப்பத்தை அவன் பிறரறியாமற் செலுத்துதல் வேண்டும். காதல், இன்னிசை, நடனம், வேட்டையாடுதல் முதலிய இன்பத் துறைகளுள் ஏதேனும் ஒன்றில் அரசன் அதிக விருப்ப முடையவனுயின், அவன் அவ்விருப்பத்தைப் பிறரறியாமற்செலுத்தி இன்பம் நுகர்தல் வேண்டும். தன் விருப்பத்தைப் பலர் அறியுமாறு அரசன் நடப்பானுயின், அவன் பகைவர் அவ்வழியாலே அவனைத் தொலைக்க முற்படுவர். அதாவது, அரசன் இன்னிசை கேட்டு இன்புறுவதில் மிக்க விருப்பமுடைய வனுயின், அவ்விருப்பத்தைப் பலர் அறியுமாறு அவ்வரசன் ஒழுகுவானுயின், அவன் பகைவர் சிறந்த இசையறிஞர்களை அவ்வரசன்பாலனுப்பி, இசையில் அவன் மயங்குமாறு செய்து, அவனைத் தொலைத்துவிட முற்படுவர். அதனுல், அரசன் தனக்கு ஒரு துறையிலுள்ள அதிக விருப்பத்தைப் பிறரறியாதவாறு அடக்கி ஒழுகுதல் வேண்டும்.

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்."*

என்னும் திருக்குறள் இக்கருத்தை விளக்குகின்றது. பேகன் கொண்ட பிழைபட்ட காதல் ஒழுக்கம் ஊரார் அறியுமாறு வெளிப்பட்டிருந்ததால், அவ்வழியாக நாடு கொள்ளும் ஆசையுடைய பிறர் அவனுக்குத் தீங்கிழைத்தல் கூடும். அதனாலும், அவன் பிழையொழுக்கத்தினின்று நீங்குதல் இன்றியமையாததாயிற்று. "பேகன் பிழையொழுக்கமுடையனயினன் என ஊரார் பேசுகின்றனர்," என்று கண்ணகி வருந்திக் கூறியதற்கு அவன் புகழ் குறைகின்றதே என்ற எண்ணத்தோடு இதுவும் காரணமாய் இருக்கலாம். கண்ணகி துன்பம் நீக்குதலோடு இவற்றையெல்லாம் எண்ணியும் புலவர் பேகனைத் திருத்த முயன்றனர் எனக் கொள்க.

---

* குறள், 440

## 2. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் ஈகையில்லாத சோழன் நலங்கிள்ளியை ஈகையுடையோனாக்குதல்

சோழன் நலங்கிள்ளி மிக்க பேராற்றல் உடையவன் என்பது முன்னர்க் காட்டப்பட்டது. அவன் வீரச் சிறப்பு முழுதும் அறிந்து பாடுதல் புலவர்க்கும் அரிதாகும். அவன் அக்காலத்திருந்த சேர பாண்டியர்களை வென்று தான் மேம்பட்டு விளங்கினான். அறம் பொருள் இன்பங்களுள் அறமே தலை சிறந்து விளங்குதல் போலத் தமிழ் மூவேந்தர்களுள் நலங்கிள்ளி வீரத்தாற்சிறப்புற்று விளங்கினான்; சென்றவிடமெல்லாம் வெற்றி பெற்று விளங்கினான். அரண்மனையிற்றங்கியிருத்தலினும் பாசறையிற்றங்கியிருத்தலே அவனுக்கு மிக்க இன்பமாயிருந்தது. அவன் சிறந்த நால்வகைப் படைகளையுமுடையவன். நன்னிமித்தம் பார்த்துப் போர்க்குச்செல்லுதலையும் அவன் வீரர் விரும்புவதில்லை; 'போர் எப்போது கிடைக்கும்!' என்றே விரும்பியிருப்பர்; வடநாட்டரசர், 'நலங்கிள்ளி எப்போதுபோர் மேற்கொண்டு வருவானோ!' என்று தூக்கமின்றி எப்போதும் நடுங்கிக்கொண்டிருப்பர். அவன் படை, வீரத்தாற் சிறந்திருந்தது போல, அளவிலும் மிகப் பெரிதாயிருந்தது.

சிறந்த போர் வீரனாய் விளங்கிய நலங்கிள்ளி, சிறந்த தமிழறிஞனாயும் கவி பாடும் ஆற்றலுடையவனாயும் விளங்கினான். அவன் பாடியனவாகப்

புறநானூற்றிற்காணப்படும் இரண்டு கவிகள், அவ னுடைய தமிழறிவையும் கவி பாடும் ஆற்றலையும் நன்கு விளக்குகின்றன. அவன் கொள்கைகள் மிகச் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. ஒரு குடியில் தந்தை இறந்தபின் அத்தந்தை ஈட்டிய பொருள் மகனுக்குக் கிடைக்குமன்றோ? அம்மகன் அப்பொருளைப்பற்றி என் நினைப்பான் என்பதை அழகாக எடுத்துக் கூறியுள்ளான். " அம் மகன் சிறந்த முயற்சியும் செயலாற்றும் வன்மை யும் இல்லாதவனயிருந்தால், தந்தையாற்கிடைத்த பொருளைப் பெரும்பேருக எண்ணி மகிழ்வான். அம்மகன் சிறந்த முயற்சியும் செயலாற்றும் வன்மை யும் உடையவனயிருந்தால், தந்தையாற்கிடைத்த பொருளைப் பெரும்பேருக எண்ணி மகிழாமல், தான் முயன்று ஈட்டும் பொருளையே பெரிதாக எண்ணி மகிழ்வான். அரசரியல்பும் அவ்வாறேயாகும். போர் புரியும் வீரச் சிறப்பில்லாத அரசனுக்குத் தந்தை யாற்கிடைத்த அரசுரிமை மிகப் பெரிதாகத் தோன் றும். அவன் குடிமக்களிடத்தில் வரி வாங்கி அத ஞலே மகிழ்ந்திருப்பான். போர் புரியும் வீரச் சிறப் புடைய மன்னனுக்குத் தந்தையாற்பெற்ற அர சுரிமை சிறு துரும்பு போலத் தோன்றும். அவன் தான் முயன்றுபெறும் அரச செல்வத்தையே பெரி தாக மதிப்பான்,"* என்று இவ்வாறு முயற்சியைப் பாராட்டிக் கூறியுள்ளான் ஒரு பாட்டில்.

* புறம். 75

இவ்வாறு வீரச் சிறப்பும் தமிழறிவும் சிறந்த கொள்கைகளும் உடையவனுய் விளங்கிய நலங் கிள்ளி, தன் மனைவியையன்றிப் பிற மகளிரைச் சிறிதும் விரும்பாத சிறந்த ஒழுக்கமுடையவனுயும் விளங்கினான். ஓரிடத்து நலங்கிள்ளி வஞ்சினங் கூறும்போது, "என்னுடைய ஆற்றலையும், என் னுடைய அமைச்சர் வீரர் முதலானவர்களுடைய ஆற்றலையும் அறியாமல் போருக்கு வருபவர், தூங்கு கின்ற புலியைக் காலால் இடறிய குருடனை ஒப் போராவர். யானையின் காலில் அகப்பட்ட மூங்கில் முளை அழிவது போல, அப்பகைவர் எளிதில் அழியு மாறு, அப்பகைவரிருக்குமிடம் சென்று பொருது அழிப்பேன்! அங்ஙனம் அப்பகைவர்களைப் பொருது அழியேனுயின், நல்லெண்ணத்தோடு உண்மைக் காதல் கொள்ளாத பரத்தையர் நட்புடை யேனுவேன்!"* என்று மற்றொரு பாட்டிற்கூறி யுள்ளனன். இதனுல், அவனுடைய ஒழுக்கச் சிறப்பு நன்கு விளங்குகின்றது.

இவ்வாறு வீரமும், கல்வியறிவும், ஒழுக்கமும் நன்கு அமையப்பெற்ற நலங்கிள்ளி, வறுமையால் வருந்தும் வறியவர்க்கு ஈயும் ஈகைக் குணமட்டுமில் லாதவனுயிருந்தான். ஈகை அரசனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத குணங்களுள் ஒன் றாகும். திருவள்ளுவர் அரசனுக்குரிய இலக்கணங் களைக் கூறுமிடத்தில்,

---

*புறம். 73.

"அஞ்சாமை யீகை அறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

"இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி."

என்று அரசன் ஈகையுடையனய் இருத்தல் வேண்டு மென்பதை மும்முறை வலியுறுத்திக் கூறியுள்ளனர். அரச காரியங்களில் தம்முயிரையும் மதியாமல்நின்று செயலாற்றும் படைவீரர், ஒற்றர் முதலானவர்கட்கு அரசன் நன்கு பொருளீதல் வேண்டும்; துன்புற்று வருந்தும் குடிமக்களுக்கு வேண்டுவன கொடுத்துக் காத்தல் வேண்டும். அரசனுக்கின்றியமையாத ஈகைக் குணம் ஓரரசன்பால் இல்லையாயின், அவன் ஆட்சி உறுதியாய் நெடுங்காலம் நடைபெருது; மக்கள் வெறுப்புக் கொள்வார்கள்; உட்பகை தோன்றும்; அவற்ருல் ஆட்சி விரைவில் சீர் குலையும்.

சோழன் நலங்கிள்ளி பிற நல்லியல்புகள் பல அமைந்தவனயினும், ஈகைக் குணம் அமையப்பெற்றிலாமை கண்டு, அவனே அக்குணமுடையவனுக்க வேண்டுமென்று உறையூர் முதுகண்ணன் சாத்தனர் என்ற புலவர் எண்ணினர். 'சாத்தனர்' என்பது புலவருடைய இயற்பெயர். 'முதுகண்ணன்' என்பது அவர் தந்தையார் பெயர். உறையூரில் பிறந்து வாழ்ந்தவராதலால், உறையூர் முதுகண்ணன் சாத்தனர் என வழங்கப்பட்டார்.

புலவர் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியை நோக்கி நான்கு பாடல்கள் கூறியுள்ளனர்: "ஏற்றத் தாழ்வின்றி ஒப்ப விளங்கும் சிறந்த குடிகளிற் பிறந்து விளங்கியவர்களை எண்ணுமிடத்து, அறஞ் செய்து பெருமையுற்றவரே புலவர் பாடிய புகழுடையராய் விளங்குகின்றனர். அஃதில்லாதவர், கருதுவாரின்றி அழிந்தனர். உலகத்தில் பிறத்தலும் வளர்தலும், பின் குறைதலும் இறத்தலும் மக்கள் எல்லாரிடத்திலும் நிகழும் செயல்கள். இவற்றை உணராதவர்களைத் திங்கள் இச்செயல்களையுடையதாய் உணர்த்துகின்றது. ஆதலால், நின்னிடத்து வருபவர் ஏதேனும் ஒரு துறையில் வல்லவராயினும், ஒரு துறையிலும் வல்லவராய் இல்லாவிட்டாலும், நீ அவர் துன்பங்கண்டிரங்கி, அவர்க்கு வேண்டுவன நல்குவாயாக! நின் பகைவர் கொடாமையையுடையவராக!"* என்று ஒரு பாட்டிற்கூறினர். "நின் பகைவர் கொடாமையுடையவராக," என்றதனால், ஈகை அரசன் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் என்பதை உணர்த்தினர்.

மற்றொரு பாட்டில், "அரசே, கூனர், குறளர், குருடர், செவிடர் முதலியவர் மக்கட்பிறப்பினராயினும், முற்பிறப்பின் தீவினைப் பயனால் அவ்வாறு குறைபாடுடையராயினர். உன்னுடைய செல்வம் அறம் பொருளின்பம் மூன்றையும் உண்டாக்குதற்குரியது. அச்செல்வத்தால் நீ அம்மூன்றையும்

*புறம். 27

அடையாதிருப்பாயாயின், நீ நின்னையே காப்பாற்றிக்கொள்ளாதவனுவாய்; அஃதாவது, இம்மைக்கும் மறுமைக்கும் உரிய நன்மைகளைத் தேடிக்கொள்ளாதவனுவாய்,'' என்றார்.

சோழன் நலங்கிள்ளி அறஞ்செய்தலை மேற்கொள்ளாதிருப்பினும், தன் செல்வம் மேன்மேல் வளர்தற்குரிய அரசியல் முறைகளையேனும் ஊன்றி உணர்ந்தானேவெனின், அம்முறைகளிலும் அவன் நன்கு கருத்தூன்றியவனுய்க் காணப்பட்டிலன். அரசன், தன்படைகள் நன்கு மகிழ்ச்சியோடு வாழும்படி செய்தல் வேண்டும். அவ்வழியில் வேண்டும் அளவு பொருளைச் செலவு செய்தல் வேண்டும். நலங்கிள்ளி அதனை ஊன்றி உணர்ந்திலன். அவன் படை வீரர் தொடக்கத்தில் ஆர்வத்தோடு போர் புரியினும், நாளடைவில் வறுமையாற்பிணிக்கப்பட்டு, அரசன்பால் வெறுப்புடையவராவர். அதனல், அரசாட்சியும் நாடும் சீர் குலையும். இந்நிலைமை உணர்ந்த புலவர் முதுகண்ணன் சாத்தனர் மற்றொரு பாடலில் இதனையும் நலங்கிள்ளிக்கு எடுத்துரைத்தனர்:

"வேந்தே, நீ கொடியவர்களை அழித்தலினும், நல்லோர்க்கு வேண்டும் நலங்களைப் புரிந்து அவர்களைக் காப்பதிலும் சிறிதும் சோர்வின்றிச் செயலாற்றுதல் வேண்டும். அறத்தையும் பாவத்தையும் கருதாமல்நடக்கும் கீழ்மக்களோடு சிறிதும் தொடர்பு கொள்ளாதிருப்பாயாக! அஞ்சாமல் பகைவரோடு

*புறம். 28.

போர் புரிந்து, அவர்தம் வளமிக்க நாடுகளைக் கைப்பற்றும் நின்னுடைய படை வீரர்கள், நின்னுடைய பகைவர்களைப்போல வறுமையால் துன்புற்றுச் சிறிய குடிசைகளிலிருந்து வாழுமாறு செய்தல் தகாது; அவர்கள் நன்கு மகிழ்ச்சியோடு வாழும்படி செய்தல் வேண்டும். நின்னை நோக்கிப் பிறவிடங்களிலிருந்து வருவார்க்கு, இடையில், நின் படை வீரர்களே வேண்டிய உதவிகளைச் செய்தற்குரிய நிலையில், அப்படை வீரர்கள் செல்வத்தோடு மகிழ்ந்து வாழும்படி நீ செய்தல் வேண்டும். கூத்தாடுபவர் அவ்வப்போது தாம் கொண்ட கோலத்தைக் களைந்து வேற்றுக்கோலங் கொள்வது போல, மக்கள் பிறப்பதும் இறப்பதுமாயுள்ள இவ்வுலகத்தில் நின் சுற்றத்தார் மகிழ்ச்சியோடு வாழும்படி செய்க! நீ ஈட்டும் பொருள்களை நினக்குப் புகழ் உண்டாதற்குரிய வழிகளிற் செலவு செய்வாயாக,''* என்றார்.

இங்குப் பொதுவாகச் 'சுற்றத்தார்' என்றதனால், அரசனுடைய உறவு முறையினர், அரசியல் வினை புரிவார் (அமைச்சர் முதலியவர்) ஆகிய இரு திறத்தாரையும் கொள்ளுதல் வேண்டும். இப்பாட்டினால், நலங்கிள்ளி தன் சுற்றத்தார், அரசியல் வினை புரிவார், படை வீரர் ஆகிய இவர்களுக்கும் நன்கு பொருள் கொடுப்பதில்லை என்பது புலனாகின்றது. அதனால், தொடக்கத்தில் நலங்கிள்ளியின்

* புறம். 29

வீரத்தினல் அவனுட்சி திறமுடையதாய்க் காணப் படினும், நாளடைவில் ஈகையின்மையால் அவனுட்சி சீர் குலைந்து அழிந்துவிடும் என்பதை உணர்ந்தே புலவர் சாத்தனர் இக்கருத்துக்களையும் எடுத்துக் கூறினர் எனக் கொள்க.

உறையூர் முதுகண்ணன் சாத்தனர் முயற்சி நன்கு பயனளித்தது: சோழன் நலங்கிள்ளி, புலவர் அறிவுரை கேட்டு ஈகைக் குணமுடையவனுயி னன். அஃது அவ்வரசன் பாடிய பாடலாலும் பிற புலவர்கள் பாடிய பாடல்களாலும் விளங்குகின்றது. நலங்கிள்ளி வஞ்சினங்கூறுதலாகப் பாடிய பாடலில், "என்னிடம் வந்து வணங்கி இரந்து வேண்டுவராயின், தொன்று தொட்டு வருகின்ற என்னுடைய அரசாட்சியைக் கொடுத்தல் மிக எளிது! என் உயிரை வேண்டினும் கொடுப்பேன்! ஆனல், என் ஆற்றலை மதியாமல் போருக்கு வருவாரை ஒழிக்காமல் விடமாட்டேன்!" என்று கூறினன்.

கோவூர்கிழார் பிறவறியரை விளித்து, "நலங்கிள்ளி வறுமையுற்று வருந்துவாருடைய வருத்தந் தீருமாறு வேண்டுவன அளிக்குந் தன்மையுடையான்; அவன் புகழைப் பாடுவோம்! எல்லீரும் வம்மின்!"* என்றும், "நலங்கிள்ளி உறையூரின் கண் உள்ளான்; அவன்பாற்சென்ருல், இனிப் பிறரிடம் சென்று இரத்தல் வேண்டாதவாறு நல்கு

* புறம். 32

வான்; பாணர்களே, அவனை நாடிச் சென்மின்; நலங்கிள்ளியின் புகழ் பாடும் விருப்புடையேன்; பிறரைப் பாடிப் பொருள் பெறுதலை விரும்பேன்,"* என்றும் கூறியுள்ளனர். இவற்றால், முதுகண்ணன் சாத்தனார் முயற்சியால் நலங்கிள்ளி சிறந்த ஈகையாளனாயினமை தெளிவாதல் காண்க.

* புறம். 68

## 3. வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கு அரசியல் முறை கூறுதல்

வெள்ளைக்குடி நாகனார் என்பவர், சங்ககாலத்துச் செந்தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். 'நாகன்' என்பது இவரியற்பெயர். 'வெள்ளைக்குடி' என்னும் ஊரில் வாழ்ந்தவராதலின், 'வெள்ளைக்குடி நாகனார்' என வழங்கப்பட்டார். இவர் பரிசில் வாழ்க்கையை மேற்கொள்ளாமல், உழவுத் தொழில் புரிந்து வாழ்ந்து வந்தவர். இவருடைய நிலங்கள் ஒரு சமயம் தக்க காலத்தில் மழையின்மையாலோ, வேறு எக்காரணத்தாலோ விளையாதொழிந்தன. அதனால், இவர் அக்காலத்துச் சோழநாட்டை ஆட்சி புரிந்த சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாற் சென்று, தம் குறையை ஒரு பாடல் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டனர். அப்பாடலின்கீழ், 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடிப் பழஞ்செய்க் கடன் வீடு கொண்டது,' என்ற குறிப்புக் காணப் படுகின்றது.

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அரசனுக்குரிய இலக்கணங்களைக் கூறுமிடத்தில்,

> **" கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
> **உடையானும் வேந்தர்க் கொளி."***

என்று கூறியுள்ளனர். இந்தத் திருக்குறளில்

* குறள். 390.

'கொடை' என்று முதலிற்கூறி, மீண்டும் 'குடி யோம்பல்' என்றெடுத்துக் கூறியதனால், கொடை யும் குடியோம்பலும் ஒன்றாக மாட்டா என்பது தெளிவாகும். வறுமையால் வருந்தி 'இல்லை' என் றிரப்பார்க்குக்கொடுத்தல் கொடையாகும். தளர்ச்சி அடைந்த குடிகளுக்கு வேண்டிய உதவி செய்து அவர்களைக் காத்தல் குடியோம்பலாகும். ஒருவ னுடைய விளைநிலம் மழையின்மை முதலிய காரணங் களால் நன்கு விளையாவிட்டால், அவ்வாண்டின் இறைப்பொருளை அவ்வாண்டில் வாங்காமல் நிறுத்தி வைத்து அடுத்த ஆண்டில் அவன் கொடுக்குமாறு செய்தலும், அடுத்த ஆண்டிலும் அவ்வாறே நல் விளைவில்லையாயின், இரண்டையும் சேர்த்துத் தள்ளி விடுதலும், சிறிதும் விளைவில்லையாயின், முதலாண் டிலேயே இறைப்பொருளை வாங்காமல் தள்ளிவிடு தலும் போன்ற செயல்கள் குடியோம்பல் என்று கூறப்பட்டன எனக் கொள்க.

வெள்ளைக்குடி நாகனாருடைய பாடலின்கீழ்ப் 'பழஞ்செய்க் கடன் வீடு கொண்டது' என்ற குறிப்புக் காணப்படுவதால், அவருடைய நிலத்தில் எக்காரணத்தாலோ முதல் ஆண்டில் நல்விளை வில்லை; அதனால், அவ்வாண்டின் இறைப்பொருள் வாங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டிலும் நல்விளைவில்லாமற்போகவே, எல்லா வற்றினையும் சேர்த்துத் தள்ளிவிடுதல் வேண்டும் என்ற குறிப்பினைத் தம் பாடலின் வாயிலாக

அரசனுக்கு எடுத்துரைத்தனர் புலவர்; அரசனும் புலவர் கருத்தை உணர்ந்து, அவர்பாற்பெற வேண்டிய இறைப்பொருளைப் பெருமல் விடுத்தனன் என்று நாம் உணர்தல் வேண்டும். அன்றியும், அரசன் வினை புரிவார் (அரசாங்க அதிகாரிகள்), முதலாண்டில் வரிப் பொருளை வாங்காமல் நிறுத்து தலை எளிதாகச் செய்துவிட்டனர். அடுத்த ஆண்டில் இரண்டாண்டின் வரிப் பொருளையும் தள்ளிவிடு தற்கு மனங்கொண்டிலர் போலும்! அதனல், புலவர் அரசன்பால் நேரே சென்று தம் குறை கூறுவாராயினர் என்பதும் புலனுகின்றது.

புலவர் அரசன்பாற்சென்று, "என் நிலம் நன்கு விளைந்திலது; ஆதலின், யான் கொடுக்க வேண்டிய இறைப்பொருளைத் தள்ளிவிடுக!" என்று வெளிப்படையாகக் கூறிரைல்லர். கூறுபவர் தமிழ் நலஞ்சான்ற புலவராதலின், பொதுவாக அரசர் இயல்பு கூறுவார் போலக் கூறித் தம் கருத்தைக் குறிப்பான் உணரும்படி செய்தனர். அன்றியும், அரசன், குடிகளின் நிலைமையை நன்குணர்ந்து, அவர்கள் துன்புரு வண்ணம் ஆட்சி செலுத்தும் இயல்பினனுதலின், புலவர் இவன் ஆட்சியை முதற் கண் நன்கு புகழ்ந்து கூறிப் பின் தம் கருத்தைக் குறிப்பான் உணர்த்துவாராயினர்.

புலவர், முதலில் கிள்ளிவளவனை நோக்கி, "அரசே, தமிழ் நாட்டை ஆளுகின்ற மூவேந்தருள்ளும் அரசு என்று சிறப்பாகச் சொல்லப்படுவது

நின்னுடைய அரசேயாகும். மூவேந்தர் நாடுகளுள் ளும் நாடு என்று சிறப்பாகச் சொல்லப்படுவது நின்னுடைய நாடேயாகும்,''* என்றார். மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாதது உணவுப் பொருளே யாதலின், சோழநாடு காவிரியின் வற்றாத நீர் வளத்தால், அவ்வுணவுப் பொருளை மிகுதியாகத் தருதலால், சேர பாண்டிய நாடுகளைவிடச் சோழ நாடே சிறப்புடைய நாடு என்றார். அன்றியும்,

**"நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல**
**நாட வளந்தரும் நாடு"†**

எனத் திருக்குறள் கூறுகின்றது. மக்கள் மிக உழைத்துப் பயன் பெறுமாறு உள்ள நாடு சிறந்த நாடாகாது; சிறிய உழைப்பினால் பெரும்பயன் பெறுமாறு உள்ள நாடே சிறந்த நாடு; பாரியின் பறம்புமலை போல உழைப்பின்றியும் சில பயன் தரும் நாடு மிகச் சிறந்த நாடு என்பது இதன் கருத்து.

சோழ நாடு இங்ஙனம் அமைந்திருத்தலால், சோழ நாடே நாடென்று சொல்லத் தக்கதென்றும், அந்நாட்டைச் செங்கோலனாய்க் கிள்ளிவளவனாண்டு வருதலால், அவன் அரசே அரசென்று சொல்லத் தக்கதென்றும் புலவர் புகழ்ந்தனர்.

இவ்வாறு முதலில் அரசனைப் புகழ்ந்து கூறிப் பின் தாம் கூறக் கருதிய சில கருத்துகளை எடுத் துக் கூறுகின்றார்: "அரசே, குடிகள் தங்கள்

---

* புறம். 35 † குறள், 739

குறைகளை எடுத்துக் கூற நின்னை நாடி வரும்போது அவர்கள் நின்னை எளிதிற்காணுமாறு, நீ அவர்கள் காட்சிக்கெளியனாய் இருத்தல் வேண்டும். அங்ஙனம் நீ இருப்பது அவர்கள் மகிழ்ச்சிக்குரிய முதற்காரிய மாகும்," என்றார். பின்னும், "உனக்குப் பிடிக்கப்பட்டிருக்கும் வெண்கொற்றக் குடை, மக்கள் வெயிலையும் மழையையும் தடுப்பதற்காகப் பிடிக்கும் குடை போன்றதன்று; குடிகள் மகிழ்ச்சியோடு வாழுமாறு ஆள்வதற்கு அறிகுறியாகப் பிடிக்கப் பட்டதாகும். அன்றியும், நின் படை வீரர்கள் போர்க்களத்தில் எதிர்த்து வரும் பகைவர்களைத் தாக்கி, அவர்கள் தோல்வியுற்றோடும்படி செய்து, அங்ஙனம் அப்பகைவர்கள் ஓடுவதைக் கண்டு ஆரவாரஞ் செய்து, நினக்கு வெற்றி எய்துவிப்பார்களன்றோ? அவ்வெற்றி உழவர்கள் நிலத்தை உழுது விளைவித்த விளைவின் பயனேயாகும். இவற்றை நீ நன்கு உணர்வையாயின், நின் மனத்துக்கு இனிமையுண்டாகும்படி பேசுகின்றவர்கள் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், உழு தொழிலாளரை முதன்மையாகக் குறிக்கொண்டு காத்து அதனால் எல்லோரையும் நன்கு காப்பாயாக! அங்ஙனம் காப்பாயாயின், நின் பகைவரெல்லாம் நின் அடி பணிந்து போற்றுவர்,"* என்றார்.

வெள்ளைக்குடி நாகனார் கூறியவற்றிலிருந்து சில கருத்துக்கள் உணர்தற்கு உரியனவாயுள்ளன:

* புறம். 35

கிள்ளிவளவன் நன்னெறியொழுகும் சீரியோனய் இருந்தாலும், இவனைச் சூழ்ந்துள்ளார் சிலர் (இவன் அரசியற்காரியங்களை நடத்தும் வினையாளர் சிலர்) நன்னெறியுடையோராயிருந்திலர் அவர் மக்களுக்கு உண்டாகும் இடர்ப்பாடுகளை அரசனுக்கு நன்கு எடுத்துரையாமல், "எல்லாம் நன்ருய் இருக்கின்றன," என்ருற்போல அரசனுக்கு இனிமையாகப் பேசிக்கொண்டிருந்தனர்; மக்கள் அரசனை எளிதிற் கண்டு தங்கள் குறைகளை எடுத்துரைக்குமாறு விடாமலும் இருந்தனர். அதனாலேயே புலவர் நேரே அரசனையணுகித் தம் குறைகளை எடுத்துரைப்பாராயினர் என்ற கருத்துக்கள் வெளிப்படுகின்றன. அன்றியும், "நீ காட்சிக்கெளியனயிருத்தல் வேண்டும்," என்றதனல், இப்போது இவன் காட்சிக்கெளியனய் இருந்திலன் என்பதும், "நீ உழுதொழில் செய்வாரை முதன்மையாகக் குறிக்கொண்டு காத்தல் வேண்டும்," என்றதனல், இப்போது அவர் குறை நீக்கிக் காக்கப்பட்டிலர் என்பதும், தாமும் அவர்களுள் ஒருவர் என்பதும், "உன் மனத்துக்கு இனிமையாகப் பேசுகின்றவர் சொற்களை அப்படியே ஏற்காதே," என்றதனல், இக்குறைபாடுகள் அரசன் அறியாவண்ணம் அரசியல் வினைபுரிவார் செய்கின்றனர் என்பதும் தெளிவாதல் காண்க.

குறையுற்ற ஒவ்வொருவரும் நேரே அரசன்பாற்சென்று, தங்குறைகளை எடுத்துக் கூறி, ஏற்ற

பரிகாரம் பெறுதல் இயலாத முறையாகும். அரசியற்காரியங்களை நடத்தும் தலைவர்களே குடிகளின் குறைகளை ஆராய்ந்துணர்ந்து, தக்க பரிகாரங்கள் செய்தல் வேண்டும். பெருங்குறையாயின், அரசனுக்கறிவித்துப் பரிகாரம் செய்வித்தல் முறையாகும். அவ்வாறு வெள்ளைக்குடி நாகனுருடைய குறையை அரசியலதிகாரிகளே உணர்ந்து தக்க பரிகாரம் செய்திருக்கலாம். அங்ஙனம் அவர்கள் செய்யாமல் புறக்கணித்ததனால், புலவர் நேரே அரசன்பாற்சென்று, தம் குறையும் அரசியலதிகாரிகள் நிலைமையும் அரசன் உணருமாறு எடுத்துரைப்பாராயினர். அவ்வாறு அரசனுக்கறிவித்ததனால், புலவர் குறை நீக்கப்பட்டது.

இவ்வாறு நற்குணமும் நல்லொழுக்கமும் இல்லாத சிலர் அரசியற்றுறைகளில் அமர்ந்து, மக்கள் குறைகளையுணர்ந்து அவற்றைப் போக்க முயலாமலும், தாமே மக்களுக்கு இடர்ப்பாடுகளை உண்டாக்கிக்கொண்டுமிருப்பார்கள். முதலில் நல்லவர்களாய் இருந்து பின்னர் இவ்வாறு ஆகிவிடுவாரும் உளர். அரசன் அரசியல் வினைபுரிபவர்களை அவ்வப்போது அவர்கள் உணராமல் ஆராய்ந்துணர்தல் வேண்டும். ஒற்றர்களைக்கொண்டு வேற்று நாடுகளில் அவ்வப்போது நடைபெறுவனவற்றை அரசன் உணர்வதுபோல, அவர்களைக்கொண்டே தன் அரசியல் வினைபுரிவார் நிலைமைகளையும் அவ்வப்போது உணர்தல் வேண்டும்.

**"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு."***

என்றார் திருவள்ளுவர். 'அரசன் தன் அரசியற்றலைவர்களைப்பற்றி எப்போதும் அவர்கள் அறியாமல் ஆராய்ந்தறிதல் வேண்டும். அத்தலைவர்கள் நன்முறையில் நடந்தால், எல்லாம் நன்றாக நடைபெறும்,' என்பது இத்திருக்குறளின் கருத்து.

THE MADURA TAMIL SANGAM

*குறள், 520

## 4. பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அரசியல் முறை கூறுதல்

மன்னன் இறைகொள்ளும் முறைபற்றி, நட்புக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய பிசிராந்தையார் என்னும் புலவர், பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசனுக்கு அழகாக எடுத்துரைத்துள்ளனர் :

நெல் முதலியவற்றைக் கலந்து யானைக்கு உணவாகக் கொடுப்பது வழக்கம். "ஒரு மா அளவினும் குறைந்த நிலத்தில் (மா என்பது ஒன்றில் இருபதில் ஒரு பாகம்; இங்கு ஒரு வேலி நிலத்தில் இருபதில் ஒரு பாகமாகும்.) விளைந்த நெல்லாயினும், அறுத்துக் கொணர்ந்து வைத்துக்கொண்டு கொடுத்தால், அந்நெல் ஒரு யானைக்குப் பல நாள் உணவாகும். ஆனால், அவ்யானை தானே அவ்வயலிற்புகுந்து விளைந்த நெல்லை உண்ணுமாயின், அவ்யானையின் வாயிற்புகும் நெல்லைவிட அதன் காலாலழியும் நெல் மிக அதிகமாகும். அது போல, அரசன் அரசியல் அறிவும் குடிகளிடத்தில் அருளும் உடையவனாய், முறைப்படி குடிகளிடத்தில் வரி வாங்குவானாயின், அக்குடிகள் அரசனுக்கும் வரிகொடுத்துத் தாங்களும் செல்வமுடையவர்களாய் வாழ்வார்கள். மன்னன் அரசியலறிவும் குடிகளிடத்தில் அருளும் இல்லாதவனாய், அரசியல்முறைப்படி நடவாமல் தன்மனத்திற்கு இனிமையானவற்றையே கூறி ஆரவாரம் செய்யும் வினையாளரைக்கொண்டு, குடிகளின் நிலைமை அறியாமல், அவர்கட்குத் தன்னிடத்து அன்பு குறையு

மாறு வரி வாங்குவானாயின், யானை புகுந்த வயல் போலத் தானும் குடிகளிடத்திலிருந்து நன்கு பொருள் பெறான்; குடிகளும் நன்கு வாழ மாட்டார்கள்,"* என்று அறிவுறுத்தினர் புலவர்.

இதனால், 'குடிகளைத் துன்புறுத்தாமல் வரி வாங்குதல் வேண்டும். ஒவ்வொருவரிடமும் அவசியம் வரி வாங்குதல் வேண்டும் என்றெண்ணாமல், நிலைமையை ஆராய்ந்துணர்ந்து, நிறுத்தி வைக்க வேண்டுவார்க்கு நிறுத்தி வைத்தும், தள்ளிவிட வேண்டுவார்க்குத் தள்ளிவிட்டும், ஏனையரிடத்து வரி வாங்குதல் வேண்டும்,' என்பது குறிப்பான் உணர்த்தப்பட்டது.

'பாண்டியன் அறிவுடைநம்பி தமிழறிவு நிரம்பியவன்; கவி பாடும் ஆற்றலுள்ளவன். அவனுக்குப் பிசிராந்தையார் இங்ஙனம் எடுத்துக்கூறக் காரணம் என்னை?' என்றெண்ணுவோமாயின், கிள்ளிவளவன் ஆட்சியில் வினையாளர் அரசியல் முறைப்படி ஒழுகாதவர்களாயும், குடிகளின் நலனை எண்ணாதவர்களாயுமிருந்தாற்போல, பாண்டியன் அறிவுடை நம்பி ஆட்சியிலும் வினையாளர் அரசியல் நெறிப்படி ஒழுகாதவர்களாயும் குடிகளின் நலனை எண்ணாதவர்களாயுமிருந்தனராதல் வேண்டும். அதனால், அக்குறைதீரப் புலவர் அரசனுக்கு அறிவுறுத்தினர் என்பது புலனாகின்றது.

---

*புறம். 184

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்."*

என்றார் திருவள்ளுவர். 'அரசன் குடிகளிடத்தில் அருளுடையவனாய் இருந்துகொண்டு, அவ்வருளுக்குக் குறை வாராதபடி, குடிகள் அன்போடு கொடுக்குமாறு வரி வாங்குதல் வேண்டும். அரசன் குடிகளிடத்தில் அருளற்றவனாய்க் குடிகள் துன்புற்று அழுத கண்ணீரோடு கொடுக்கும் இறைப் பொருளை வாங்குதல் பெருந்தவறாகும்,' என்பது இதன் கருத்து.

பாண்டியன் அறிவுடைநம்பி சிறந்த கல்வி அறிவும் அரசியலறிவும், குடிகளிடத்து அருளுமுடையவனாயிருப்பினும், அவன் அரசியல் வினையாளர் குடிமக்கள் துன்பம் கருதாமல், அரசனுக்கு இனிமையாக நடந்துகொள்ளுதல் வேண்டும் என்ற ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, குடிமக்கள் துன்பங்களைத் தாங்களாகவும் போக்காமல், அரசனுக்கும் அறிவுறுத்தாமலிருந்ததனால், புலவர், மக்கள் துன்பங்கண்டு மனம் பொறாதவராய், அரசியல் வினையாளருக்கு அறிவுறுத்துவதனாற் பயனுண்டாகாதென்றெண்ணி, நேரே அரசன்பாற்சென்று அறிவுறுத்துவாராயினர். இவ்வாறு எடுத்துக் கூறினால், அரசன், "நம் அரசியலிற் குறைகள் உள்ளன போலும்! அதனாலேயே புலவர் இங்ஙனம் கூறுகின்றார்," என்றுணர்ந்து, தன் வினையாளரைத்

*குறள், 755

திருத்த முயலுவான் என்று புலவர் பிசிராந்தையார் கருதினர் எனக் கொள்க.

இவ்வாறு பேகன்பாற்கண்ட பிழையொழுக்கத்தையும், சோழன் நலங்கிள்ளிபாலிருந்த அறஞ் செய்யாமையையும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் அறிவுடை நம்பி இவர்கள்பாற்கண்ட அரசியலின் குறைபாடுகளையும் புலவர் அவரவர்க்கேற்றவாறு எடுத்துக்கூறி, அவர்களைத் திருத்தி, நாடு நலனுறுமாறு செய்தனரெனக் கொள்க.

# IV. நட்பின் சிறப்பு

## 1. கபிலர் பாரியினிடத்துக் கொண்ட நட்பின் சிறப்பு

புலவர் அவ்வப்போது ஆங்காங்குள்ள கொடைக்குணம் மிக்க மன்னர்களிடமும் அத்தகைய குறுநில மன்னர்களிடமும் சென்று, அவர்கள் புகழ் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்தனரெனினும், ஒவ்வொருவர் ஒவ்வொருவரிடம் மிக்க அன்பும் ஆதரவுமுடையவராய் விளங்கினர். பாரியும் கபிலரும் மிக்க நட்புடையராய் விளங்கினர். அதிகமான் நெடுமானஞ்சியும் ஔவையாரும் பெருநட்புடையராயிருந்தனர். கோப்பெருஞ்சோழனிடத்துப் புலவர் பலர் சிறந்த நட்புடையராயிருந்தனராயினும், கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் உயிரொன்றிய நட்பினராய் விளங்கினர். இவ்வாறு நட்பிற் சிறந்த புலவர் பலராவர்.

கபிலர், வேள் பாரி, மலையமான் திருமுடிக்காரி, பேகன், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் முதலிய பலரைப் பாடியுள்ளாராயினும், அவர் வேள் பாரியிடத்தில் மிக்க அன்புடையராய் அவனுடன் வாழ்ந்திருந்தனர். பாரியும் தன்பால் வந்த புலவர் எல்லாரிடத்தும் அன்புடையனாய்ப் பரிசில் வழங்கினனெனினும், கபிலரிடத்துப் பெருமதிப்பும் பேரன்புமுடையனாயிருந்தான். கபிலரின் புலமைத் திறத்

தையும் குணச் சிறப்பையும் கண்ட பாரி, அவரைத் தன்னிடமே வைத்துக்கொண்டனன். கபிலரும் பாரியை அடைந்த பின்னர், அவன்பாற் பரிசில் பெற்றுக்கொண்டு வேறிடம் செல்ல எண்ணமல், அவன் குணங்களாற் பிணிக்கப்பட்டு, அவனிடமே தங்கிவிட்டனர் போலும்! 'பாரி தன் ஆட்சிக்குட் பட்ட முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கி ஞன்,' என்று கபிலர் வாயாரப் புகழ்ந்து பாடினர். ஆனல், அக்கபிலர் வேள் பாரியிடம் தமக்கென்று சில ஊர்களைப் பரிசிலாகப் பெற்றிருந்தனரென்பது அறியப்படவில்லை. கபிலர், பாரி வேறு தாம் வேறு என்றெண்ணமையால், அங்ஙனம் பெற்று வைத்துக்கொள்ள எண்ணங் கொண்டிலர் போலும்!

பாரி இறந்தபின், பாரியின் நற்குணங்கள் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் இருப்பதுணர்ந்து, கபிலர் அவனைக் கண்டு புகழ்ந்து பாடினர். தமிழ் நலங்கனிந்த செஞ்சொற்கவிஞர், யாரிடத்தாயினும் அரிய குணங்கள் அரிய செயல் கள் காணப்பட்டால், அவற்றைக் கண்டு வியந்து பாடாதிரார். பாடாதிருக்க அவர் மனம் ஒருப் படாது. செல்வக் கடுங்கோ வாழியாதன் பாரியின் அருங்குணங்களையுடையன் என்பதறிந்த கபிலர், வியப்புற்று, அவனைக் காணுதிருக்கமாட்டாதவராய், உடனே சென்று அவனைக் கண்டு பாடினர் போலும்! 'உடனே' என்றாலும், பாரியின் மகளிர் திறத்தில் தம்மாலாவன செய்த பின்னர் என்றே

கொள்ளுதல் வேண்டும். மலையமான் திருமுடிக் காரியையும் பேகனையும் கபிலர் கண்டு பாடியது பாரியை அடைவதற்கு முன்னர் என்று கொள்வது பொருத்தமாகும்.

அவ்வாறு, பாரியின் குணங்களால் மிக மகிழ்ந்து அவனுடனிருந்த கபிலர், பாரி மூவேந்தர் சூழ்ச்சியால் இறந்த போது, அவனைப் பிரிந்திருக்க மாட்டாமல், உடனிறக்க எண்ணினர். ஆனால், பாரி எக்காரணத்தாலோ அப்போது அவர் அவ்வாறு செய்தல் வேண்டாவெனத் தடுத்தனன். 'புலவருடைய புலமையின் பயனை நாடு இன்னும் சில காலம் எய்துவதாக,' என்றெண்ணியோ, அன்றிக் கபிலரும் இறந்துவிட்டால் தன் மகளிர் தக்க துணையிலராவர் என்றெண்ணியோ, வேறு காரணத்தாலோ, அப்போது உடனிறத்தல் வேண்டாவெனத் தடுத்தனன் பாரி.

கபிலர் பாரி இறந்தபின் அவனை நினைந்தும், அவன் வளமிக்க பறம்பு மலையைப் பார்த்தும் பலவாறாகப் புலம்பி வருந்தினர். கவி நலஞ் சிறந்த அப் புலவர் புலம்பல், சில அருங்கவிகளாய் இப்போது புறநானூற்றில் விளங்குகின்றன. பாரி மகளிரும் தமிழறிவும் கவி வன்மையும் உடையவராயிருந்தனர். அவர்கள் தந்தையை இழந்து வருந்திப் பாடிய பாடலொன்று புறநானூற்றிற் காணப்படுகின்றது. 'பாரி மகளிர்' என்று குறிக்கப்பட்டிருத்தலால், அவர்கள் இருவராவதிருத்தல் வேண்டும்.

கபிலர் துணையோடு பறம்பு நாடு விட்டுச் சென்ற பாரிமகளிர், ஒரு நாளிரவில் நல்ல நிலவொளி வீசியபோது, அதற்குமுன் தாமும் பாரியும் இவ்வாறு வீசிய நிலவொளியிற் பறம்பு மலையில் மகிழ்ந்திருந்ததை நினைந்து வருந்தினர். "முன்னாள் நிலவொளியிற் பகை வேந்தர் எம் பறம்பு மலையைக் கவர்ந்திலர்! எந்தையும் யாமும் அதன் கண் மகிழ்ந்திருந்தோம்! இந்நாள் நிலவிற் பகைவர் எம் பறம்பு மலையைக் கவர்ந்தனர்! யாமும் எந்தையை இழந்தேம்!"* என்று கூறி நைந்தனர்.

கபிலர் பறம்பு மலையை நோக்கி, "பாரி வாழ்ந்திருந்த போது நீ எமக்குப் பல வகையான உணவுகளைத் தந்து எம்மோடு நட்புக் கொண்டிருந்தனை! இப்போது பாரியை இழந்தேம்! மனங்கலங்கிச் செயலற்றுக் கண்ணீரோடு நின்னைத் தொழுது கொண்டு, பாரி மகளிர்க்குரிய கணவரை நாடிச் செல்கின்றேம்!"† என்று கூறினர். பறம்பு நாட்டை நோக்கி, "பாரியின் சிறந்த குணங்களாலும், கைவண்மையாலும், செங்கோலாட்சியினாலும் பறம்பு நாட்டிற் சான்றோர் பலர் குழுமியிருந்தனர்; அதனால், அந்நாடு பெயல் பிழைப்பில்லாமல் வளமிக்கு விளங்கிற்று; இப்போது பாரியிறந்தமையால், இனி அச்சான்றோர் வேறிடம் நாடிச் செல்வர்; பறம்பு நாடும் வளமிழக்கும்,"‡ என்றனர். அங்கு எண்ணாட்டிங்களபோல அரைவட்ட வடிவினதாய் ஓர் அழகிய

---

* புறம். 112 † புறம். 113 ‡ புறம். 117

குளம் உண்டு. அது உண்பார்க்கினிய தெளிந்த நீரை உடையது. கபிலர் அக்குளத்தின் அருமை நினைந்து, 'இனி இக்குளம் போற்றுவாரின்றி அழியும் போலும்!'* என வருந்தினர். இங்ஙனம் பலவாறாகக் கபிலரும் பாரி மகளிரும் பாரியையும், பறம்பு நாட்டையும், பறம்பு மலையையும் நினைந்து வருந்திக் கொண்டு சென்றனர்.

கபிலர் பாரிமகளிர்க்கு நல்லதோர் அரச குடியில் மணமுடித்து வைக்க விரும்பினர். விரும்பிய கபிலர், பாரி மகளிரை அழைத்துக்கொண்டு நெடுந் தூரம் நடந்து, விச்சிக்கோன் என்ற அரசனிடம் சென்றார். மூவேந்தரும் பாரியை வஞ்சித்துக் கொன்றனராதலின், அவர்கள்பாற்செல்லக் கபிலர் எண்ணிலர் போலும்! விச்சிக்கோனிடம் சென்ற கபிலர், பாரிமகளிரை மணம் செய்துகொள்ளுமாறு அழகாக எடுத்துரைத்து வேண்டினர் :

"கடுவன் பலாப்பழத்தைப் பறித்துத் தன் மந்தியோடுண்டு உயர்ந்த உச்சியிற்சென்று மகிழ்ந்திருத்தற்கிடமான மலையையுடைய விச்சிக்கோவே, இவர்கள், முல்லைக்கொடி புலவர்களைப் போலச் செஞ்சொற்கவிகளைப் பாடாதாயினும், அஃது ஏறிப் படருமாறு தன் தேரைக் கொடுத்த பாரியின் மகளிர். யான், பரிசிலன்; அந்தணன். யான் நினக்கு இவர்களை மணஞ்செய்து கொடுக்கின்றேன்; நீ மணந்து மகிழ்ந்து வாழ்வாயாக!"† என்று கூறி

---

* புறம். 118 † புறம். 200

னர் கபிலர். "கடுவன் பலாப்பழத்தைப் பறித்து மந்தியோடு உண்டு வாழும் மலையையுடையவனே," என்றதனால், "நீயும் இவர்களை மணந்து மகிழ்ச்சியோடு வாழ்வாயாக," என்ற குறிப்பையும், "முல்லைக் கொடிக்குத் தேரீந்த பாரியின் மகளிர் இவர்," என்றதனால், "அத்தகைய அருளுடையான் மகளிராகிய இவர் வருந்தாதவாறு இவர் திறத்து நீயும் அருளுடையனாதல் வேண்டும்," என்ற குறிப்பையும், "யான் பரிசிலன்; அந்தணன்," என்றதனால், "பரிசிலனாகிய என் குறையை அரசனாகிய நீ முடித்தல் நின் கடனாகும்; இப்போது என் குறையாவது, நீ இவர்களை மணஞ்செய்துகோடலேயாகும்; ஆதலால், என் குறையை நீ முடித்துத் தருக," என்ற குறிப்பையும் புலப்படுத்தி வேண்டினார் கபிலர்.

ஆனால், விச்சிக்கோன் பாரிமகளிரை மணந்து கொள்ள உடன்பட்டிலன். "மூவேந்தர்க்கும் பகைவனாகிய பாரியின் மகளிராதலின், இவர்களை மணந்துகொண்டால், அம்மூவேந்தரும் நம்பாற் பகைமை கொள்வர்," என்ற எண்ணத்தினாலோ, வேறு எக்காரணத்தினாலோ, விச்சிக்கோன் பாரிமகளிரை மணந்துகொள்ள உடன்பட்டிலன்.

அதன்பின் கபிலர் பாரிமகளிரை அழைத்துக்கொண்டு இருங்கோவேள் என்ற அரசனிடஞ்சென்று, தம் குறைகூறி வேண்டினர். ஆனால், கபிலர் விச்சிக்கோனிடம் கூறியவாறு இருங்கோவேளிடம் கூறிற்றிலர்; முறையை மாற்றிக் கூறியுள்ளனர்.

தாம் கூறிய முறையில் தவறு கண்டு, அதனால் விச்சிக்கோன் மறுத்தனன் என்று கபிலர் எண்ணினர் போலும்! விச்சிக்கோனிடம், "இவர் பாரி மகளிர்; யான் பரிசிலன்; யான் கொடுக்கின்றேன்; நீ ஏற்றுக்கொள்," என்றார். பரிசிலர் வேண்டிய பொருளை அவர்க்குக் கொடுப்பது அரசனுக்குப் பெருமையாகுமேயன்றி, பரிசிலரிடம் அரசன் ஒரு பொருளை வாங்குவது பெருமையாகாது; அன்றியும், கொடுத்தல் என்பது உயர்ந்தார்க்கு வழங்குஞ்சொல்; கபிலர், "யான் கொடுக்கின்றேன்; நீ ஏற்றுக்கொள்," என்றார். "நினக்கியான் கொடுப்பக் கொண்மதி," என்பது கபிலர் கூற்று. புலவர் புலமைச் செல்வத்தாலும், உள்ளப் பண்பாலும் அரசனினும் மேம்பட்டவராவர்; ஆயினும், பொருட்செல்வத்தால் குறைந்தவராவர்; அரசனிடம் பொருள் வேண்டிப் பெறுபவராவர். மணம் புரிவார் பெரும்பாலும் ஒத்த நிலையைக் கருதுவதியல்பு. ஈண்டுப் புலவர் கூற்றுத் தம்மை உயர்வாகக் கருதும்படி செய்துவிட்டது. இவ்விரு குறைகள் காரணமாக விச்சிக்கோன் மறுத்தனனே என்றெண்ணிக் கபிலர் இருங்கோவேளிடம் முறையை மாற்றிக் கூறினர்.

இருங்கோவேளை நோக்கி, "அரசே, இவர்கள் தன் நாட்டு ஊரெல்லாம் பரிசிலர்க்களித்து, முல்லைக் கொடிக்குத் தன் தேரையீந்து அழியாப் புகழ் பெற்ற பாரியின் மகளிர்; யான் பாரியின் தோழன்; அம்முறையால் இவர் என் மகளிராவர்; அன்றியும்,

யான் புலவன்; இவர்களை அழைத்து வந்துள்ளேன்; யான் தர இவர்களை மணந்துகொள்க,"* என்று வேண்டினர் புலவர். அவனும் மூவேந்தர்கட்கு அஞ்சியோ, வேறு எக்காரணத்தாலோ, மணந்து கொள்ள உடன்பட்டிலன்.

அது கண்ட கபிலர்க்குப் பெருவெகுளியுண்டாயிற்று. அதனால், அவர் இருங்கோவேளை நோக்கி, "நீ அரசனுமல்லை! வீரனுமல்லை! வேங்கை மலர் சிதறிக் கிடக்கின்ற மலைப்பாறை, சேய்மையிலுள்ளார்க்குப் புலி போலத் தோன்றி அச்சுறுத்தும்; அது போல, அரசாளுந்திறமும் அதற்கேற்ற வீரமுமில்லாத நீ, அரச கோலத்தோடு பிறர்க்கு அரசன் போலத் தோற்றுகின்றனை. 'இவர் பாரியின் மகளிர்; இவர்களை மணந்துகொள்,' என்று நின் நிலை அறியாமல் நின்னை நோக்கி யான் கூறியது தவறு; அது பாரியின் பெருமைக்கு இழுக்காகும்; அதனால், அச்சொல்லை மறந்துவிடுக; நீ வாழ்வாயாக!"† என்று இகழ்ந்து கூறிச் சென்றனர்.

கபிலர் விச்சிக்கோன் மறுத்ததற்கு வெகுளாமல், இருங்கோவேள் மறுத்ததற்கு மட்டும் வெகுண்டு கூறியதனால், விச்சிக்கோனிடம் தாம் கூறிய முறை தவறு என்றெண்ணியே இருங்கோவேளிடம் அம்முறையை மாற்றிக் கூறினர் என்பதும், அப்படியும் அவன் மறுத்ததனால் கபிலர்

---

*புறம். 201. †புறம். 202.

இவ்வாறு வெருண்டு கூறினர் என்பதும் நன்கு விளங்குகின்றன.

விச்சிக்கோனும் இருங்கோவேளும் பாரிமகளிரை மணந்துகொள்ள மறுத்த பின், கபிலர் பாரி மகளிரை எங்கு அழைத்துச்சென்றனர் என்பதுபற்றித் தக்க பழைய சான்று ஒன்றும் கிடைத்திலது.* புறநானூறு 236-ஆம் பாடலால் கபிலர் பாரியைப் பிரிந்து உயிர் வாழ்ந்திருக்க விரும்பாமல் உயிர் துறந்தனர் என்பது மட்டும் தெரிகின்றது: "இப்பிறப்பில் யானும் பாரியும் நட்புக்கொண்டு மகிழ்ந்திருந்தாற்போல, மறு பிறப்பிலும் யானும் பாரியும் நட்புக்கொண்டு மகிழ்ந்து வாழுமாறு என் நல்வினை கூட்டுவதாக," என்று சொல்லிக்கொண்டு கபிலர் உயிர் துறந்தனர். கபிலர் வடக்கிருந்து உயிர் துறந்தனர் என்று அப்பாட்டின் குறிப்புக் கூறுகின்றது.

*கபிலர் பாரியின் மகளிரைப் பார்ப்பாரிடத்தில் அடைக்கலமாக ஒப்படைத்து இறந்தனர் என்றும், பின்னர் அம் மகளிர் ஔவையாரால் மலையமான் மக்களுக்கு மணமுடிக்கப் பட்டனர் என்றும் கதைகள் வழங்குகின்றன.

## 2. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார், பொத்தியார் இவர்கள் நட்பு

கோப்பெருஞ்சோழன் குணநலமும் ஆட்சித்திறனும் ஒருங்கமைந்த பேரரசன். புலவர் பலர் அவன் குணங்களால் பிணிக்கப்பட்டு, அவன்பால் உயிரொன்றிய நட்புடையராய் விளங்கினர். பாண்டி நாட்டிலிருந்த பிசிராந்தையார் என்னும் புலவர் கோப்பெருஞ்சோழனைக்கண்டு பழகாமலே அவன் குணங்களைக் கேட்ட அளவாலே அவன்பால் உயிரொன்றிய நட்புடையராயிருந்தனர். அவரை, 'நும் பெயர் யாது?' என்று எவரேனும் வினவின், "என் பெயர் கோப்பெருஞ்சோழன்," என்பாராம். அவர் அத்துணை நட்புடையவர்.

கோப்பெருஞ்சோழனுக்கும் அவன் புதல்வர்க்குமிடையே பகைமை தோன்றிப் போர் தொடங்கிய போது, புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் இடைநின்று அறவுரை கூறிப் போரை விலக்கிய செய்தி முன்னர்க் கூறப்பட்டது. அப்போர் நிறுத்தப்பட்ட பின் கோப்பெருஞ்சோழன் உயிர் வாழ்ந்திருக்க விரும்பவில்லை. அதனால், அவன் உறையூருக்கண்மையில் ஒரு மர நிழலில் அமர்ந்து பட்டினியிருந்து உயிர் துறந்தான். தாமே விரும்பிப் பட்டினியிருந்து உயிர் துறத்தலுக்கு வடக்கிருத்தல் என்று அக்காலத்திற் பெயர் வழங்கினர்.

சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கு மிடையே தோன்றிய போர் இருமுறை கோவூர் கிழாரால் நிறுத்தப்பட்டும், மீண்டும் அவ்விருவருக்கு மிடையே போர் நிகழ்ந்தது. நெடுங்கிள்ளி கொல் லப்பட்டான். அது போலக் கோப்பெருஞ்சோழ னுக்கும் அவன் புதல்வர்க்குமிடையே தோன்றிய போர் புல்லாற்றூர் எயிற்றியனாரால் நிறுத்தப்பட்ட பின், மீண்டும் அவ்விருசாரார்க்குமிடையே போர் தோன்றவில்லை. யாரும் கொல்லப்படவுமில்லை. ஆயினும், புல்லாற்றூர் எயிற்றியனார் பாடிய போர் நிறுத்தச் செய்யுளின் கீழ், "புல்லாற்றூர் எயிற் றியனார் பாடி உய்யக்கொண்டது" என்று குறிப்பு எழுதப்படாமல், "புல்லாற்றூர் எயிற்றியனார் பாடி யது" என்று மட்டும் எழுதப்பட்டுள்ளது. புலவர் முயற்சியால் போர் நிறுத்தப்பட்டாலும், கோப் பெருஞ்சோழன், தன்னுடன் பகைத்த புதல்வரோடு ஒன்றி வாழ மனமில்லாமல், பட்டினியிருந்து உயிர் துறந்தமையால், புல்லாற்றூர் எயிற்றியனார் பாடிய செய்யுளின்கீழ் "பாடி உய்யக்கொண்டது" என் றெழுதப்படாமல், வாளா "பாடியது" என்றெழு தப்பட்டதெனக் கொள்க.

கோப்பெருஞ்சோழன் வாழ்க்கையில் வெறுப் புற்று வடக்கிருந்த போது, அவன்பால் நட்புப் பூண்ட புலவர் பலர் அவனை விட்டுப் பிரிந்து வாழ விரும்பாமல், தாமும் அவனோடு வடக்கிருந்து உயிர் துறந்தனர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கத்

தொடங்கியவுடன், "பாண்டி நாட்டிலிருக்கும் பிசிராந்தையார் இச்செய்தி கேட்டுத் தாமும் வடக்கிருத்தலை விரும்பி வருவார்; அவருக்கும் ஓரிடம் அமைக்க,"* என்றனன். அது கேட்ட அங்கிருந்த சான்றோர், 'இப்படியும் ஒருவர் வருவரோ!' என்றெண்ணி, அரசன் கூறியதை மனங்கொள்ளாமல் புறக்கணிப்பாயிருந்தனர். அதனைக் குறிப்பான் உணர்ந்த கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பின் திறத்தை மீண்டும் வற்புறுத்த, "பிசிராந்தையார் யான் வாழ்ந்திருந்த காலத்தில் வாராராயினும், யான் இன்னலையுற்ற இககாலத்தில் வாராதிரார்,"† என்றான். அதன்மேலும் ஆண்டிருந்தோர் அரசன் கருத்தை ஏற்றுக்கொள்ளாக் குறிப்பினராயிருந்தமை கண்ட அரசன் மேலுங்கூறினன்: "நீங்கள், 'பிசிராந்தையார் இதுகாறும் இவ்வரசனைப்பற்றிக் கேட்டறிந்த அவ்வளவேயல்லாமல், கண்டு பழகியவரல்லர்; ஆதலால், இப்போது அவர் வருதல் அரிது,' என்றெண்ணுதீர்கள்; பிசிராந்தையார் என்பாற் சிறிதும் இகழ்வில்லாதவர்; இனிய குணங்களையுடையார்; உயிர் ஒன்றிய காதற்கிழமையுடையார்; புகழ் அழியுமாறு ஒரு பொய் கூறவும் விரும்பாதவர்; அத்தகையவர் இவ்வின்னுக்காலத்து வாராது இரார்,"‡ என்றான். அரசன் கூற்றுப் பொய்படாவாறு புலவர் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் நிலைமை கேட்டு வருந்தி, விரைந்து வந்து, தாமும் அரசனோடு வடக்கிருப்பாராயினர். அது

*புறம். 215. †புறம். 216. ‡புறம். 216.

கண்டு ஆண்டிருந்த சான்றோர் அளவிறந்த வியப் புறுவாராயினர்.

"இத்தகைய நட்பினரை யாம் இதுகாறும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. கண்ணுற்கண்டு பழகிய பழக்கம் சிறிதுமில்லாமல், கேட்ட துணை யானே இவ்வளவு நட்புடையராய் ஒருவர் இருப்பார் என்று நினைத்தலும் இயலவில்லை. இவ்வரசன் பிசி ராந்தையாரை ஒருநாளும் கண்டிலன். கேள்வியாற் பழகிய துணையானே, 'இந்நேரத்திற் பிசிராந்தை யார் ஈண்டு வருதல் ஒருதலை,' என்று கூறிய அரசன் உறுதியும், அது பழுதாகாமல் வந்து சேர்ந்த பிசி ராந்தையாருடைய குணநலமும் நினைக்க நினைக்க அளவிறந்த வியப்பைத் தருகின்றன! தன் ஆட்சிக் குட்படாத நாட்டிலிருந்த ஒரு சான்றோருளளத்தை இவ்வாறு தன் குணச்சிறப்பாற் பிணித்திருந்த இவ்வரசனை இழக்கின்ற இவ்வுலகம் இனி என்ன நிலையையடையுமோ!"* என்று ஆண்டிருந்த சான் றோர் வியந்தும் வருந்தியும் கூறினர்.

பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனுர் என்னும் புலவர் கோப்பெருஞ்சோழனிடம் மிகுந்த நட்புடையவர். அவர் கோப்பெருஞ்சோழன் செய்தியை உடனே உணர்ந்திலர்; சிறிது காலந் தாழ்த்துணர்ந்தனர்; உணர்ந்தவுடன் வருந்தி வந்தனர். ஆனல், அவர் வருதற்குள்ளாகக் கோப்பெருஞ்சோழனும் பிசி

* புறம். 217.

ராந்தையாரும் பிற புலவர் சிலரும் வடக்கிருக்கத் தொடங்கிவிட்டனர். வடக்கிருக்கும் போது ஒருவ ரோடும் உரையாடார். பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனர் வந்தபோது ஆண்டிருந்த அரசனும் புலவர் களும் பேசவில்லை. அது கண்ட அப்புலவர் மனம் வருந்தி, "யான் காலந்தாழ்த்து வந்ததற்கு என்னை வெறுத்து என்னுடன் பேசாதிருக்கின்றீர் போலும்!" என்று வருந்திக் கூறித் தாமும் வடக் கிருப்பாராயினர்.

பொத்தியார் என்னும் புலவர் கோப்பெருஞ் சோழனிடத்து மிக்க அன்புடையவர். அரசன் அவ ரோடு அளவளாவி மகிழ்தலைப் பெரும்பேருகக் கருதியிருந்தான். அப்புலவரும் அரசனோடு உயிர் துறக்க எண்ணினர். ஆனல், பொத்தியார் புதல் வற்பேறு எய்தாதவராதலின், அரசன் அவரைத் தடுத்து, "புதல்வற்பேறு எய்திய பின் வடக்கிருக்க லாம்," என்று கூறினன். பொத்தியார் அரசனை விட்டுப் பிரிந்து உறையூர் சென்று, கோப்பெருஞ் சோழனில்லாத நகரம் பாழ்பட்டுத் தோன்றியது கண்டு, ஆற்ருது வருந்தினர். "கோப்பெருஞ் சோழன் பாடி வரும் புலவர்க்கும் ஆடுதலிற் சிறந்த கூத்தர்க்கும் அவர் துயர் தீர அன்போடளித்துப் புகழ் பெற்றவன்; அறத்திறமுணர்ந்த அறிஞராற் புகழப்பட்ட செங்கோலையுடையவன்; சான்ருே ராற்புகழப்பட்ட சிறந்த நட்பினையுடையவன்; மெலியார்முன் மெல்லியனுயும் வலியார்முன் வன்மை

மிக்கவனுயும் விளங்கினன் ; சிறந்த அறிஞர்க்கெல்லாம் புகலிடமாயுள்ளவன். அத்தகையான் அருமை அறியாமல் கூற்றம் அவனுயிர் கொண்டு சென்றது !"* என்று அவனிறந்த பின் பொத்தியார் வருந்திக் கூறினர்.

அரசனும் புலவர்களும் வடக்கிருந்து உயிர் துறந்த பின், அவ்விடத்தில் அவர்களுக்கு வீரக்கல் நட்டு மக்கள் பாராட்டினர்கள்.

புலவர் பொத்தியார் தமக்குப் புதல்வன் பிறந்த பின், நடுகல்லாய் விளங்கிய கோப்பெருஞ் சோழனிடம் சென்று, "யான் நின் பக்கலில் வடக்கிருக்க விரும்புகின்றேன்; அதற்கு இடந்தருக," என்றனர். நடுகல்லாயிருந்த அரசன் சிறிது விலகிப் புலவர்க்கு இடமளித்தனன். இவ்வரிய நிகழ்ச்சி கண்ட பொத்தியார், கோப்பெருஞ்சோழனைப் புகழ்ந்து பாடினர். ஏனையோர் இருவரிடத்துமமைந்திருந்த நட்பின் திறத்தைப் புகழ்ந்தனர்.

---

* புறம். 221

## 3. சேரமான் பெருஞ்சேரலாதனும் அறிஞர் நட்பும்

இத்தகைய நட்புரிமை மற்றோரிடத்தும் காணப்படுகின்றது. சேரமான் பெருஞ்சேரலாதன் என்ற அரசனிடத்தில் புலவர் பலர் மிக்க நட்புடையராயிருந்தனர். அரசனும் புலவர்களிடத்து மிக்க அன்புடையனாயிருந்தான். சேரமான் பெருஞ் சேரலாதனுக்கும் சோழன் கரிகாற்பெருவளத் தானுக்கும் பகைமை தோன்றிப் போர் தோன்றியது. அப்போரில் சோழன் விட்ட அம்பு பெருஞ் சேரலாதன் மார்பிற்பட்டு ஊடுருவி, முதுகின் வழியே போய்விட்டது. அது கண்ட பெருஞ்சேர லாதன் மிக்க நாணமடைந்தான். அவன் முதுகிற் காணப்படும் அப்புண், அம்பு மார்பிற்பட்டு முதுகு வழியே சென்றதனாலுண்டாயது என்றறியாதார், "இவ்வரசன் போரில் தோற்றோடினன்; அப் போது பகைவர் விட்ட அம்பு இவன் முதுகிற் பட் டுப் புண் உண்டாயிற்று," என்றே எண்ணுவார். ஆதலின், மிக்க நாணமடைந்த பெருஞ்சேரலாதன், இவ்விகழ்ச்சி பொருந்திய வாழ்க்கை வேண்டா என் றெண்ணியே வடக்கிருந்து உயிர் துறந்தான்.

பெருஞ்சேரலாதன் உள்ளப் பண்பைப் புலவர் பாராட்டிக் கூறியுள்ளனர்:

"தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன் ஈங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே."*

---

* புறம். 65

என்று அவன் புண்ணுற்ற வகையினையும், அவனில்லாத நாள் தமக்குப் பாழடைந்து தோன்றுதலையும் கூறினர் ஒருவர். மற்றொருவர், கரிகால் வளவனிடம் சென்று, "கரிகால் வளவ, நீ போரில் வெற்றி பெற்றனை; நின் அம்பு மார்பிற்பட்டுப் புறத்தே சென்றதனாலுண்டான புறப்புண்ணுக்கு நாணிப் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்தான்; நின்னினும் அவன் சிறந்தோனாயினன். நீ பெற்ற வெற்றியினும், புறப்புண்ணல்லாத விழுப்புண்ணாகிய புறப்புண்ணுக்கு நாணிய பெருஞ்சேரலாதன் எண்ணம் சிறந்தது," என்று புகழ்ந்து கூறினர்.

பெருஞ்சேரலாதன் புறப்புண்ணல்லாத புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்த செய்தி கேட்டு, அவன்பால் அன்பு மிக்க புலவர் சிலர் மிக வருந்தி, அவனோடு தாமும் வடக்கிருந்தனர். "பெருஞ்சேரலாதன் புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்தான்," என்று கூறப்பட்ட சொல்லை, "இன்னா இன்னுரை" என்று கூறினர் ஒருவர். "அவன் வடக்கிருந்தான்" என்றதனால், "இன்னாவுரை" என்றும், "புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்தான்" என்றதனால், "இன்னுரை" என்றும் கூறினர்.

இவ்வாறு புலவர்கள் தம்மையாதரித்த அரசர்களிடம் கொண்ட நட்பின் சிறப்புப் புறநானூற்றிற் சிறந்த கவிகளாய் விளங்குகின்றது.

# V. பெருமித வாழ்வு

## 1. பிற்காலப் புலவர் நிலை

பழங்காலத்துப் புலவர்களுள் உழவு, மருத்துவம், வாணிகம், முதலிய தொழில்களில் ஒவ்வொன்றை மேற்கொண்டு வாழ்ந்து வந்தோர் நீங்கலாக, ஏனையோர் வள்ளற் றன்மையுடைய வேந்தர்களிடத்தும் குறுநில மன்னர்களிடத்தும் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர்; அவ்வள்ளல்களுடைய குணச்சிறப்பு, வீரப் பெருமை, ஆட்சி நலம் முதலியவற்றை அழகாகப் புகழ்ந்து பாடிப் பரிசில்பெற்று அப்பொருள்களைக்கொண்டு தாமும் தம் சுற்றத்தாரும் உண்டு உடுத்து, இரவலர்க்கும் கொடுத்து வாழ்ந்து வந்தனர். வள்ளல்களும் தம்மைப் பாடி வரும் புலவர்கட்கு உணவுப் பொருள்கள், நல்ல ஆடைகள், அணிகலன்கள், யானை தேர் குதிரை ஆகிய ஊர்திகள், விளை நிலங்கள், ஊர்கள் ஆகியவற்றை வேண்டிய அளவு கொடுத்துப் போற்றினர். புலவர்கள் பரிசில் பெறுவதில் பிற்காலப் புலவர்கள் போல் அல்லாமற் சீரிய மனநிலை உடையராக இருந்தனர்.

பிற்காலப் புலவர்கள் பரிசில் பெறுதல் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு, பரிசில் கொடுப்பாரைப் பற்றி அளவுகடந்து புகழ்ந்து பாடுவாராயினர்.

பரிசிலாகப் பெறும் பொருள்களின் அளவும் நோக்காமல், ஏதேனும் கிடைத்த அளவு போதும் என்ற எண்ணமுடையராகிவிட்டனர். அதனல் தம் புலமைக்குரிய பெருமையை இழந்து விட்டனர்.

கல்லாத் ஒருவனை யான்கற்றாய் என்றேன்
காடெறியும் அவனை நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனையான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாருந் தோளென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனையான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே.

என்று ஒரு புலவர் பாடிய பாடலை நோக்கினல் பிற்காலத்துப் புலவர் பரிசில் பெற்ற நிலையை நன்கு தெரியலாம். இவ்வாறு நிலைதவறிய புலவர்களைக் குறித்து ஞானச் செல்வர் சிலர் அறிவு கூறித் திருத்தத் தொடங்கினர்.

"வம்மின் புலவீர் நும்மெய் வருந்திக் கைசெய்
துய்ம்மினோ
இம்மன் னுலகத்திற் செல்வரிப் போதில்லை
நோக்கினோம்."

என்றார் நம்மாழ்வார். "புலவர்களே, முற்காலத்துக் கொடையாற் சிறந்து விளங்கிய பாரி முதலிய வள்ளல்களைப் போன்றவர்கள் இக்காலத்தில் ஒருவருமிலர்; அதனல் கவிபாடிப் பரிசில் பெற்று வாழலாம் என்ற எண்ணத்தை அறவே ஒழித்து விடுக; நும் உடல் வருந்த ஏதேனும் தொழில்

செய்து வாழ்க" என்பது இதன் கருத்து. மேலும் நம்மாழ்வார் புலவரை நோக்கி "நும் சீரிய கவிகளைப் பெறுதற்கேற்ற தகுதிகள் இல்லாதார்மேல் அவற்றைப் பாடிப் பாழாக்காதீர்; எவ்வளவு பாடினாலும் பாடி முடிக்க இயலாதவாறு பெருமை மிக்க இறைவன்மீது நும் கவிகளைப் பாடுமின்; நும் கவிகளும் பெருமையுறும்; நீவிரும் பெருமையுறுவீர்; 'மேகம் போலும் கைம்மாறு கருதாத கொடையாளன், வரையாது கொடுக்கும் வள்ளல், மலைபோன்ற திண்டோளையுடையன்' என்று பச்சைப் பசும்பொய் கூறுவதால் யாது பயன்? நீவிர் அப்படி அவர்களைப் பாடி எவ்வளவு பொருள்தான் பரிசிலாகப் பெறுவீர்கள்? அப்பொருள்களைக் கொண்டு நும் வாழ்நாள் முழுதும் வறுமையின்றிக் கழித்தல் இயலுமா? இயலாதே, ஆதலால் இச்செயலை விட்டொழிமின்" என்று கூறியுள்ளனர்.

> "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும்
> கொடுப்பாரிலை"

என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறினர்.

## 2. பரிசில் வாழ்க்கை பொருந்துமாறு

இவற்றால், கொடுப்பதில் விருப்பம் கொள்ளாத செல்வரிடத்தில், புலவர் தம் வறுமையினால் ஏதேனும் சிறிதளவாவது பொருள் பெற மாட்டோமா என்றெண்ணிப் பாடும் வழக்கம் உண்டாகிவிட்டது; அதனைப் பொறாமல் அறிஞர் மேற்கூறியவாறு கண்டிக்கத் தொடங்கினர் என்றறியலாம். இவ்வாறு பிற்காலத்து வள்ளற்றன்மை குறைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தாலும், முற்காலத்திருந்தவர்கள் போல, வீரச் செல்வர்கள் மிகுதியாகப் பிற்காலத்துத் தோன்றாமை ஒரு முக்கிய காரணம் என்று சொல்லலாம். பெரும்பாலும் உள்ளத்தில் வீரம் மிக்கவர்களே "இருக்கும் பொருளைக் கொடுத்து இழந்து விட்டால் மேல் என் செய்வோம்" என்று ஏங்காமல் துணிந்து கொடுப்போராவர் எனக் கொள்க.

புலவர்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டு வாழாமல், அவர்களுட் சிலர் இவ்வாறு பாடிப் பரிசில் பெறுதலையே தொழிலாக ஏன் கொண்டனர் என்பதை நோக்குதல் வேண்டும்.

"எனக்கு ஒரு பொருள் கொடு" என்று பிறர்பால் சென்று கேட்டல் எவ்வகையிலும்

இழிவே யாகும். கடனாக, அன்றி இரவலாக, ஒருவ ரிடத்தில் ஒன்று கேட்பதே நாணத்தை யுண்டாக்கு மெனின், இரந்து கேட்டல் இழிந்த செயல் என்ப திற் சிறிதும் ஐயமின்று. நூல்களை யாராய்ந்து உணர்தலும், உலக இயற்கையை ஆராய்ந்து உணர் தலும், அவற்றைப் பிறர்க்கு உணர்த்தலுமாகப் புலமையிலேயே மனஞ் சென்ற சிலர், வேறு தொழிலை மேற்கொள்ளாமல் பரிசில்பெற்று வாழும் வாழ்க்கையை மேற்கொள்வா ராயினர். பிறரை ஒன்று கொடு என்று கேட்டல் இழிந்தது என்ப தைப் பரிசில் பெற்று வாழ்ந்த அப்புலவரும் உணர்ந்து கூறியுள்ளனர். என்றாலும், புலமையில் ஆழ்ந்த அவர்கள் மனம் வேறொரு தொழிலை மேற் கொள்ள இடந்தர வில்லைபோலும்! வேறொரு தொழிலையும் புலமை ஆராய்ச்சியையும் ஒருங்கே நன்றாக நடத்துதல் எல்லோர்க்கும் எளிய காரியம் ஆகாது. அன்றியும், முற்காலத்து வள்ளல்கள் புலவரை நன்கு மதித்து நிறையப் பரிசில் கொடுத்த தும் புலவர்கள் பரிசில் வாழ்க்கையை மேற்கொள்ள ஒரு காரணமாயிற்று என்றும் கூறலாம்.

எங்ஙனமாயினும் இரத்தல் இழிந்தது என்றால், அதனை விட்டு வேறு தொழிலை மேற்கோடலன்றோ மேன்மையாகும் எனின், இரத்தல் இரப்பவருடைய மேன்மையைக் குறைக்கும் என்றாலும், பொய் கொலை களவு சூது முதலியன போலப் பிறர்க்குத் தீமை விளைவிக்கும் இழிதொழிலன்று. ஆதலால்,

முற்காலத்துப் பேரறிஞர்கள் இரத்தலை முற்றிலும் விலக்கினரில்லை. திருவள்ளுவர் ஈகை, இரவு, இரவச்சம் என்று மூன்றதிகாரங்கள் கூறியுள்ளனர். ஈகை கொடுப்போரைக் குறித்தது. (ஒப்புரவறிதல் என்ற அதிகாரமும் ஈகையைக் குறித்ததே யாகும்.) இரவு, இரவச்சம் என்ற இரண்டு அதிகாரங்களும் இரப்போரைக் குறித்தவையாகும். இரவச்சம் என்ற அதிகாரத்தில் இரத்தற்றொழிலின் இழிவை மிகவிரிவாக எடுத்துக் கூறியுள்ளனர். தன்னிடத்து மிக்க அன்புடையராயினும், தன் உயிர்போற் சிறந்தவராயினும், அவரிடத்திலும் "ஒரு பொருள் கொடு" என்று கேட்டல் இழிவேயாகும். ஒரு பசு நீர் வேட்கையால் வருந்தும்போது "இப்பசுவிற்குச் சிறிது தண்ணீர் தருக" என்று பிறரிடம் இரந்து கேட்டால் அதுவும் இழிவேயாகும் என்று கூறியுள்ளனர். அங்ஙனம் கூறிய திருவள்ளுவர் "இரவு" என்ற அதிகாரத்தில், இன்ன தன்மையுடையாரிடத்தில் இரப்பது நலம் என்று கூறுகின்றார். தம்மிடத்துள்ளதை இல்லை என்று மறைக்காமல், வருகிறவர் குறிப்பறிந்து மகிழ்ச்சியோடு கொடுப்பார் இருந்தால், அவர்பால் இரப்பது நன்மையாகும்; அவரிடத்தில் இரப்பதால் இரப்பவர் பெருமை குறையாது என்று கூறுகின்றார். இங்ஙனம் இரப்பவரைப்பற்றிக் கூறியவர், "ஈகை" என்ற அதிகாரத்தில் "வறியவர்க்கு ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு கொடுத்தல்வேண்டும்" என்பதைப் பலவாறாக வற்புறுத்திக் கூறுகின்றார். இவை எல்லாவற்றையும் சேர்த்து

நோக்கினால், "இரப்பது இழிவுடையதே; வேறு வழியில்லாதபோது இரக்கத் தக்க நற்குணமுள்ளவரிடத்தில் இரப்பது நலம்" என்பதே திருவள்ளுவர் கருத்தாதல் தெளிவாகின்றது.

முற்காலத்துப் பலர் அவ்வப்போது ஆங்காங்குச் சிறந்த வள்ளல்களாக விளங்கினர்; பிற்காலத்தில் மிகமிக அரியராயினர். அங்ஙனம் வள்ளல்கள் அரியராயின காலத்திலும், புலவர் பலர் பாடிப் பரிசில் பெறும் தொழிலை விடாது மேற்கொண்டு, தக்கபடி செல்வம் கிடையாமையால், செல்வமுடைமை ஒன்றே கருதி, உயர்குணங்கள் இல்லாதாரைப் பாடித் தம் நிலை தவறி வருந்துவாராயினர். அந்நிலை உணர்ந்தே நம்மாழ்வார் "வம்மின்........உய்ம்மினோ" என்று அவர்களை நோக்கிக் கூறினர். பிற்காலத்தில், பெருஞ் செல்வர்களாக ஒருவரும் இலரோ எனின், சிலர் இருந்திருப்பாராயினும் அவர்கள் வறியவர்க்கு மனம் மகிழ்ந்து வேண்டியவற்றைக் கொடுக்கும் வள்ளல்களாக இருந்திலர். அவர்களை ஆழ்வார் செல்வர்களாகக் கருதவில்லை. "செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என்று கூறப்பட்டபடி, செல்வம் என்றால் அது எளியோர்க்குப் பயன்படுதல்வேண்டும்; அப்படிப் பயன்படாவிட்டால் அது செல்வமுமாகாது; அதனையுடையவன் செல்வனாக அறிஞர்களால் கருதப்படவுமாட்டான் என்பது கருத்து. அக்கருத்தினாலேயே நம்மாழ்வார் "செல்வரிப்-

போதில்லை " என்று கூறினர். அங்ஙனம் வள்ளல் களாகிய செல்வர் இல்லாமையால், " செல்வரல்லாத செல்வரைப் பாடி வருந்தாமல், ஏதேனும் ஒரு தொழில் செய்து வாழ்மின்; நும் கவிகளை இறைவன் மீது பாடுமின் " என்று அப்புலவரை நோக்கிக் கூறினர் எனக் கொள்க.

# 3. முற்காலப் புலவர் நிலையும் வள்ளல்கள் நிலையும்

முற்கால நிலை அவ்வாறில்லை. வறியவர்க்கு மனமகிழ்ந்து அவர் வேண்டியவற்றைக் கொடுக்கும் வள்ளல் பலர் அவ்வப்போது விளங்கினர். அவர்கள் புலவராற் பாடப்படுதலை மிக்க பெருமையாகக் கருதினர். பாடி வரும் புலவர்க்கு அவர் வேண்டும் பரிசில் கொடுத்தனுப்புவதேயன்றி, எப்போதும் தம்முடன் சில புலவரை வைத்துப் போற்றி, அவர்களுடைய புலமைமணங் கமழும் பேச்சுக்களைக் கேட்டு மகிழ்ந்து வாழ்ந்தனர். பாரி கபிலரை எப்போதும் தன்னுடன் வைத்திருந்தனன். கோப்பெருஞ்சோழன் பொத்தியார் என்னும் புலவரை எப்போதும் தம்முடன் வைத்திருந்தனன். சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்ற அரசன் விளங்கில் என்ற ஊரை வென்று கைப்பற்றினன்; அந்நிலையில் "இப்போது என் வெற்றியைப் பாடக் கபிலர் இல்லாமற் போயினரே" என்று அவர் பாடல் கேட்க நினைந்து வருந்தினன். அவ்வாறு புலவரிடத்து மதிப்புடையராகப் பலர் இருந்தனர்.

அவர்கள் புகழ் கருதிப் பரிசில் கொடுத்தாரல்லர். கொடுத்தால் புண்ணியம் கிடைக்கும்; அப்புண்ணியத்தால் மறுமை இன்பம் கிடைக்கும்

என்று கருதியும் கொடுத்தாரல்லர். சான்றோர் மேற்கொண்ட செயல் என்று கருதிக் கொடுத்தனர். புலவர் மகிழ்ச்சியைக் காண வேண்டிக் கொடுத்தனர். பேகன் என்ற வள்ளலைப்பற்றிக் கூறுமிடத்தில், "பேகன், கொடுத்தால் மறுமையில் நன்மை உண்டு என்றெண்ணிக் கொடுப்பவனல்லன்; பிறர் வறுமையை நோக்கி அவர் வறுமை நீங்கி மகிழ்தல்வேண்டும்; அவர் அவ்வாறு மகிழ்வதை யான் காணவேண்டும் என்று எண்ணிக் கொடுப்பவன்" என்று கூறியுள்ளார் ஓரறிஞர்.

> "ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
> வைத்திழக்கும் வன்க ணவர்"

என்றார் திருவள்ளுவர். தம்முடைய பொருளை அறநெறியிற் செலவுசெய்யாமல் பாதுகாத்து வைத்து இழக்கும் வன்கண்மையுடையார், வறுமையால் வாடுகின்றவர்களுக்கு அப்பொருளைக் கொடுத்து, அவ் வறியவர் வறுமை நீங்கி மனம் மகிழ, அவர் மகிழ்ச்சியைக் காண்பதால் தமக்கு உண்டாகும் இன்பத்தை அறிந்திலர் என்பது இதன் கருத்து. இத் திருக்குறளுக்குச் சிறந்த இலக்கியமாக வாழ்ந்தவர் பேகன் முதலிய வள்ளல்கள்.

அரசர்கள் தம்பால் வரும் புலவர்களுடைய புலமையை ஆராய்ந்து அளந்தறிந்து, அவர்களுடைய புலமைக்குத் தக்கவாறு பரிசில் கொடுப்பதில்லை. அவ்வாறு அளந்துகொடுக்கும் பரிசிலைப் புலவர்

கள் வாங்குவதுமில்லை. அரசர்கள் தம்முடைய தகுதிக்குத் தக்கவாறு கொடுத்து வந்தனர். புலவர், அவ்வாறு கொடுத்தல் வேண்டுமென்று எடுத்துக் கூறியும் பெற்றனர்.

" வல்லினும் வல்லேன் ஆயினும் வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும "

என்றார் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர். குமண வள்ளலை நோக்கி, "யான் சிறந்த கல்வியறிவு உடையேனாயினும், அங்ஙனம் இல்லாதேனாயினும், அதுபற்றி நீ ஆராய்ந்து பாராதே; உன் பெருமையை எண்ணிப் பார்; உன் பெருமை சிறக்குமாறு எனக்குப் பரிசில் தருக" என்பது இதன் கருத்து.

வருகின்ற புலவர் தகுதியை அளந்தறிதல் அரிது. ஒருவாறு அளந்தறிந்து அவர் தகுதி குறைவாக இருப்பது கண்டு, அவர்க்குச் சிறிதளவாகப் பரிசில் கொடுத்தால், அதனை அவர் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியில்லாமற் போவர்; அவர் பெற்ற பரிசிலைப் பார்ப்பவர்கள், இன்ன வள்ளல் கொடுத்த பரிசிலா இது என்று கூறிக் கொடுத்த வள்ளலைக் குறைவாக நினைப்பார்கள்; அதனால் வள்ளல் பெருமைக்குத்தான் இழுக்காகும். நிறையக் கொடுப்பதே பெறுவோர் மகிழ்ச்சிக்கும், பிறர் புகழ்ச்சிக்கும் ஏதுவாகும். அன்றியும், வந்த

புலவர் வறுமை நோக்கி, அவர் வறுமைத் துன்பம் நீங்கி மகிழவேண்டும் என்பதற்காகக் கொடுப்பதல்லது, அவர் தகுதியை ஆராய்ந்து பார்த்துப் பிறரும் அதனை உணருமாறு காட்டுவதற்கு ஓர் அளவு கோலாகப் பரிசில் தருவதில்லை. அதனால், புலவர் பெருஞ்சித்திரனார், "என்னுடைய தகுதியை ஆராய்ந்து பாராமல், உன் பெருமை குன்றாதபடி கொடுப்பாயாக" என்று கூறினார். பெருஞ் சித்திரனார் மிகச் சிறந்த புலவரே; அதற்கு அவருடைய செஞ்சொற் கவிகளே சான்றாக உள்ளன; எனினும், கொடுப்பவர் இவ்வாறு கொடுத்தல் வேண்டும் என்று வற்புறுத்தவே அவ்வாறு கூறுவாராயினர். வேறு புலவரும் இக்கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு, கொடுப்போர் தம் தகுதிக்கேற்ப நிறையக் கொடுத்தல் வேண்டும் என்று கூறினாராயினும், பெறுகின்ற புலவர் மனவியல்பு யாது என்பதையும் அப் பெருஞ்சித்திரனாரே விளங்கக் கூறியுள்ளனர்.

"உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ
இன்புற விடுதி யாயின் சிறிது
குன்றியும் கொள்வல் கூர்வேற் குமண"

என்று கூறியுள்ளனர். கொடுப்பவர், "இவர்க்குக் கொடுத்தல் வேண்டுமே; கொடாவிட்டால் இவர் இகழ்ந்து பேசுவாரே; அதனைப் பிறர் அறிந்தால்

நம்மை நன்கு மதியாமல் இகழ்வார்களே;" என்றெண்ணி உள்ளத்தில் வெறுப்பொடு கொடுத்தல் கூடாது. உள்ளத்தில் மகிழ்ச்சியோடு கொடுத்தால், கொடுப்பது சிறிதளவு பொருளாயினும் யானும் மகிழ்ச்சியோடு பெற்றுச் செல்வேன். அங்ஙனம் அன்றி, வெறுப்போடு கொடுத்தாலும், புறக்கணிப்போடு பல நாள் காக்க வைத்துக் கொடுத்தாலும், கொடுக்கப்படும் பரிசில் மிகுந்த பொருள்களாக இருப்பினும் அதனைப் பெறமாட்டேன்" என்பது இதன் கருத்து. மேற்கூறியவற்றால், கொடுப்பவர் எவ்வாறு எண்ணங் கொண்டு கொடுத்தல் வேண்டும்; பெறுபவர் எவ்வாறு எண்ணிப் பெறுதல் வேண்டும் என்பவற்றை நன்கு விளக்கினார் பெருஞ்சித்திரனார்.

கொடுப்பார் மகிழ்ச்சியோடு புறக்கணிப்பின்றிக் கொடாராயின் அவர்களைப் புலவர் விரும்புவதுமில்லை; அவர்பாற் செல்வதுமில்லை. "பெருஞ்செல்வம் படைத்த சேரன், பாண்டியன், சோழன் ஆகிய முடியுடை வேந்தராயினும், நன்மதிப்பின்றிக் கொடுப்பாராயின் அவர் கொடையை விரும்போம்; அவரையும் மதியோம்; எம்மை நன்கு மதித்துப் போற்றுவார் சிற்றூரை ஆளும் சிற்றரசராக இருப்பினும், அவரையே மதிப்போம்; அவர் கொடுக்கும் சிறு பரிசிலையே விரும்புவோம்; யாம் வறுமையால் எவ்வளவு துன்புற்றாலும், அறிவில்லாதவருடைய செல்வத்தை நினையோம்" என்றும், "கடற்கரைக்

கண்ணே போய்க் கொண்டிருப்பவர் நீர் வேட்கை உண்டானல், அக்கடல்நீர் மிகப் பெரிதாக அண்மையிலிருப்பினும் அதனை யுண்ணார்; சிறிதள வாயினும் உண்ணுதற்கினிய நன்னீர் யாண்டுள தென்று ஆண்டுள்ளோரை வினவுவர் மக்கள்; அது போல, மகிழ்ந்து கொடுக்கும் குணமில்லாத பேரரசர் அண்மையிலிருப்பினும் அவரை விரும்பாமல், மகிழ்ந்து கொடுக்கும் வள்ளல் யாண்டுளர் என்று தேடிச் செல்வார் பரிசிலர்'' என்றும் புலவர் தம் இயல்பைத் தாமே கூறியுள்ளனர். இவற்றால், புலவர் தம் பெருமைக்கு இழுக்கு வாராவண்ணம் பரிசில் பெற்று வாழ்ந்தனர் என்பது தெளிவாகும்.

முற்காலத்திருந்த பேரரசர் சிற்றரசர் எல்லோரும் எப்போதும் புலவர்களை நன்குமதித்து மகிழ்ந்தீயும் வள்ளல்களாக இருந்தனர் என்றெண்ணல் இயலாது. அவ்வப்போது ஆங்காங்குச் சிலர் சிலரே சிறந்த வள்ளல்களாக விளங்கினர். ஈகை அரிய குணமாதலால், எப்போதும் சிறந்த ஈகையாளர் சிலராகவும், அங்ஙனம் அல்லாதார் பலராகவும் இருத்தலே உலக இயல்பாகும். ஆயினும், பிற்காலத்தைவிட முற்காலத்தில் சிறந்த ஈகையாளர் அதிகமாகவும், அல்லாதார் குறைவாகவும் இருந்தனர். இந்நிலைமையே நூல்களிற் காணப்படுகின்றது.

## 4. பரிசில் மறுத்தல் முதலியன

முற்காலப் புலவர் தம் நிலைக்கு இழுக்கு வாராமல் பரிசில் பெற்று வாழவே விரும்பினராதலின், அவர்கள் பரிசில்பெற எண்ணி ஓரரசனிடத்திற் சென்றால், அவன் அவர்களை நன்குமதித்து மகிழ்ந்து கொடுத்திலனாயின், அவன் புறக்கணிப்போடு கொடுக்கும் பொருளைப் பெறாமல் அவனையும் வெறுத்துப் பேசிச் செல்வாராயினர். அதிகமான் நெடுமானஞ்சியிடம் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் சென்றனர். அப்போது அம்மன்னன் புலவரைக் கண்டு அளவளாவிப் பரிசில் தாராமல், யாரோ ஒருவனிடம் பரிசில் தந்து "இதனைப் புலவரிடம் கொடுத்தனுப்புக" என்று அனுப்பினன். ஆனால், புலவர் பெருஞ்சித்திரனார் மனம் வெறுத்தனர்; அப்பரிசிலைப் பெற்றுக்கொள்ள மறுத்தனர். "நன்கு மதித்து மகிழ்ந்து கொடுத்தால் சிறிதளவாயினும் கொள்வேன்; இவ்வாறு, என்னைக் காணாமல் கொடுத்தனுப்பும் பொருளைப் பெற்றுச் செல்ல யான் ஓர் வாணிகப் பரிசிலேன் அல்லேன்" என்று கூறிச் சென்றனர்.

தம் பொருளுக்கு ஏற்ற விலை கிடைக்கின்றதா என்பதே வாணிகம் செய்வோரின் முக்கிய கருத்தாகும். வாங்குவோர் உயர்ந்தவராக இருத்தல் வேண்டும், அவர் மகிழ்ச்சியோடு தம் கையால் விலை

தருதல் வேண்டும் என்பன போன்ற எண்ணங்களுடையவர் ஆகார் அவர். ஒருவர் தம் ஏவலாளனை அனுப்பினாலும், அவனிடம் விலையைப் பெற்றுக் கொண்டு தம் பொருளைக் கொடுக்க அவர் தயங்க மாட்டார். புலவர் அத்தகையரல்லர். தமது அரிய புலமையை விலைக்கு விற்க அவர் சென்றாரல்லர். தம் தகுதிக்குக் குறை வாராமல், அரசன் மகிழ்ந்து கொடுக்கும் பொருளால் தம் வறுமைத் துன்பத்தைப் போக்கிக்கொள்ளவே சென்றார். சென்றவிடத்தில் அரசன் புலவரை மதியாமல், தாம் வாங்கிய பொருளுக்கு வீட்டினுள் இருந்தபடி ஏவலாளனிடம் விலை கொடுத்தனுப்புவார்போல, அனுப்பிய பரிசிலைப் பெற்றுக்கொள்ள விரும்பாமல், வெறுத்துரைத்துச் செல்வாராயினர்.

ஔவையார் ஒரு முறை அதிகமான் நெடுமானஞ்சியிடம் சென்று, அவன் பரிசில் கொடுக்கச் சிறிது காலந்தாழ்த்தமையால், அவன் தன்னை நன்கு மதித்திலன் என்று கருதி வெறுத்துரைத்துச் சென்றனர். இவ்வாறு தான் கொடுக்கும் முறையைப் புலவர் சிலர் வெறுத்துரைத்தமையால், அவன் பின்னர்த் தன் நிலை மாறிச் சிறந்த வள்ளலாக விளங்கினன்.

புலவர் பெருஞ்சித்திரனார் வெளிமான் என்ற அரசனிடம் பரிசில் விரும்பிச் சென்றனர். அப்போது அவன் நோயுற்றிருந்தான். அதனால், தன் தம்பியை அழைத்துப் புலவர்க்குப் பரிசில் கொடுக்

குமாறு கூறினன். அவன் கொடைக்குணமும் புலவர் மதிப்பும் அறியாதவன். அதனால், அவன் புலவர்க்கு மிகச் சிறிய அளவாகப் பரிசில் கொடுத்தனன். அது கண்ட புலவர் வெறுத்து அப்பரிசிலைப் பெருமலும், அரசன் வெளிமான் நோயுற்றிருந்தமையால் தம் வெறுப்பைப் புலப்படுத்தி ஒன்றும் சொல்லாமலும் சென்றனர். சென்றவர், குமண வள்ளலிடம் சென்று, யானையும் வேறு பல பொருள்களும் பரிசிலாகப் பெற்றனர். அவற்றைக் கொண்டு திரும்பி வரும்போது வெளிமான் இறந்து விட்டனன். அவன் தம்பிமட்டும் இருந்தனன். புலவர் அவனை அறிவுறுத்தல் வேண்டும் என்றெண்ணினர். எண்ணியவர் தாம் பெற்ற யானை முதலிய பரிசில்களோடு வெளிமான் நகரத்திற்குச் சென்றனர். அந்நகரத்தின் காவல்மரத்தில் தம் பரிசில் யானையைக் கட்டிவிட்டு உள்ளே சென்று, வெளிமான் தம்பியைக் கண்டு சில சொற் கூறினர். "இரப்போர்க்குக் கொடுக்கும் மன்னன் நீயல்லை; இரப்போர்க்குத் தக்கவாறு கொடுக்கும் வள்ளல்கள் இல்லாமலும் இல்லை; தம் பெருமைக்கு இழுக்கு வாராமல், பரிசில் பெற்று வாழும் புலவர் உளர் என்பதை எம்மைக் கொண்டு அறிந்துகொள்க; எம் போன்ற புலவரை நன்குமதித்து நிறையக் கொடுக்கும் வள்ளல்கள் உளர் என்பதை எமக்குக் கொடுத்த குமண வள்ளலைக் கொண்டு உணர்ந்துகொள்க. யாம் பெற்ற பரிசிலாகிய யானையை நின் காவல்மரத்திற் கட்டிவந்துள்ளேன்; காண்க" என்று கூறி

விட்டு, ஆண்டுநின்றும் புறப்பட்டுத் தம் யானை யோடும் மற்றைய பரிசில்களோடும் தம் ஊர்செல்வா ராயினர். இனியாவது அவன் கொடையாளனுகிப் புலவர்க்கும் பிறர்க்கும் ஆதரவாகப் புகழோடு வாழ் வானுக என்று எண்ணியே பெருஞ்சித்திரனர் அவ் வாறு செய்தனர் எனக் கொள்க. இவ்வாறுன நிகழ்ச்சிகள் இன்னும் பல உள்ளன.

மேலும், புலவர்கள் மன்னர்களிடத்தில் பரிசில் வேண்டிச் சென்றபோது, அம்மன்னர் மகிழ்தல் வேண்டும் என்ற ஒன்றே கருதி, அவரிடம் இல்லாத குணங்களையோ, அவர் செய்யாத பெருஞ் செயல் களையோ கூறிப் புகழ்வதில்லை. அவர்களிடம் உள்ள குணங்கள் செயல்களைச் சிறிது உயர்வுபடுத் திப் புனைந்துரையாகச் சுவைநயம் தோன்றப் பாடு வார்கள். அவ்வாறு பொய்கூறுமல் உண்மையே கூறியதனுல் அவர்கள் "செந்நாப் புலவர்" என்று கூறப்பட்டனர். வன்பரணர் என்னும் புலவர்,

"பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்று எம் சிறுசெந் நாவே"

என்றுர்.

பெருமையில்லாத அரசர்களைப் பரிசில் பெறுவதற் காகப் புகழ்தல் வேண்டும் என்பது ஒன்றே கருதி, அவர் செய்யாத அரிய செயல்களைச் செய்தார்களா கப் பொய் கூறிப் புகழமாட்டோம் என்பது இதன் கருத்து. எம்முடைய நா பொய்கூறுதலை அறி

யாது என்பதை விளக்கச் "செந்நா" என்றார்; அவ்வாறு தம்மைத் தாம் கூறுவது தற்புகழ்ச்சிக்காக அன்று; உண்மையை வெளியிடவே கூறுவது என்பதை விளக்கச் "சிறு நா" என்றார்; இவ்விரண்டையும் சேர்த்துச் செய்யுளில் "சிறு செந்நா" என்றார்.

புலவர் தாம் பாடிப் பெறும் பரிசிற் பொருள்களைத் தாமே வைத்து உண்டுவாழ விரும்புவதில்லை. வறுமையின் துயரத்தைத் தாம் அறிந்தவராதலின், "வறுமையுற்ற பிறரும் இவ்வாறே வாடுவரே" என்று பிறர் துன்பங்களைத் தாம் நன்குணர்வர். அவ்வாறு உணர்வதால், தாம் பெற்ற பரிசிற் பொருள்களை வறுமையுற்ற தம் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் கொடுத்து, தாமும் நன்கு உண்டு வாழ்வர். பரிசிற்பொருள் தீர்ந்துவிட்டால் மீண்டும் வள்ளல்களை நாடிச் செல்வர். காடும் மலையுங் கடந்து செல்வதால் உண்டாகும் துன்பங்களைக் கருதுவதில்லை.

அவ்வாறு, முற்காலப் புலவர்களில் தாம் தாம் ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தோர் நீங்கலாக, ஏனையோர் தம் புலமைக்கும் பெருமைக்கும் இழுக்கு வாராவண்ணம், சிறந்த குணமும் செயலும் உடைய வள்ளல்களைப் பாடிப் பரிசில் பெற்றுப் பெருமித வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

THE MADURA TAMIL SANGAM